தங்கத் தமிழ் வினாவிடை

(ஒன்பதாம் வகுப்பிற்குரியது)

(ஆ)

★

"தங்கத் தமிழ் வினாவிடையைத் தவறாமல் கற்றிடுவோர்
மங்காத மதிப்பெண்ணை மனமகிழப் பெற்றிடுவர்"

★

ஆசிரியர் :

புலவர் அ. இராமலிங்கம்

...னிலைத் தமிழாசிரியர்

... ஆண்கள் உயர்நிலைப்பள்ளி

...பாக்கம், சென்னை-34

தங்கத் தமிழ் வினாவிடை

(ஒன்பதாம் வகுப்பிற்குரியது)

(ஆ)

★

ஆசிரியர் :

புலவர் அ. இராமலிங்கம்

முதனிலைத் தமிழாசிரியர்

மாநகராட்சி ஆண்கள் உயர்நிலைப்பள்ளி

நுங்கம்பாக்கம், சென்னை-34

★

நக்கீரன் பதிப்பகம்

15-A, பெருமாள் கோயில் தெரு,

வடபழநி, சென்னை-26.

[விலை ரூ. 1-25

பரிந்துரை . . .

மாணாக்கர் செவி வாயாக நெஞ்சு களனாக ஆசானுரைத்தது அமைவறக் கொளினும் காற்பங்கே ஏற்க இயலும். இயன்றதைக்கொண்டு ஏற்றதைத் தம் வயப் படுத்தித் தேர்வுக்குத் தங்களை ஆயத்தஞ் செய்து கொள்ளத்தக்க முறையில் புலவர் திரு. அ. இராமலிங்கனார் தெள்ளிய-இனிய-எளிய நடையில் நூற் குறிப்பு, ஆசிரியர் குறிப்பு, இலக்கணக் குறிப்பு ஆகிய இவை உள்ளிட்ட வினாவிடைகள் ஆக்கி உள்ளார். இவை, மாணவர் சமுதாயத்துக்குப் பெரிதும் பயன்படுமென யான் நம்புகிறேன். 'தங்கத் தமிழ் வினா விடை' நூல் மாணாக்கருக்கு உறுதுணையாக இருக்கும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

இங்ஙனம் :

நு. கு. துரைவேலன்,
தலைமை ஆசிரியர்,
மாநகராட்சி ஆண்கள் உயர்நிலைப்பள்ளி,
நுங்கம்பாக்கம், சென்னை-34.

பதிப்புரை . . .

மாணவர் உலகிற்குத் தொண்டு செய்யும் நந்நோக்கோடு செய்யுள், உரைநடைப் பகுதிகட்கான வினு விடைகளையும், நூல் ஆசிரியர் குறிப்புகளையும், இன்றியமையாத இலக்கணக் குறிப்புகளையும், மாணவர் நலங்கருதி மனப்பாடச் செய்யுட்களையும் தாங்கி இந்நூல் வெளிவருகிறது.

இந்நூலாசிரியர் புலவர் அ. இராமலிங்கம் அவர்களால் எழுதப் பெற்ற பத்தாம் வகுப்பிற்குரிய தங்கத் 'தமிழ் வினு விடை' என்ற நூலை ஆசிரியப் பெருமக்களும், மாணவ மணிகளும் வரவேற்றுப் பாராட்டியுள்ளனர். அவர்களது ஊக்கத்தாலேயே இந்நூலையும் வெளியிடத் துணிந்தோம். இந் நூலுக்கும் அனைவரும் ஆதரவு தந்துதவுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

இந்நூலை சிறப்புற எழுதியுதவிய ஆசிரியர் அவர்கட்கும், விரைவில் அச்சிட்டு உதவிய அச்சகத்தாருக்கும், சிறப்பாக செயலாளர் திரு. க. விநாயகமூர்த்தி அவர்கட்கும், பரிந்துரை வழங்கிய தலைமை ஆசிரியர் அவர்கட்கும், இதயங் கனிந்த நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

நக்கீரன் பதிப்பகத்தார்.

உள்ளுறை

I. வாழ்த்து

(அ) கடவுள் வாழ்த்து

1. நூற்குறிப்பும், ஆசிரியர் வரலாறும் தருக.

திரு+அருள்+பா.

இறைவனது திருவருளை வேண்டும் பாக்களாலமைந்த நூல் என்பது இதன் பொருள். இதன் ஆசிரியர் இராமலிங்க அடிகள். பெற்ருேர் இராமையாப் பிள்ளை, சின்னம்மை யார். பிறப்பிடம் தென் ஆற்காடு மாவட்டத்தில் சிதம் பரத்திற்கு அண்மையிலுள்ள மருதூர். காலம் 1821—1871 சமரச சன்மார்க்கத்தைப் பரப்பியவர். மனுமுறை கண்ட வாசகம், சீவகாருண்ய ஒழுக்கம் என்பன இவரது பிற நூல்களாம். வடலூரில் சத்திய ஞான சன்மார்க்க சபை யினை நிறுவியவர்.

2. இராமலிங்க அடிகள் விழைந்தன யாவை ?

சிறிதளவும் வேறுபாடு கருதாமல் எல்லாவுயிர்களையும் தம் உயிர் போலக் கருதி உள்ளத்தில் ஒத்த உரிமை யுடையவராகி மகிழ்கின்றவரது உள்ளம்தான் ஞான வடிவமான சிவபெருமான் நடனமிடுகின்ற இடம் எனவும், அத்தகைய மேலோரது திருவடிகட்குத் தொண்டு செய் திடத் தாம் விரும்புவதாகவும் இராமலிங்க அடிகள் குறிப்பிடுகிருர்.

3. சிவபெருமான் நடனமிடுமிடமாக இராமலிங்க அடிகள் குறிப்பது யாது ?

சிறிதளவும் வேற்றுமையின்றி அனைத்துயிர்களையும் தம் உயிர்போலக் கருதி உள்ளத்தில் ஒத்த உரிமை யுடையவர்களாகக் கருதி மகிழ்கின்ற ஞானியரது

உள்ளமே சிவபெருமான் நடனமிடுமிடமென இராமலிங்க அடிகள் குறிக்கிருர்.

இலக்கணக் குறிப்பு :

ஒத்த+உரிமை=ஒத்துரிமை – அகரம் தொக்கது விகாரம்.

உவக்கின்ருர்—வினையாலணையும் பெயர்.

'ஒ' அசை நிலை.

(ஆ) தமிழ்த்தாய் வாழ்த்து

1. ஆசிரியர் குறிப்பு வரைக.

ஆசிரியர் கந்தசாமிப் பிள்ளை தஞ்சை மாவட்டத்தில் பள்ளி அகரம் எனும் ஊரின்கண் நீலமேகம் பிள்ளைக்கு அருந்தவப் புதல்வராய்த் தோன்றியவர். சிறந்த தமிழறிஞர்.

2. தமிழ்மொழியின் பழமையை விளக்குக.

உலகின்கண் முதன்முதல் தோன்றிய மக்கள் தம் உள்ளக் கருத்துகளைச் சைகைகளின் மூலம் தெரிவித்துக் கொண்ட காலம் கழிய முதன்முதலாக நாவை அசைத்துப் பேசுதற்குக் காரணமாய் அமைந்தது தமிழ் என்று ஆசிரியர் குறிப்பதன்மூலம் தமிழ்தான் உலகத்தில் முதலாவதாகத் தோன்றிய பழமையான மொழி என்ற கருத்தைப் பெறவைக்கிருர்.

3. தமிழ்த்தாயை வணங்குதற்குரிய காரணமாக திரு. கந்தசாமிப் பிள்ளை குறிப்பது யாது?

உலகின்கண் முதன்முதலாகத் தோன்றிய மக்கள் தம் உள்ளக் கருத்துகளைச் சைகைகள்மூலம் பரிமாறிக் கொண்ட நிலை கழிய மக்கள் முதன்முதலாக நாவசைத்துப் பேச வகை செய்த மொழி தமிழாதலின் அதன் திருவடிகளைத் தலைமீது கொண்டு வணங்க வேண்டுமென திரு. கந்தசாமிப் பிள்ளை குறிப்பிடுகிருர்.

இலக்கணக் குறிப்பு :

தொன்மக்கள் (தொன்மை + மக்கள்)—பண்புத் தொகை.

உரை காலம்—வினைத் தொகை.

பழந்தமிழ்—பண்புத் தொகை.

பணிகுவாம்—தன்மைப்பன்மை வினைமுற்று.

தலைகொண்டு—ஏழாம் வேற்றுமைத்தொகை.

தாள்தலை—இரண்டாம் வேற்றுமைத்தொகை.

(இ) தமிழ்நாடு

1. ஆசிரியர் குறிப்பு வரைக.

இதன் ஆசிரியர் திரு. வி. கலியாணசுந்தரனார் பெற்றோர் விருத்தாசல முதலியார், சின்னம்மாள் இவர் சிறந்த பேச்சாளர்; நல்ல எழுத்தாளர்; தொழிலாளர் நலனுக்காக இடையருது உழைத்தவர். பெண்ணின் பெருமை, முருகன் அல்லது அழகு போன்ற பல அருந் தமிழ் உரைநடை நூல்களை எழுதித் தமிழ் உரை நடையில் புத்துணர்ச்சி யூட்டியவர். தனித் தமிழ் நடை இவரது சிறப்புக்கு ஒரு காரணம்.

2. திரு. வி. க. தெய்வத் திருநாட்டின் பண்பு களாகக் குறித்துள்ளவை யாவை ?

'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற பொதுமை உணர்வும், எல்லாவுயிர்களிடத்தும் அன்பு காட்டுகின்ற பண்பும், 'ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்' என்ற ஒருமைப்பாட்டு உணர்வும், பிறப்பினுல் அனைவரும் சமம் என்ற உணர்வும், கடவுள், அன்பு, அறம், இன்பம், நட்பு என்ற உயர் பண்புகளும், பிறருக்கு அடிபணியாத தன் மான உணர்வும், தீமையற்ற தமிழை வளர்க்க வேண்டு மென்ற உணர்வும், அருள்நோக்கோடு விருந்து போற்றும் தன்மையும் ஒருங்கே கொண்ட நாடு தமிழ்நாடு என்று திரு. வி. க. குறிப்பிடுகிருர்.

இலக்கணக் குறிப்பு :

செய்க—வியங்கோள் வினைமுற்று.

ஓது குலம்—வினைத்தொகை.

இல்லா மொழி — ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்.

செந்தண்மை (செம்மை + தண்மை) — பண்புத் தொகை.

II. அறவுரை

(அ) திருக்குறள்

1. நூற்குறிப்பும், ஆசிரியர் குறிப்பும் வரைக.

நூற்குறிப்பு : திரு + குறள் = திருக்குறள். மேன்மை பொருந்திய குறள் வெண்பாக்களால் ஆகிய நூல் என்பது பொருள். திரு என்பது அடைமொழி. குறள் என்பது இரண்டடி வெண்பாவைக் குறிக்கும். அறநூல்களுள் தலை சிறந்தது திருக்குறள். பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று.

ஆசிரியர் குறிப்பு : ஆசிரியர்—திருவள்ளுவர் ; ஊர்—மயிலை எனவும் மதுரை எனவும் கூறுவர். பெற்றோர் ஆதிபகவன். மனைவி வாசுகி அம்மையார் ; காலம் இரண்டாயிரம் ஆண்டுகட்கு முற்பட்டது என்பர்.

2. யாருக்குப் பிறவித்துன்பங்கள் இல்லை ?

விருப்பு வெறுப்பு அற்றவனாகிய இறைவனது திருவடிகளை இடையறாது நினைப்பவர்க்குப் பிறவித் துன்பங்கள் இல்லை.

3. வானின் சிறப்பாக வள்ளுவர் கூறுவது யாது ?

மழை பெய்ய வில்லையானால் உலகில் புல்லின் நுனியைக் காண்பதும் அரிது என்று வள்ளுவர் வான் சிறப்பில் குறிப்பிடுகிறார்.

4. ‘அறன் வலியுறுத்தல்’ பற்றி வள்ளுவர் வகுத்துரைப்பன யாவை?

சிறப்பையும், செல்வத்தையும் தருகின்ற அறத்தைக் காட்டிலும் மனிதனுக்கு உறுதிப்பொருள் வேறில்லை என்றும், இயன்ற விதங்களில் எல்லாம் அறச் செயல்களைச் செய்யக் கூடிய இடங்களிலெல்லாம் செய்ய வேண்டும் என்றும் வள்ளுவர் ‘அறன் வலியுறுத்தல்’ பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.

5. அன்பு எவ்வெவற்றிற்குத் துணையாகும்? (அல்லது) ‘அன்புடைமை’ பற்றி வள்ளுவர் கூறுவது யாது?

அன்பு அறம் செய்வதற்கும், பாவச் செயல்களினின்றும் ஒருவனைத் தடுப்பதற்கும் துணையாக நிற்கும்.

6. ‘விருந்தோம்பல்’ குறித்து வள்ளுவர் கூறுவது யாது? (அல்லது) இல்வாழ்வது எதன் பொருட்டு?

இல்லற நெறியைப் பின்பற்றி பொருளைப் பாதுகாத்து வாழ்கின்ற வாழ்க்கை விருந்தினரை ஆதரித்து உதவி செய்வதற்கே என்று வள்ளுவர் விருந்தோம்பல் குறித்துக் குறிப்பிடுகின்றார்.

7. ‘இனியவை கூறல்’ குறித்து வள்ளுவர் வகுத்துரைப்பன யாவை?

அன்பு கலந்ததாகவும், குற்றமற்றதாகவும் இருக்கும் மெய்ப்பொருள் கண்ட ஞானிகளது சொல்லே இன்சொல் என்றும், நல்ல பலனை நாடி இனிமையாகப் பிறரிடம் பேசுவதால் பாவம் குறைந்து புண்ணியம் பெருகும் என்றும் ‘இனியவை கூறல்’ என்ற அதிகாரத்துள் வள்ளுவர் கூறுகிறார்.

8. இன்சொல்லின் இலக்கணம் யாது?

அன்பு கலந்த குற்றமற்ற சொற்களே இனிய சொற்களாகும் என இன்சொல்லின் இலக்கணத்தை வள்ளுவர் இயம்புகிறார்.

9. செம்பொருள் கண்டார் வாய்ச்சொல் எத் தன்மையானவையாயிருக்கும்?

மெய்ப்பொருள் உணர்ந்த ஞானிகளது சொற்கள் அன்பு கலந்த குற்றமற்ற இனிய சொற்களாக இருக்கும்.

10. 'செய்நன்றியறிதல்' குறித்து வள்ளுவர் கூறுவது யாது? (அல்லது) எதற்கு வையகமும் வானகமும் ஆற்றல் அரிது?

தன்னால் எவ்வித உதவியும் பெறுதவொருவன் தனக்குச் செய்த உதவிக்கு இவ்வுலகையும் வானுலகையும் கைமாருகக் கொடுத்தாலும் ஈடாகாது. ஆதலால் அத்தகைய நன்றியை நாம் என்றென்றும் மறத்தலாகாது.

11. 'நடுவு நிலைமை' குறித்து வள்ளுவர் கூறுவது யாது?

ஒருவன் நடுவு நிலைமையினின்றும் மாறுபட்டு அறமல்லாத செயலைச் செய்வானுயின் தான் அழிய நேரும் என்பதனை அறியவேண்டும் என வள்ளுவர் 'நடுவு நிலைமை' அதிகாரத்துட் குறிப்பிடுகிருர்.

12. 'அடக்கமுடைமை' குறித்து வள்ளுவர் கூறுவன யாவை?

அடக்கத்தைக்காட்டிலும் உறுதிப் பொருள் மனிதனுக்கு வேறு இல்லையாதலால் அடக்கத்தைச் சிறந்த பொருளாகக் கருதிக் காக்க வேண்டுமென்றும், பணிவுடைமை அனைவர்க்கும் நன்றேயென்றுலும் செல்வர்கட்கு அப்பணிவுடைமை மற்றெரு செல்வம் போல் அமைந்து சிறப்பினைத் தரும் என்றும் திருவள்ளுவர் 'அடக்கமுடைமை' என்ற அதிகாரத்துட் குறிப்பிடுகின்ருர்.

13. ‘செல்வர்க்கே செல்வம் தகைத்து’—எது? எவ்வாறு?

அடக்கமுடைமை செல்வர்க்கு மற்ருெரு செல்வம் போன்று சிறப்பினை நல்குவதாகும். ஏனெனில் வறியவன் பணிதல் அவசியமாகையால் அவனது பணிவு சிறப்பில்லை எனக் கருதி, பணிய வேண்டிய அவசியமில்லாத செல்வன் பணிவதே சிறப்புடையது எனக் குறிப்பிடுகிருர்.

14. உலகத்தார் யாரைப் பொன்போல் போற்றுவர்? (அல்லது) ‘பொறையுடைமை’ குறித்து வள்ளுவர் கூறுவது யாது?

தனக்குத் தீமை செய்தவரைப் பழிக்குப் பழி வாங்குவோரை ஒரு பொருளாகக் கருதாது உலக மக்கள் தனக்குத் தீமை செய்தாரைப் பொறுத்துக் கொள்கின்றவரைப் பொன்போலக் கருதிப் போற்றுவர் என்று ‘பொறையுடைமை’ அதிகாரத்தில் வள்ளுவர் குறிப்பிடுகிருர்.

15. செல்வத்திற்குச் சுருங்காமையாவது யாது? (அல்லது) ‘வெஃகாமை’ குறித்து வள்ளுவர் குறிப்பது யாது?

பிறன்கைப் பொருளைக் கவர்ந்து கொள்ளவேண்டுமென்று விரும்பாதிருப்பதே தனது செல்வம் சுருங்காமலிருப்பதற்குரிய வழியாகும் என்று வள்ளுவர் ‘வெஃகாமை’ எனும் அதிகாரத்துட் கூறுகிருர்.

16. ஒருவன் தன்னை விற்ருவது கொளத்தக்கது எது? (அல்லது) ‘ஒப்புரவறிதல்’ எனும் அதிகாரத்தில் வள்ளுவர் கூறுவது யாது?

உலக நடையறிந்து பிறர்க்கு உதவுவதால் ஒருவனுக்கு அழிவு நேரும் என்று யாராவது தவருகக் கூறினுலும் எல்லாப் பொருளும் அழிந்த நிலையிலும் இறுதியாகத் தன்னை விற்ருவது மேற்கொள்ளத்தக்க

சிறப்பினையுடையது 'ஒப்புரவு' என்று 'ஒப்புரவறிதல்' அதிகாரத்தில் வள்ளுவர் குறிப்பிடுகின்றார்.

17. 'ஈகை' பற்றி வள்ளுவர் வகுத்துரைப்பன யாவை?

வறியார்க்கு ஈவதே ஈகையென்றும், அஃதன்றி மேற் கொள்ளப்படும் ஈகை ஆரவாரத்திற்காகச் செய்யப் படுவதேயென்றும், பிறர் தன்னிடம் வந்து யாசிக்கும் முன்பே அவர்க்குப் பொருளை வழங்குதலாகிய ஈகைத் தன்மை நல்ல குலத்திற் பிறந்தவனிடத்தே அமையும் பண்பு என்றும், பொருளற்றவரது மிகுதியான பசியைப் போக்குவதே மறுமைக்குதவும் வகையில் பொருளைச் சேர்த்து வைப்பதற்குரிய சிறந்த இடம் என்றும் வள்ளுவர் 'ஈகை' எனும் அதிகாரத்துள் வகுத்துரைக் கின்றார்.

18. பொருளைப் பாதுகாத்து வைப்பதற்குரிய வழி யாக வள்ளுவர் கூறுவது யாது?

பொருளற்றவரது பெரும் பசியைத் தீர்த்தலே பொருளை மறுமைக்கும் உதவும் வண்ணம் பாதுகாத்து வைப்பதற்குரிய வழியாகும் என்று வள்ளுவர் குறிப் பிடுகிறார்.

19. 'புகழ்' குறித்து வள்ளுவர் கூறுவனவற்றைத் தொகுத்து எழுதுக.

தனக்கு இணையில்லாததாக ஓங்கி நிற்கும் புகழ் தவிர இவ்வுலகத்தில் அழியாது நிற்பது வேறொன்றும் இல்லை என்றும், உலகத்தில் எப்போதும் நிலைத்து நிற்ப தாகிய புகழைப் பெறுது இறப்பாராயின் ஒருவர்க்குப் பழி யாகும் என்றும் புகழ் குறித்து வள்ளுவர் கூறுகிறார்.

20. 'கூடாவொழுக்கம்' குறித்து வள்ளுவர் கூறுவது யாது?

உலகத்தார் தவத்திற்குப் பொருந்ாது என்று விலக்கியவற்றை நீக்குவது தவிர வெளிவேடங்களாகிய தலையை மொட்டையடித்துக் கொள்வதும், சடை

வளர்த்துக்கொள்ளுதலும் வேண்டா என்று 'கூடா வொழுக்கம்' என்னும் அதிகாரத்துள் வள்ளுவர் கூறுகிறார்.

21. வாய்மையின் இலக்கணம் யாது?

பிறவுயிர்கட்கு எவ்விதத் தீங்கும் விளைவிக்காத சொற்களைக் கூறுதலே வாய்மையின் இலக்கணமாகும்.

22. ஒருவன் தன்னைத் தான் காக்க யாது செய்ய வேண்டும்?

தான் கொண்ட சினம் தன்னையே அழிக்குமாதலின் தன்னை அழிவினின்றும் காத்துக்கொள்ள விரும்புகின்ற ஒருவன் தன் மனத்தின்கண் சினம் தோன்றுதவாறு காத்துக்கொள்ளவேண்டும்.

23. யாரை உலகம் உயர்வாகக் கூறும்? ஏன்?

தன்னைக் காண விரும்பி வருபவர்க்கு எளிதில் காண வாய்ப்பளிப்பவனுகி, யாரிடத்தும் கடும் சொற் கூருத மன்னனை உலக மக்கள் உயர்வாகக் கூறுவர். முறையிட வருபவர்கட்குக் காண வாய்ப்பளிப்பதும், அனைவரிடத்தும் இனிய சொற் கூறுவதும் சிறந்த மன்னனிடம் காணப்பட வேண்டிய தகுதிகள் ஆகும். ஆகவே, அத்தகைய மன்னனை மக்கள் உயர்வாகக் கூறுகிறார்கள்.

24. மனிதர்க்குக் கண்கள் போன்றவை எவை?

எண்ணும் எழுத்துமாகிய கல்வி மக்கட்குக் கண்கள் போன்றது என்று திருவள்ளுவர் 'கல்வி' என்னும் அதிகாரத்திற் கூறுகிறார்.

25. கற்ருர்க்கும் கல்லாதவர்க்குமிடையேயுள்ள வேற்றுமைமையை வள்ளுவர் எவ்வாறு விளக்குகிறார்?

விலங்குகட்கும் மனிதர்கட்கும் எவ்வளவு வேறுபாடு இருக்கிறதோ அந்த அளவிற்குக் கற்றவர்க்கும் கல்லாதவர்க்கும் இடையே வேறுபாடு உளதாகும் என வள்ளுவர் கற்ருேர்க்கும் கல்லாதவர்கும் இடையே உள்ள வேற்றுமையை விளக்குகிறார்.

26. 'கேள்வி' பற்றி வள்ளுவர் கூறுவது யாது? அல்லது "வணங்கிய வாயினராதல் அரிது" யார்?

நுணுக்கமான கேள்வி அறிவினைப் பெருதவர் பிறரிடம் பணிவாகப் பேசுவது இயலாது என வள்ளுவர் 'கேள்வி' பற்றிக் கூறுகிருர்.

27. அறிவாவது யாது?

எந்தப் பொருளை யார் யாரிடத்திலிருந்து கேட்டாலும் அந்தப் பொருளின் உண்மைத் தன்மையை உணர்வதே அறிவாகும் என்று திருவள்ளுவர் "அறிவுடைமை" எனும் அதிகாரத்துள் கூறுகிருர்.

28. 'பெரியாரைத் துணைக் கோடல்' குறித்து வள்ளுவர் கூறுவனற்றைத் தொகுத்து வரைக.

தம்மைக் காட்டிலும் சிறந்த பெரியவர்களைத் தனக்குத் துணையாக அமைத்துக் கொள்ளுதல் வலிமைகளில் எல்லாம் சிறந்த வலிமை என்றும், தவறு செய்யுங்கால் இடித்துரைத்துத் திருத்தவல்ல பெரியாரைத் துணையாகப் பெருத பாதுகாவலற்ற மன்னன் தன்னைக் கெடுப்பதற்குப் பிறர் இல்லாத நிலையிலும் தன்னைத் தானே கெடுத்துக் கொள்வான் என்றும் திருவள்ளுவர் 'பெரியாரைத் துணைக் கோடல்' எனும் அதிகாரத்தில் குறிப்பிடுகிருர்.

29. "வன்மையுள் எல்லாம் தலை"—எது?

தம்மைக் காட்டிலும் சிறந்த பெரியாரைத் தமக்குத் துணையாகக் கொண்டு வாழ்தல் வலிமைகளில் எல்லாம் சிறந்த வலிமையாகும்.

30. "கெடுப்பாரிலானும் கெடுவான்"—யார்?

தவறு செய்யுங்கால் இடித்துரைத்துத் திருத்த வல்ல பெரியாரைத் தனக்குத் துணையாகப் பெருத ஒரு மன்னன் தன்னைக் கெடுக்கவல்ல பகைவர் இல்லாமலிருந்தாலும் தானே கெடுவான்.

31. 'தெரிந்து செயல்வகை' குறித்து வள்ளுவர் கூறுவன யாவை?

மேல் வரும் இலாபத்தைக் கருதி முதலாக வைத்த பொருளை இழந்துவிடக்கூடிய முயற்சியை அறிவுடையோர் மேற்கொள்ளமாட்டார் என்றும், நன்மையைச் செய்யுமிடத்தும், அவரவருடைய குணங்களை அறிந்து அவரவர்க்குத் தக்கபடி நன்மை செய்யாவிடின் குற்றம் உண்டாதல் கூடும் என்றும் தெரிந்து செயல்வகை குறித்து வள்ளுவர் குறிப்பிடுகிறார்.

32. "நுனிக் கொம்பர் ஏறினார் அஃதிறந் தூக்கின் உயிர்க்கிறுதி ஆகிவிடும்" — இப்பாடலிற் பயின்றுவரும் அணியினைச் சுட்டி விளக்குக.

இக் குறட்பாவிற் பயின்றுவரும் அணி பிறிது மொழிதல் அணியாகும். புலவர் தாம் கூறவந்த கருத்தை நேரிடையாகக் கூறுமல் அதனை விளக்கத் தக்க உவமையை மட்டும் கொடுத்து உவமேயத்தைப் பெற வைத்தல் பிறிது மொழிதல் அணியாம்.

இப் பாவின் கண் நுனிக் கிளையில் ஏறிய ஒருவன் அதனையும் கடந்து மேலே செல்ல விரும்பினால் அது அவனது உயிருக்கு ஊறு விளைவிக்கும் என்று கூறும் வாயிலாகத் தன் வலிமையை அறியாது தனது ஆற்றலுக்கு அப்பாற்பட்ட செயலை மேற்கொள்வானாயின் அழிந்து போவான் என்ற கருத்தைப் பெறவைக்கிறார்.

33. வள்ளுவர் கொக்கினை எதற்கு எடுத்துக் காட்டாக்கியுள்ளார்?

தொழிலை மேற்கொள்ளாதிருக்க வேண்டிய காலத்தில் அமைதியாக இருந்து, செயற்படவேண்டிய காலத்தில் விரைந்து செயற்படவேண்டும் என்ற கருத்திற்கு எடுத்துக்காட்டாகக் கொக்கு அமைதியாக இருந்து தேவையானபோது விரைந்து செயற்படும் தன்மையைக் குறிப்பிடுகிறார்.

34. 'இடனறிதல்' குறித்துத் திருவள்ளுவர் கூறுவன யாவை?

ஆராயவேண்டிய அனைத்தையும் ஆராய்ந்து தகுந்த இடத்தில் செயலை மேற்கொள்ளும்போது அஞ்சாமை தவிரப் பிறதுணை வேண்டாம் என்று இடனறிதல் என்னும் அதிகாரத்துள் திருவள்ளுவர் குறிப்பிடுகிறார்.

35. பயிரில் களையெடுப்பதற்கு ஒப்பாவது எது?

வேந்தன் கொடியவர்களைக் கொலை செய்வதன் வழியாகத் தண்டித்தல் பயிரில் களையெடுப்பதற்கு ஒப்பாகும்.

36. 'ஊக்கமுடைமை' பற்றித் திருவள்ளுவர் கூறுவது யாது?

ஊக்கமிகுதியே ஒருவர்க்கு வலிமையாகும் என்றும் அத்தகைய ஊக்கமில்லாதவர் உருவத்தால் மரத்தினின்றும் வேறுபட்டவராயினும் மரம் போன்றவரே என்றும் திருவள்ளுவர் ஊக்கமுடைமை பற்றிக் குறிப்பிடுகிறார்.

37. மெய்வருத்தக் கூலி தருவது எது?

முயற்சியானது உடம்பு வருந்தி உழைத்த அளவிற்குக் கூலி தருவதாகும். செய்த முயற்சியானது நல்லூழ் இன்மையால் கருதிய பயனைத் தராவிடினும் உடல்வருந்தி உழைத்த அளவிற்குப் பயன்தரும் என்பது வள்ளுவர்தம் கருத்தாகும்.

38. அமைச்சனின் கடமையாக வள்ளுவர் கூறுவது யாது?

அரசன் தன்னறிவும் சொல்லறிவும் இல்லாதிருந்தானாயினும் அவனுக்கு உறுதியான சொற்களை எடுத்துக்கூற வேண்டுவது அமைச்சனது கடமையாகும் என்று திருவள்ளுவர் கூறுகிறார்.

39. 'வினைத்தூய்மை' குறித்துத் திருவள்ளுவர் கூறுவது யாது?

ஒருவன் தன் தாய் வறுமை காரணமாகப் பசித்திருக்க நேர்ந்தாலும் அப்பசியைப் போக்குவதற்காகக்கூட நல்லோர் வெறுத்து ஒதுக்கிய செயல்களைச் செய்யக் கூடாது என வினைத்தூய்மை குறித்துத் திருவள்ளுவர் கூறுகிறார்.

40. குறிப்பறிதல் குறித்துக் குறள் கூறுவது யாது?

தன்னைச் சார்ந்துள்ள பொருளைக் கண்ணாடி காட்டுவதுபோல் உள்ளத்துள் தோன்றுகின்ற மிகுதியான உணர்வுகளை முகமானது தெளிவாகக் காட்டும்.

41. 'அடுத்தது காட்டும் பளிங்கு' இவ்வுவமையை உவமேயத்துடன் பொருத்திக் காட்டுக.

தன்னைச் சார்ந்துள்ள பொருளைக் கண்ணாடி காட்டுவது, உள்ளத்தில் எழும் மிகுதியான உணர்வுகளைத் தெளிவாக முகம் காட்டுதலுக்கு உவமையாக வந்தது.

உவமானம்: பளிங்கு அடுத்தது காட்டுதல்.

உவமேயம்: முகம், நெஞ்சம் கடுத்தது காட்டல்.

42. வீரன் பயன்படாத நாளாக எதைக் கணக்கிடுவான்?

போர்க்களம் சென்று விழுப்புண் பெறாத நாளைப் பயன்படாத நாளாக வீரன் கணக்கிடுவான்.

43. பண்புடையாளர் தொடர்பு எதற்கு ஒப்பாகும்?

பண்புடையவர்களது தொடர்பு சிறந்த நூல்களை அடிக்கடி பயில்வதற்கு ஒப்பாகும் என்று திருவள்ளுவர் கூறுகிறார். சிறந்த நூல்களைப் படிக்கப் படிக்க அதன்கண் அமைந்த நயம் புலப்படுதல் போல உயர்ந்தோர் நட்பு பழகப் பழக இனிமை பயக்கும் என்று கூறுகின்றார்.

44. “நவில் தொறும் நூல் நயம்”—இவ்வுவமையை விளக்கி உவமேயத்துடன் பொருத்துக.

நூல்களைப் பயிலுந்தோறும் இன்பம் பயத்தல் பண்புடையாளர் தொடர்பு பழகப் பழக இன்பம் தருதலுக்கு உவமையாக வந்தது.

சிறந்த நூல்கள் பண்புடையார்க்கும், நூற் பயிற்சி பண்புடையாளரோடு பழகுதற்கும், நூற் பயிற்சியால் பெறும் இன்பம் பண்புடையாளர் தொடர்பால் பெறும் இன்பத்துக்கும் உவமையாயின.

45. சான்ருேர்க்கு அணியும் பிணியும் ஆவன யாவை?

நாணுடைமையே சான்ருேர்க்கு அணியாகும். நாணுடைமை இல்லாத பெருமித நடை சான்ருேர்க்குப் பிணியாகும்.

46. உலகு யாரை சுற்றமாகச் சுற்றும்?

குற்றம் இல்லாதவனுகிக் குடும்பத்தை உயரச் செய்து வாழ்கின்றவனை உலகத்தார் தமக்குரிய சுற்றமாகக் கருதிச் சூழ்வர்.

47. நிலமகள் யாரை இகழ்ந்து சிரிப்பாள்?

தாம் வறியவர் என்று எண்ணிச் சோம்பலாய் இருப்பவர்களை நிலமாகிய பெண் கண்டால் அவர்களது சோம்பலை எண்ணி இகழ்ந்து சிரிப்பாள்.

48. ‘கயமை’ குறித்துத் திருவள்ளுவர் கூறுவனவற்றைத் தொகுத்து எழுதுக.

கீழ்மக்கள் கட்டுப்பாடில்லாமல் தாம் விரும்பியதைச் செய்து வாழ்வதால் அவர்கள் அவ்வாறு செய்யவல்ல வரம் படைத்த தேவர்களைப் போன்றவர்கள் என்று புகழ்வது போலப் பழிக்கிருர். மேலும், கயவர்கள் தாம் கேட்ட இரகசியங்களை மற்றவர்கட்குச் சொல்வதால் அடிக்கப்படும் பறையைப் போன்றவர்கள் என்று கூறுகிருர்.

49. "தேவர் அனையர் கயவர் அவருந்தாம்
மேவன செய்தொழுக லான்"—இக் குறட்பா
விற் பயின்றுவரும் அணியைச் சுட்டி அஃது
அவ்வணியா மாற்றை விளக்குக.

இப் பாவிற் பயின்றுவரும் அணி வஞ்சப் புகழ்ச்சி யணியாம். பழிப்பது போலப் புகழ்வதும், புகழ்வது போலப் பழிப்பதும் வஞ்சப் புகழ்ச்சியணி யாகும். இப் பாவில் தாம் விரும்பியவற்றைச் செய்யும் கயவர்களை, அவ்வாறே தாம் விரும்பியதைச் செய்ய வரம் பெற்று வந்த தேவரோடு ஒப்பிட்டுக் கயவர்களைப் புகழ்வது போலப் பழித்துள்ளார். எனவே, இது வஞ்சப் புகழ்ச்சி யணியாம்.

50. கயவரைத் திருவள்ளுவர் எங்ஙனம் இகழ்ந்
துரைக்கிறார் ?

கயவர் தாம் கேட்ட இரகசியங்களை மற்றவர் அறிய எடுத்துரைப்பதால் அடிக்கப் பெறும் பறை போன்றவர் என்று திருவள்ளுவர் கயவரை இழித்துரைக்கின்றார்.

இலக்கணக் குறிப்பு :

1. வேண்டாமை—எதிர்மறைத் தொழிற் பெயர்.
2. ஆங்கு—நீட்டல் விகாரம்.
   பசும்புல் (பசுமை+புல்)—பண்புத்தொகை.
3. அறத்தினூஉங்கு—இன்னிசை யளபெடை.
4. செயல்—வியங்கோள் வினைமுற்று.
6. விருந்து—விருந்தினர்—பண்பாகுபெயர்.
8. சொலின்—இடைக் குறை.
10. கெடுவல்—கெடுவேன்—தன்மை ஒருமை வினை முற்று.
11. காக்க—வியங்கோள் வினைமுற்று.
12. கேடு (கெடுதல்), கோள் (கொள்ளுதல்)—முதனிலை திரிந்த தொழிற் பெயர்கள்.

17. குலன்—ஈற்றுப்போலி.

18. அழிபசி—வினைத்தொகை.

தீர்த்தல்—வியங்கோள் வினைமுற்று.

வைப்பு—தொழிற்பெயர்.

அற்றார்—வினையாலணையும் பெயர்.

20. பெறுஅ—செய்யுளிசையளபெடை.

21. உலகம்—இடவாகு பெயராய் உயர்ந்தோரைக் குறித்தது.

பழித்தது—வினையாலணையும் பெயர்.

23. காக்க—வியங்கோள் வினைமுற்று.

24. கடுஞ்சொல் (கடுமை + சொல்) — பண்புத் தொகை.

கூறும்—செய்யும் என்னும் வாய்பாட்டு வினை முற்று.

நிலம்—இடவாகுபெயர்.

28. யார் யார்—அடுக்குத் தொடர்.

29. தமரா (தமராக)—தொகுத்தல் விகாரம்.

30. கெடுப்பார், இடிப்பார்—வினையாலணையும் பெயர்கள்.

கெடும்—செய்யும் என்னும் வாய்பாட்டு வினை முற்று.

33. கொம்பர் (கொம்பு)—ஈற்றுப்போலி.

நுனிக்கொம்பர்—முன் பின்னாகத் தொக்க ஆறும் வேற்றுமைத்தொகை.

இச் செய்யுளிற் பயின்று வரும் அணி பிறிது மொழிதல் அணியாகும். (32-ஆம் விடையைக் காண்க)

34. ஒக்க—வியங்கோள் வினைமுற்று.

குத்து (குத்துதல்)—முதனிலைத் தொழிற்பெயர்.

35. இடத்தால் செயின்—உருபு மயக்கம்.
39. அறி (அறிவு)—முதனிலைத் தொழிற்பெயர்.
40. ஈன்ருள்—வினையாலணையும் பெயர்.
செய்யற்க—எதிர்மறை வியங்கோள் வினை முற்று.
41. கடுத்தது—கடி என்னும் உரிச்சொல் அடியாகப் பிறந்த தொழிற்பெயர்.
47. சுற்றமா (சுற்றமாக)—தொகுத்தல் விகாரம்
48. அசைஇ—சொல்லிசையளபெடை.
50. அறை பறை—வினைத்தொகை.

(ஆ) சிறுபஞ்சமூலம்

1. சிறுபஞ்சமூலம் நூற்குறிப்பும், ஆசிரியர் குறிப்பும் தருக.

கண்டங்கத்தத்தரி, சிறுவழுதுணை, சிறுமல்லி, பெருமல்லி, நெருஞ்சி என்னும் ஐந்து வேர்கள் கொண்ட மருந்துக்குச் சிறுபஞ்சமூலம் என்று பெயர். அவை மக்களது பிணியைத் தீர்ப்பதுபோல இந்நூலில் ஒவ்வொரு செய்யுளிலும் அமைந்துள்ள ஐந்து பொருள்களும் நல்லொழுக்க நெறிகளைக் கூறிப் பிறவி நோயைத் தீர்க்கவல்லன ஆதலின் இதற்குச் சிறுபஞ்சமூலம் எனப் பெயரிடப்பட்டுள்ளது. இந்நூல் 100 செய்யுட்களைக் கொண்டது. இது பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று.

இதன் ஆசிரியர் காரியாசான். இவர் சமண மதத்தைச் சேர்ந்தவர். இவர் கி.பி. 8ஆம் நூற்ருண்டின் முற்பகுதியில் வாழ்ந்தவராகக் கருதப்படுகிருர்.

2. அறிவுடையார் செயல்களாகச் சிறுபஞ்சமூலம் கூறுவன யாவை?

பிறர் செய்த நல்ல செயல்களைப் பலரும் அறிய எடுத்துக் கூறி, பிறர் செய்த தீமைகளை மறந்து, பிற உயிர்கட்குத் தீமை நேரும்போது இயலுமானல் ஊன்றுகோல்

போல் அமைந்து உதவி செய்து, வஞ்சனையை ஒழித்து, மானம் இழந்தபின் உயிர் வாழாமலிருப்பதே அறிவுடையார் செயல்கள் எனச் சிறுபஞ்சமூலம் கூறுகிறது.

3. பெண்டிர்க்குச் சிறப்பளிக்கும் செயல்கள் யாவை?

தமது கணவரது வருவாய்க்கு ஏற்றவாறு செலவு செய்வதும், சுற்றத்தாரைக் கண்டு அஞ்சாதிருத்தலும், அவர்களை விரும்புதலும், விருந்தினரை உபசரித்தலும், செல்வத்தைப் பெருக்குகின்ற தெய்வத்தை எப்போதும் மனத்தெளிவோடு வாழ்த்துதலும் பெண்டிர்க்குச் சிறப்பளிக்கும் செயல்கள் ஆகும்.

4. நகைப்பிற்கிடமான செயல்களாகச் சிறுபஞ்சமூலம் கூறுவன யாவை?

நாணமில்லாதவன் அமைதியாய் இருத்தலும், நல்லொழுக்கம் இல்லாதவன் நோன்பை மேற்கொள்ளுதலும், பொருளில்லாதவன் ஈகையை மேற்கொள்ளுதலும், வலிமையில்லாதவன் போர்க்களம் செல்லுதலும், நன்கு தமிழைக் கற்காதவன் கவி பாடுதலும் நகைப்பிற்கிடமான செயல்களெனச் சிறுபஞ்சமூலம் கூறுகிறது.

5. தேவர், பிசாசு, அறிவிலார், இருகால் எருது என்று சொல்லத்தக்கவர் யாவர்?

நன்கு கற்றவர் தேவர் என்றும், கல்வியறிவில்லாதவர்கள் பிசாசுகள் என்றும், முதுமையடைவதற்கு முன்னே பொருளைத் தேடிக் கொள்ளாதவர்கள் அறிவில்லாதவர்கள் என்றும், தாம் முற்காலத்தில் செல்வம் பெற்றிருந்தமையால் துன்பம் அற்றிருந்ததாகவும், முன்பு அழகுடையவராக இருந்ததாகவும் கூறிக்கொள்கின்றவர்கள் இரு கால்கள் பெற்ற எருதுகள் என்றும் சொல்லத்தக்கவராவார்.

6. காரியாசான் இவ்வுலகில் இல்லாதவராகக் குறிப்பிடும் ஐவர் யாவர்?

எல்லாம் அறிந்தவனும், ஏதும் அறியாதவனும், நற்குணமே இல்லாதவனும், குற்றமேயில்லாதவனும், எல்லாக் கல்விகளையும் கற்றவனும் இவ்வுலகில் இல்லை என்று காரியாசான் கூறுகிறுர்.

இலக்கணக் குறிப்பு:

1. நல்ல, தீய—குறிப்பு வினையாலணையும் பெயர்கள். மாறுக—வியங்கோள் வினைமுற்று.

2. வழக்கு—'வழங்கு' என்னும் முதனிலைத் தொழிற் பெயர் வலித்தல் விகாரம் பெற்றது.

வெருவாமை—எதிர்மறை வினையெச்சம்.

4. இலேம்—தன்மைப் பன்மை வினைமுற்று.

5. குணன், கணன்—ஈற்றுப் போலிகள்.

(இ) ஏலாதி

1. ஆசிரியர் குறிப்பும், நூற்குறிப்பும் தருக.

நூல்: ஏலம், இலவங்கம், சிறுநாவற்பூ, சுக்கு, மிளகு, திப்பிலி ஆகிய ஆறு மருந்துப் பொருள்களும் உடலுக்கு வலிமையூட்டுவதுபோல, இந்நூலில் அடங்கியுள்ள ஒவ்வொரு பாடலிலும் பொருந்தியுள்ள ஆறு பொருள்களும் உள்ளத்திற்கு வலிமையூட்டுவன. எனவே இந்நூல் ஏலாதி என்னும் பெயர் பெற்றது. 82 செய்யுட்கள் அடங்கியுள்ள இந்நூல் பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்று.

ஆசிரியர்: கணிமேதையார் என்பார் இதன் ஆசிரியர். சமண சமயத்தவர். காலம் கி.பி. எட்டாம் நூற்றாண்டு.

2. குடும்பம் பெருகி வாழ்பவன் யார்?

செருக்கு அடையாமலும், கள் உண்ணாமலும், கள் உண்பவர்களோடு சேராமலும் விருந்தினர்க்குப் பொருளை மறைக்காமலும், நல்லொழுக்கத்தினின்றும் தவறாமலும், வறியவர்களை இகழாமலும், பிறர்க்குக் கொடுத்துத் தானும் உண்கின்ற ஒருவன் குற்றமற்ற இவ்வுலகத்தைப் பெற்று வாழ்வதோடு தன் குடும்பம் பெருக நன்றாக வாழ்வான்.

3. எப்படிப்பட்டவனிடம் ஒழுக்கமெல்லாம் நிறைந்து நிற்கும்?

பிறர் கொலை செய்வதற்கு உடன்படாமலும், தானும் பிறவுயிர்களைக் கொல்லாமலும், நோயினால் வருந்துவோரது நோய் தீர்த்தும், அறியாமையால் மயங்காமலும், சான்றோர்களது நூலை ஆராய்ந்தும், அதற்கேற்றவாறு ஒழுகியும் வாழும் ஒருவனை, நட்பாக்கிக் கொள்பவரிடம் அவ்வொழுக்கமெல்லாம் நிறைந்து நிற்கும்.

4. சாபம்போல வரக்கூடியன எவை? அவை யாரைச் சாரும்?

பாவமும், பழியும், விரோதமும், இறப்பும், பொருள் அழிவும், பயமும், சாபம்போல வரக்கூடியன. அவை பெருமையும், புகழும், அறமும், சினமின்மையும், சிறந்த நூல் தொடர்பும் இல்லாதவரிடத்துச் சேர்கின்றவர்களைச் சாரும்.

5. தவறாமல் மண் ஆளக்கூடியவன் என்று கணி மேதையார் யாரைக் குறிப்பிடுகிறார்?

ஒழுக்கத்திற் சிறந்த சான்றோர்களின் அறவுரைகளைக் கேட்டு, அதன் வழி நடந்து, தன்னிடம் ஏவல் செய்பவரிடம் விருப்பம் காட்டாமலும், வெறுத்து ஒதுக்காமலும் வஞ்சகர் சொற்களை நம்பாமலும், அவர்களோடு நட்புக் கொள்ளாமலும், வாழும் முறையறிந்து பகுத்துண்டு வாழ்பவன், தவறாமல் மண் ஆளக்கூடியவன் என்று கணி மேதையார் குறிப்பிடுகின்றார்.

இலக்கணக் குறிப்பு:

1. களியான், உண்ணான், காணான், ஒளியான், உலையான், எள்ளான்—முற்றெச்சங்கள்.
   ஈத்து—வலித்தல் விகாரம்.
2. உடன்படான், கொல்லான், மடம்படான்—முற்றெச்சங்கள்.
   மாண்டார்—வினையாலணையும் பெயர்.
3. சாக்காடு—தொழிற் பெயர்.

கேடு (கெடுதல்)—முதனிலை திரிந்த தொழிற் பெயர்.

4. பரியா—ஈறுகெட்ட எதிர்மறை வினையெச்சம். தேருன், இயையான், மாருன்-முற்றெச்சங்கள்.

(ஈ) நான்மணிக்கடிகை

1. நூற்குறிப்பும், ஆசிரியர் குறிப்பும் தருக.

நான்கு வகையான மணிகளால் கோக்கப்பட்ட ஓர் அணிகலம் என்பது பொருள். இதில் 104 செய்யுள்கள் உள்ளன. இது பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று.

விளம்பி நாகனுர் என்பார் இதன் ஆசிரியர். விளம்பி என்பது இவரது ஊராகும். காலம் கி.பி. 200-க்கு முற்பட்டது என்பர். வைணவ சமயத்தவர்.

2. வேண்டத்தகுவனவாக விளம்பி நாகனுர் விளம்புவன யாவை?

பிறர் செய்த தீமைக்காக அவரைக் கறுவாமை வேண்டும்; பிறர் செய்த நன்மையை மறவாதிருக்க வேண்டும்; சினத்தை விடவேண்டும்; தன் வளர்ச்சியைக் கெடுக்கும் செயல்களை ஒழித்தல்வேண்டும்.

இவ்வாறு வேண்டத்தக்க நான்கு செயல்களை விளம்பி நாகனுர் விளம்புகின்ருர்.

3. எழுக, நடுக, செய்க, விடல்—என நான்மணிக் கடிகையாசிரியர் எவற்றைக் கூறியுள்ளார்?

இழிவை விரும்பினுல் யாசிப்பதற்கு எழுக என்றும், இவ்வுலகில் நிலைபெற விரும்பினுல் அதற்குக் காரண மாகிய புகழை நடுக என்றும், இறக்குங்கால் தன்னேடு துணையாக வரத்தக்க ஒன்றை விரும்பினுல் அறஞ் செய்க என்றும், பிறரை வெல்ல விரும்பினுல் கோபத்தை விடுக என்றும் நான்மணிக்கடிகை ஆசிரியர் கூறியுள்ளார்.

4. நான்மணிக்கடிகையில் குறிக்கப்பட்ட நால் வகைக் குற்றங்கள் யாவை?

கற்பதற்குரிய இளமைப் பருவத்தில் கல்லாதிருப்பதும், பொருள் இல்லாத காலத்தில் பிறர்க்கு ஈவதும், உறவினர்கள் துணையாக இல்லாத சமயத்தில் பிறரிடம் கோபம் கொள்வதும், தம்மிடம் அன்பில்லாதவரிடம் உணவு பெறுவதும் ஆகிய நான்கும் குற்றங்களாகும் என்று நான்மணிக்கடிகை குறிப்பிடுகிறது.

5. வசை, கிளை, போகம், அறம் ஆகியவை எவ்வெவற்றால் ஆகும்?

பிறரைப் பழித்துப் பேசுவதால் வசை உண்டாகும்; பிறரை வணங்குவதால் நல்லோர் நட்பு உண்டாகும்; தேடிய பொருளால் இன்பம் உண்டாகும்; எல்லோரிடத்தும் மனம் நெகிழ்ந்து கொள்கின்ற அருளால் அறம் உண்டாகும்.

இலக்கணக் குறிப்பு:

1. கடிய—பலவின்பாற் படர்க்கைப் பெயர்.
   நன்று—தொகுத்தல் விகாரம்.
   கொளல்—இடைக்குறை.

2. எழுக, நடுக, செய்க, விடல்—வியங்கோள் வினைமுற்றுகள்.

3. ஊண் (உண்ணல்)—முதனிலை திரிந்த தொழிற் பெயர்.
   போழ்தத்து—'அத்து' சாரியை.

4. வணக்கமது—'அது' பகுதிப் பொருள் விகுதி.
   கிளை—உவமையாகு பெயர்.
   செழுங்கிளை (செழுமை + கிளை)—பண்புத் தொகை.

III. தொடர் நிலைச்செய்யுள்

(அ) மணிமேகலை

ஆதிரை பிச்சையிட்ட காதை

1. நூற்குறிப்பும், ஆசிரியர் குறிப்பும் தருக.

நூற்குறிப்பு: மணிமேகலை ஐம்பெருங் காப்பியங்களுள் ஒன்று. கோவலனுக்கும் மாதவிக்கும் பிறந்த மகளான மணிமேகலையின் வரலாற்றைக் கூறுவதால் மணிமேகலை என்று பெயராயிற்று. 'மணிமேகலைத் துறவு' என்னும் வேறு பெயரும் உண்டு.

ஆசிரியர்: மணிமேகலையை இயற்றியவர் மதுரைக் கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனர் என்பவராவார். சீத்தலை என்னும் ஊரில் பிறந்தவர்; பதினெண் கூலங்களை (தானியங்களை) விற்று வாழ்க்கை நடத்தியமையால் கூலவாணிகன் என்ற சிறப்புப் பெயர் பெற்றார். இவர் கடைச் சங்க காலத்தில் வாழ்ந்தவர்.

2 சாதுவன் குருமகனுக்குக் கூறிய அறவுரை யாது?

அறிவை மயக்கும் கள் அருந்துவதையும், உயிர்களைக் கொல்லுவதையும், குற்றமற்ற அறிவினையுடையோர் வெறுத்து ஒதுக்கினர்கள் என்றும்; பிறந்தவர் இறத்தலும் இறந்தவர் பிறத்தலும் உறங்கலும் விழித்தலும் போல உண்மையானவை என்றும்; நல்ல அறச் செயல்களைச் செய்தவர் வீடு பேறு அடைதலையும் பாவங்களைச் செய்தவர்கள் நரகத்தை அடைதலையும் உணர்ந்த அறிவுடையோர் பாவச் செயல்களை நீக்கினர் என்றும் சாதுவன் குருமகனுக்கு உரைத்தான்.

3. அறவுரை கேட்ட நாகர் தலைவன் கூறிய மறுமொழி யாது?

"உடம்பைவிட்டுச் செல்லும் உயிரானது வேறு உருவங் கொண்டு வேறிடத்தையடையுமென்று கூறினாய்;

அவ்வுயிர் எங்ஙனம் சென்றடையும்? அதனைத் தெளிவாக எனக்கு உணர்த்துவாயாக" என்று தனக்கு அறம் உரைத்த சாதுவனை நாகர் தலைவன் கேட்டான்.

4. சாதுவன் குருமகன் ஐயத்தை எவ்வாறு அகற்றினன்?

உயிர் உள்ளபோது நிகழ்ந்ததனை உணரும் ஆற்றல் பெற்ற உடம்பு உயிர் பிரிந்த பிறகு தீயிலிட்டுச் சுட்டாலும் உணர்கின்ற ஆற்றல் இழந்து விடுகிறது என்பதனால் உடம்பை விட்டுச் சென்ற ஒருபொருள் உண்டென்பதை அவன் உணரக்கூடும் என்றும், அப்படிப் போன உயிர்க்கு வேறு புகலிடம் உண்டு என்பதைத் தான் மட்டுமன்றி அனைவரும் அறிவர் என்றும், உடம்பு அங்கே ஒழிய உயிரானது பல காததூரம் கடந்து பிறிதோரிடத்தில் சேர்வதை நாம் கனவிலும் காணக்கூடும் என்றும், அவ்வாறு செல்கின்ற உயிர் தனது செய்வினைக்கேற்ற உடலை அடையும் என்பதனை நாம் தெளிவாக உணரவேண்டும் என்றும் சாதுவன் நாகர் தலைவனிடம் கூறி அவன் ஐயத்தை அகற்றினன்.

5. குருமகன் சாதுவனை வணங்கி வேண்டியது யாது?

குருமகன் சாதுவனை வணங்கி, கள்ளும் புலாலும் விடுத்துத் தான் உயிர் வாழ முடியாது என்று கூறித் தான் இறக்கும் வரை மேற்கொள்ளத்தக்க நல்ல அறங்களைத் தனக்கு உரைக்குமாறு வேண்டினன்.

6. தனக்குரிய நல்லறத்தினைக் கூறக் கேட்ட குருமகனுக்குச் சாதுவன் உரைத்த அறநெறிகள் யாவை?

சாதுவன் குருமகன் கடைபிடிப்பதற்குரிய நல்லறங்களைக் கூறுவதாகவும், அவற்றைக் கடைபிடித்து அவன் நல்வழியில் நடக்கவேண்டுமென்றும் கூறி, மரக்கலம் உடைந்ததால் அத்தீவிற்கு வரும் மனிதர்களை அவன் கொல்லக் கூடாது என்றும், அவர்களது உயிர்களைக்

காப்பாற்ற வேண்டும் என்றும், முதுமை அடைந்து இறக்கும் தறுவாயிலுள்ள மிருகங்களைத் தவிரப் பிற உயிர்களைக் கொல்லக் கூடாது என்றும் அறவுரை கூறினன்.

7. ஆதிரை மணிமேகலைக்குப் பிச்சையிட்ட தன்மையை விளக்கி எழுதுக.

மணிமேகலை ஆதிரையின் வீட்டினுள் நுழைந்து எழுதப்படாத ஓவியம் போல நின்ற அளவில் ஆதிரை மணிமேகலையை வலம் வந்து வணங்கி, துயரத்தைப் போக்கும் சொற்களைக் கூறி, அமுத சுரபியின் அகன்ற உள்ளிடம் நிறையுமாறு உணவினை இட்டு 'உலகம் முழுவதும் பசிப்பிணி ஒழிவதாக' என்று கூறினள்.

8. இடஞ்சுட்டி விளக்குக.

(அ) "அவ்வுயிர் எவ்வணம் போய்ப் புகும்"

இடமும் பொழுதும்: மணிமேகலையில் ஆதிரை பிச்சையிட்ட காதையில் குருமகனது கூற்ருக வருவது.

இறந்தவர் பிறப்பர் என்றும், நல்லறம் செய்தோர் நல்லுலகம் அடைவர் என்றும், அல்லறம் செய்வோர் அரு நரகடைவர் என்றும், சாதுவன் கூறக்கேட்ட குருமகன் "அவ்வுயிர் எவ்வணம் போய்ப் புகும்" என்று வினவினன்.

விளக்கம்: "உடம்பு விட்டு ஓடும் உயிர் உருக் கொண்டு வேறிடம் புகும் என்று உரைத்தாய்; அவ்வுயிர் எவ்வாறு சென்றடையும்?" என வினவினன்.

(ஆ) 'நன்று சொன்னய் நன்னெறிப் படர்குவை."

இடமும் பொழுதும்: சாதுவன் கூற்ருக மணிமேகலை ஆதிரை பிச்சையிட்ட காதையில் வருகிறது.

சாதுவனது அறவுரை கேட்ட நாகன் மனம் திருந்தி தனக்கு ஏற்ற நல்லறங்களைக் கூறுமாறு சாதுவனை வேண்டியபோது சாதுவன் "நன்று சொன்னய் நன்னெறிப் படர்குவை" என்று கூறினன்.

விளக்கம் : "நீ மிகவும் நன்கு கூறினாய்; நீ நல்ல வழியில் நடப்பாயாக" என்பது இதன் பொருளாகும்.

(இ) "பூங்கொடி நல்லாய்! பிச்சை பெறுக"

இடமும் பொழுதும் : ஆதிரை கூற்றாக மணிமேகலையில் ஆதிரை பிச்சையிட்ட காதையுள் வருகிறது. இது ஆதிரையின் கூற்று.

மணிமேகலை பிச்சையேற்க வந்து நின்றபோது, ஆதிரை அவளை நோக்கிக் கூறியது.

விளக்கம் : "பூங்கொடி போன்ற நல்லவளே! நீ பிச்சையை ஏற்றுக்கொள்வாயாக!" என்பது இதன் பொருளாகும்.

9. உவமையைப் பொருளுடன் பொருத்துக.

(அ) "புனையா ஓவியம்"

"புனையா ஓவியம்" அழகுற விளங்கிய மணிமேகலைக்கு உவமையாக வந்துள்ளது.

(ஆ) "உறங்கலும் விழித்தலும்"

உறங்கல் இறத்தலுக்கும் விழித்தல் பிறத்தலுக்கும் உவமையாயின.

இலக்கணக் குறிப்பு :

அருநரகு (அருமை + நரகு)—பண்புத் தொகை.

எவ்வணம்—இடைக்குறை.

காண்குவை—முன்னிலை ஒருமை வினைமுற்று.

எரிவிழி—உவமைத்தொகை.

நல்லடி (நன்மை + அடி)—பண்புத்தொகை.

உரைக்கேன்—தன்மை ஒருமை வினைமுற்று

ஆருயிர் (அருமை + உயிர்) பண்புத்தொகை.

விளிமா—வினைத்தொகை.

செய்கேம்—தன்மைப் பன்மை எதிர்கால வினைமுற்று.

கொள்க—வியங்கோள் வினைமுற்று.

உறுபொருள்—உரிச் சொற்றொடர்.

மென்றுகில் (மென்மை+துகில்)—பண்புத் தொகை.

இவையிவை—அடுக்குத் தொடர்.

(ஆ) பெருங்கதை

குறிக்கோட் கேட்டது

1. நூற்குறிப்பும், ஆசிரியர் குறிப்பும் தருக.

நூற்குறிப்பு: இந்நூல் சொற்சுவை, பொருட்சுவை, நிறைந்தது. சதானிகன் என்னும் கௌசாம்பி நகரத்து அரசனது மகனாகிய உதயணன் வரலாற்றைக் கூறுவதே இந்நூல். உஞ்சைக் காண்டம், இலாவாண காண்டம், மகத காண்டம், வத்தவ காண்டம், நரவாண காண்டம் என ஐந்து காண்டங்களே இப்போது கிடைத்துள்ளன.

ஆசிரியர்: கொங்குவேளிர். இவர் கொங்கு நாட்டைச் சேர்ந்த விசய மங்கலம் என்னும் ஊரினர். சமண சமயத்தைச் சார்ந்தவர்; காலம் கி.பி. 8 அல்லது 9ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவர்.

2. முனிவர் தங்கியிருந்த சோலையின் வளத்தைப் பெருங்கதை ஆசிரியர் எங்ஙனம் கூறியுள்ளார்? (20 வரிகள்)

முனிவர் தங்கியிருந்த சோலையானது வனவிலங்குகளால் தோன்றும் அச்சத்தை நீக்கிக் காவலை வேண்டாததாய் அமைந்திருந்தது; எல்லோரும் ஒரே குலமாகத் தம்முட்கலந்து வேற்றுமையுணர முடியாதவாறு அமைந்துள்ள இக்கலியுகத்தில் உண்டாகும் இழிவும், இல்லாமையும், தீமையும், அற்பத்தன்மையும், இறத்தலும், ஏதும் இல்லாமையும், பிறர் கண்டு இரங்கத்தக்க தன்மையும் ஆகிய இவற்றை நீக்க முயலும் நன்மக்களைப்போல குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை ஆகிய ஐவகை நிலங்கட்குமுரிய மரங்களும், செடிகளும், கொடிகளும்

தத்தம் செல்வங்களைச் செவ்வனே பெற்று முனிவரது படைப்புப் போல் மிகுந்த வளப்பத்தால் அழகு பெற்றுத் திகழ்ந்தது; வெப்பம் இன்றி மிக்க நிழலையுடையதாய் நீரில் புகுந்தாற் போன்ற குளிர்ச்சியுடையதாய்த் திகழ்ந்தது; அகன்ற இடங்களையுடையதாய் விளங்கியது. பூக்களாகிய ஆசனங்களையுடையதாகவும், தளிர்களாகிய உயர்ந்த குடைகளை உடையதாகவும் அழகிய கொடி களாகிய சாமரை வீசுவதாகவும் விளங்கியது; வண்டி னங்களும் குயிலும் எழுப்பும் மனதைக் கவரும் இன் னிசை யுடையதாய்த் திகழ்ந்தது; முதிர்ந்த கனிகளால் பயன்தரும் மரங்கள் தவிர வேறு பயனற்ற மரங்கள் இல்லாததாய்த் திகழ்ந்தது.

3. முனிவர் உதயணனை எவ்வாறு வரவேற்றார்?

உதயணன் பெருங்குடியிற் பிறந்தவனுதலினாலும், சிறந்த செல்வமுடையவனுதலினாலும்; உயிர்காக்கும் கடமையை மேற்கொண்டு ஒழுகுபவனுதலினாலும், முனிவர் அவனைக்காண விரும்பி இந்திரனை எதிர்கொண் டழைக்கும் முனிவரைப்போல வரவேற்றுத் தவச்சாலையை அடுத்து அமைந்திருந்த அசோக மரத்தின் நிழலில் மணலின்மீது மலர் பரவியிருந்த இருக்கையில் அமருமாறு கூறினார்.

4. உதயணன் முனிவர் முன்னே எவ்வாறிருந் தான்?

உதயணன் கவலைகொண்ட மனத்துடன் எதிரே இருந்த அசோக மரத்தினது அடியை அடைந்து துன் பத்தில் கைகொடுக்கும் நண்பனுகிய யூகியை நினைத்து உள்ளம் வருந்தி தனது அகன்ற கையில் வைத்திருந்த வெண்மை நிறமுடைய மணமிக்க மலரானது நழுவி விழ மனவருத்தத்தோடு அமர்ந்திருந்தான்.

5. உதயணனிடம் நிகழ்ந்த குறிகளைக் கொண்டு முனிவர் கூறிய பயன்கள் யாவை?

“நீ பசுமரத்தைச் சார்ந்திருப்பதால் உன் உயிரனைய நண்பனுகிய யூகி உயிரோடு இருக்கிருன் என்பதும், அவனை நீ சேர்வாய் என்பதும் உறுதியாகிறது. நீ கையில்

வைத்திருந்த மலர் நழுவி விழுந்தமை நீ அனுபவிக்கும் இன்பத்திற்கு இடையூறு தோன்றும் என்பதைக் குறிக்கிறது. அம்மலர் வெறும் நிலத்தில் விழாமல் உன் தொடைமேல் விழுந்தமையால் இழந்த இன்பத்தை நீ மீண்டும் பெறுவாய். நீ பூமியின்மீது அமர்ந்திருப்பதால் உனது தலைநகரத்தையும் நாட்டையும் வெற்றிபெறுவாய் என்பது தோன்றுகிறது. மேலும், உனக்குச் சாரணர் உபதேசமும் கிடைக்கும். நீ வீடு பேறு அடையும் காலமும் இந்த அளவினதாகும்" என்று முனிவர் கூறினர்.

6. உவமையைப் பொருளுடன் பொருத்திக் காட்டுக.

'அருமதி முனிவர் நிருமிதம்'

உவமை: சிறந்த அறிவினையுடைய முனிவர்கள் புதிதாகப் படைத்த படைப்பு.

உவமேயம்: உதயணன் வீற்றிருந்த சோலை பல்வகை வளங்களும் ஒருங்கே அமைந்ததாய் அழகுடன் விளங்கியது.

பொருத்தம்: இக்கலி காலத்தைப் போல ஐந்துதிணைகட்குமுரிய பல்வகை மரஞ்செடி கொடிகளும் ஓரிடத்தே அமைந்திருந்த அச்சோலை முனிவரின் புதுமையான படைப்புப்போலத் தோற்றமளித்தது.

7. இடஞ்சுட்டி விளக்குக.

'தக்கது மன்ற மிக்கோன் கூற்று'

இடமும் பொழுதும்: உதயணனிடம் தோன்றிய சகுனங்களை ஆராய்ந்த முனிவர் அவற்றின் பலன்களை அவனுக்குக் கூற அவற்றைக் கேட்ட உதயணன் 'தக்கது மன்ற மிக்கோன் கூற்று' எனத் தன்னுள் நினைத்தான்.

விளக்கம்: உதயணனிடம் காணப்பட்ட சகுனங்களை நன்கு ஆராய்ந்து முனிவர் மொழிந்த சொற்கள் ஏற்றுக் கொள்வதற்கேற்பப் பொருத்தமாய் இருந்ததால் அம்முனிவரது சொற்கள் மிகவும் தகுதி வாய்ந்தவையே என்று உதயணன் தன் மனத்துள் எண்ணினன்.

8. குறிப்பு வரைக—ஐம்பெருங்குழு, எண்பேராயம்.

ஐம்பெருங்குழு : அமைச்சர், சேனதிபதியர், தூதர், ஒற்றர், புரோகிதர் ஆகியோரைக் கொண்ட அவை.

எண்பேராயம் : கரணத்தியலவர், கருமகாரர், கனகச் சுற்றம், கடை காப்பாளர், யானை மறவர், இவுளிவீரர், படைத் தலைவர், நகரமாந்தர் ஆகியோரைக் கொண்ட அவை.

இலக்கணக் குறிப்பு :

பைந்தளிர் (பசுமை+தளிர்)—பண்புத் தொகை.

முதிர்கனி—வினைத்தொகை.

இல்லா, இயற்கு—ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சங்கள்.

தழீஇ, கழீஇ, உறீஇ, இரீஇ—சொல்லிசையளபெடைகள்.

தார்மார்பன்—இரண்டாம் வேற்றுமையுருபும் பயனும் உடன்தொக்கத்தொகை.

ஒழுகுவரை—வினைத்தொகை.

தடக்கை—உரிச்சொற்றொடர்.

வெள்ளிதழ் (வெண்மை+இதழ்)—பண்புத்தொகை.

உசிர் (உயிர்)—இடைப்போலி.

கடிநாள்—உரிச்சொல் தொடர்.

வெறுநிலம் (வெறுமை+நிலம்)—பண்புத்தொகை.

வள்ளிமருங்குல்—உவமைத்தொகை.

(இ) வில்லி பாரதம்

திரௌபதி மாலையிட்ட சருக்கம்

1. நூற்குறிப்பும், ஆசிரியர் குறிப்பும் தருக.

நூற்குறிப்பு : வில்லிபுத்தூர் ஆழ்வாரால் இயற்றப் பெற்ற பாரதம். சகுந்தலைக்கும் துஷ்யந்தனுக்கும் பிறந்த பரதனது வழியில் வந்தவர்களது வரலாற்றைக் கூறும் நூல். வடமொழியில் வியாசர் இயற்றிய பாரதம் முதல் நூலாகும். இது பத்துப் பருவங்களை உடையது.

ஆசிரியர் : வில்லிபுத்தூரார் திருமுனைப்பாடி நாட்டில் உள்ள சனியூரில் வைணவ அந்தணர் குலத்தில் வீர ராகவாச்சாரியாரது புதல்வராகத் தோன்றினர். இவர் வக்கப்பாகை வரபதியாட்கொண்டான் என்னும் சிற்றரச னால் ஆதரிக்கப்பட்டார். அவன் வேண்டுகோளின்படி பாரதத்தைப் பாடினர். காலம் 14ஆம் நூற்றுண்டின் இடைப்பகுதி.

2. துருபதன் சுயம்வர நாள் குறிக்கக் காரணம் என்ன ?

தான் வேண்டிய வரத்தின்படி திரௌபதி பிறந்ததை யும் அவள் பிறந்தபோது ‘இவள் பாண்டவர்க்கு உரியவளாவாள்’ என்று அசரீரி கூறியதையும், குருவை வணங்கி வேண்டியபோது அவள் அர்ச்சுனனுக்கே உரியவளாவாள் என்று கூறியதையும், அதன்படி வலிமைமிக்க பாண்டவர்கள் துரியோதனன் கொடுமை யால் அழிந்து போகாமல் எங்காவது மறைந்திருக்கக் கூடும் என்பதையும், எண்ணிப் பார்த்து, எங்கிருந்தாலும் வந்து சேர்வார்கள் என்ற நம்பிக்கையில் சுயம்வர நாள் குறித்துப் பல மன்னர்கட்கும் ஓலை அனுப்பினுன்.

3. பாண்டவர்கள் சுயம்வரம் காண எவ்வாறு சென்றனர் ?

பாஞ்சாலத்தில் திரௌபதியின் சுயம்வரத்திற்கான ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதை ஆங்கிருந்து வந்த அந்தணன் ஒருவன் வாயிலாக அறிந்த பாண்டவர்

தாயாகிய குந்தியையும் அவ்வூரின்கண் வாழ்கின்ற அந்தணர்களையும் அழைத்துக்கொண்டு புறப்பட்டுத் தம் மனத்தைக் காட்டிலும் வேகமாகச் சென்றூர்கள்.

4. சூரியோதயத்தை வில்லிபுத்தூரார் எங்ஙனம் வருணித்துள்ளார்?

இரவுப் பொழுதும், அவ்விரவிற் பெய்த பனியும் நீங்கின; மக்கள் மனமும், கண்களும் மலர்ச்சி பெற்றன; எட்டுத்திசைகளும் பூமியும் விளக்கமுற்றுத் தோன்றின; பறவைகளும் விலங்குகளும் ஆரவாரம் செய்தன; குளங்களும் சோலைகளும் மலர்ச்சி பெற்று விளங்கின; சக்கரவாகப் பறவையின் ஆணும், பெண்ணும் ஒன்று கூடின; முரசங்களும் சங்குகளும் முழங்கின. இவ்வாறு சூரியோதயத்தை வில்லிபுத்தூரார் வருணித்துள்ளார்.

5. தென்றலின் இனிமையை வில்லிபுத்தூரார் எவ்வாறு வருணிக்கிறூர்?

தனது நண்பனுகிய அக்கினி தேவனுக்கு மகளாகிய திரௌபதியை மணந்து கொள்ள வேண்டும் என்ற விருப்பத்தால் பாண்டவர் காடுமலைகளையெல்லாம் கடந்து வருவதை அறிந்த தென்றல் காற்று அவர்கள் நடந்த வருத்தத்தால் களைத்திருப்பார்கள் என்று கருதி அவர்களது களைப்பைப் போக்குவதற்காக மென்மையாக வீசுவதாக வில்லிபுத்தூரார் தென்றல் வீசுவதனை வருணிக்கிறூர்.

6. பாண்டவர்க்கு நிகழ்ந்த நன்னிமித்தங்களைத் தொகுத்து எழுதுக. (20 வரிகள்.)

தாமரை மொக்குகள் இதழ் விரிக்கும் நேரத்தை எதிர்நோக்கி, வண்டுகள், தேன் உண்பதற்காக அதனைச் சுற்றிக் கொண்டிருந்தன. அவற்றுள் ஒரு வண்டு தனது சிறகால் அம் மொக்கை நெகிழச் செய்து அதனுட் புகுந்து இனிய தேனை உண்டு மகிழ்ந்தது. அதுகண்ட பாண்டவர் திரௌபதியை மணக்கப் பல மன்னர் போட்டியிட்டாலும் அவள் தமக்கே உரிமையாவாள் என்று உணர்த்தும் நன்னிமித்தமாக அதனைக் கருதினர்.

வளமமைந்த நீர்த்துறையில் ஓர் மாம்பழம் வீழ்ந்ததைக் கண்ட பல மீன்கள் அதைக் கவர எண்ணி ஓடின. அப்போது ஓர் வாளை மீன் நீரைக் கிழித்துக் கொண்டு விரைந்தோடி வந்து அப்பழத்தினைக் கவ்விக் கொண்டு மகிழ்ந்தது. அக்காட்சியையும் தங்களுக்குக் கிட்டப் போகும் வெற்றியைக் குறிக்கும் நல்ல சகுனமாகப் பாண்டவர் எண்ணி மகிழ்ந்தனர்.

குயில் கூவும் குரலைக் கேட்ட பாண்டவர்கள் திரௌபதியின் சுயம்வரம் காண மன்னர்கள் பலர் வந்துள்ளார்கள் எனவும், அவளை மணப்பதற்குரிய அவர்கள் விரைந்தோடிவர வேண்டும் என்று கூவி அழைப்பது போல உள்ளது என்றும் எண்ணினார்கள்.

மகிழ்ச்சியால் தோகை விரித்தாடும் மயில்களைக் கண்ட பாண்டவர்கள் திரௌபதியின் திருமணம் விரைவில் நடக்குமென்பதையும், மணக்கப் போட்டியிட்ட பல மன்னர்களும் தோற்று ஓடுவர் என்பதையும் கண்ட அவை தோகை விரித்தாடுகின்றன என்று கண்டு அக மகிழ்ந்தனர்.

பூக்களில் தேனருந்த வண்டுகள் மொய்த்துக் கொண்டிருந்தன; நீர் நிலைகளில் பறவைகள் திளைத்து விளையாடின; விலங்குகள் தம் துணையுடன் களித்திருந்தன; மரங்கள் கொடிகளால் தழுவப்பட்டிருந்தன. இத்தகைய இன்பக் காட்சிகளைக் கண்டு மகிழ்ந்து பாண்டவர் அவை தாம் திரௌபதியை மணந்து நுகரப் போகும் இன்பத்தைக் குறிக்கும் அறிகுறிகளென எண்ணி மகிழ்ந்தனர்.

7. பாண்டவர்க்காக இரங்கிய திரௌபதியைத் தாதியர் எவ்வாறு தேற்றினர்?

பிறந்த காலத்தில் அவள் பாண்டவர்களை மணப்பாள் என்று அசரீரி கூறக் கேட்டு முன்னர் மகிழ்ந்திருந்த திரௌபதி அவர்கள் அரக்கு மாளிகையில் கொல்லப்பட்டனர் என்ற செய்தி கேட்டு மிகவும் மனக்கலக்கமுற்று இருந்தாள். அதுகண்ட தாதியர் சோதிடம் ஒருக்காலத்தும் பொய்க்காது என்றும், அவளை மணப்பதற்குரிய பாண்டவர் உரிய நேரத்தில் வந்தடைவார்கள் என்றும் கூறி அவளைத் தேற்றினர்.

8. திரௌபதி அருச்சுனனையே எண்ணியிருந்த காட்சியைப் புலப்படுத்துக.

திரௌபதியை மணக்க விரும்பும் அரசர்களது படங்களையெல்லாம் அவளுக்குத் தோழியர் எழுதிக் காட்டினர். அவற்றுள் வளைந்த வில்லோடும், அழகிய தேரோடும் காட்சியளித்த அருச்சுனன் உருவத்தைத் தவிர வேறு எதனையும் மனத்திற் கொள்ளாதவளாக இருந்தாள். தான் பிறந்தபோதே தன் தந்தையால் கணவனுக முடிவு செய்யப் பெற்ற அருச்சுனன் சுயம்வர மண்டபத்திற்கு வந்து தன்னை மணக்கவில்லையானல் தான் தீயில் புகுந்து மாள்வதாக முடிவு செய்யும் அளவிற்கு மனவலிமை யுடையவளாகத் திகழ்ந்தாள்.

9. திரௌபதியின் நிலையைக் கண்ட அரசர் நிலையினை விளக்குக ?

வீரக்கழலணிந்து ஆயுதம் தாங்கிய அரசர்கள் தீயிற் பிறந்த திரௌபதியின் பேரழகினைத் தம் கண்களால் கண்டு கரும்பு வில்லையுடையவனுகிய மன்மதனது மலர்க் கணைகளால் நிலை தடுமாறித் தீயிலிட்ட நெய்போல மனம் உருகினர்கள்.

10. திட்டத்துய்மன் சபையோரை நோக்கிக் கூறியன யாவை ?

திட்டத்துய்மன், திரௌபதி தனக்கே உரியவள் என்று எண்ணிக்கொண்டிருந்த அரசர்களை நோக்கி அவர்கள் நினைத்துப் பார்க்கவும் இயலாத ஒரு செய்தி யினைக் கூறினன். அங்குள்ள வில்லையும், அம்புகளையும் கொண்டு ஆங்குள்ள இயந்திரச் சக்கரத்தில் நிலைபெருமல் சுழன்று கொண்டிருந்த இலக்கினை எய்து வீழ்த்து பவர்க்கே திரௌபதி மாலை சூட்டுவாள் என்று கூறினன்.

11. திட்டத்துய்மன் கூற்றினைக் கேட்ட அரசர் நிலை யாது ?

திரௌபதியின் கண்களை ஒத்த அம்புகளையும் அவளது நெற்றி போன்ற வில்லையும் கண்டு அரசர்கள் கலங்கினர்கள் என்ருலும் அந்த இலக்கை வீழ்த்திவிட்டு இலக்குமியை ஒத்த திரௌபதியை மணக்க வேண்டு மென்ற பேராசையால் மனம் மயங்கிக் கிடந்தார்கள்.

12. அந்தண வடிவங் கொண்டிருந்த அருச்சுனன் எழுந்து பேசியது யாது?

துரியோதனன் முதலான பல மன்னர்கள் வில்லை வளைத்து நாண் ஏற்ற முடியாமல் அவமானமுற்றுத் திரும்பியபோது அந்தணர் நடுவே அந்தணர் வடிவில் வீற்றிருந்த அருச்சுனன் எழுந்து திரௌபதியின் தமையனாகிய திட்டத்துய்மனை நோக்கி "அரச குலத்திற் பிறந்து உலகாளும் மன்னர்களேயன்றி அந்தணர் குலத்தில் பிறந்த ஒருவன் வில்லை வளைத்து நாணேற்றி இலக்கை வீழ்த்தினாலும் திரௌபதி மணப்பாளா?" என வினவினான்.

13. அருச்சுனன் சுழல் இலக்கை எவ்வாறு வீழ்த்தினான்?

அருச்சுனன் எழுந்துசென்று சிவபெருமான் மேரு மலையை எடுத்ததுபோல அந்த வலிமையான வில்லை எடுத்தான். அதனை வளைத்து, மற்றவர்களது நாண்கள் எல்லாம் பிற்படுமாறு நாணை ஏற்றினான். அதனைக் கண்ட மற்றவர் அவனே வில் வித்தைக்கு ஆசிரியன் எனப் புகழ்ந்தனர். கூர்மையான அம்பு ஒன்றினை நாணில் பொருத்திய அருச்சுனன் சுழலும் இலக்கினை அறுத்து வீழ்த்தினான். அது கண்ட அந்தணர் மகிழ்ச்சி ஆரவாரம் செய்ய தேவர்கள் மலர்மாரி பொழிந்தனர்.

14. திரௌபதி அருச்சுனனுக்கு மாலை சூட்டிய வரலாற்றை 20 வரிகளில் எழுது.

துருபதன் தன் மகளாகிய திரௌபதிக்குச் சுயம்வரம் ஏற்பாடு செய்திருப்பதாகப் பல மன்னர்கட்கும் ஓலை அனுப்பினான். அதனால் பல நாட்டு மன்னர்களும் திரௌபதியை மணக்கும் விருப்பத்தோடு மண மலர்களை மொய்க்கும் வண்டுக் கூட்டம் போல் வந்து கூடினர். அச் செய்தியை ஓர் அந்தணன் வாயிலாக அறிந்த பாண்டவர் கள் தங்கள் தாயுடனும் ஒரு சில அந்தணர்களுடனும் பாஞ்சாலம் நோக்கிப் புறப்பட்டார்கள். வழியில் காணப் பட்ட பல நிமித்தங்களைக் கொண்டு திரௌபதி தமக்கே உரியவள் என்று எண்ணி மகிழ்ந்து பாஞ்சால நாட்டை

அடைந்தனர். தம் தாயை ஓர் குயவன் வீட்டிலிருக்கச் செய்து அந்தணர்களுடன் புறப்பட்டுச் சுயம்வர மண்டபத்தை அடைந்தனர்.

திரௌபதி பிறந்தபோது கேட்ட அசரீரி வாக்கின்படி அருச்சுனனை மணக்க முடியாது போனால் தான் உயிரை விடுவதாக உறுதியோடிருந்ததை நோக்கி அவளது தாதியர் சோதிடம் பொய்க்காது என்று கூறித் தேற்றி அவளைச் சுயம்வர மண்டபத்திற்கு அழைத்துச் சென்றனர். அவளது தமையனை திட்டத்துய்மன் ஆங்கிருந்த அரசர்களை நோக்கி ஆங்கிருந்த வில்லையும் அம்புகளையும் கொண்டு சுழலும் இலக்கினை வீழ்த்துபவர்க்கே திரௌபதி உரியவளாவாள் என்று அறிவித்தான்.

அரசர்கள் பலர் இலக்கினை வீழ்த்த எண்ணி வில்லை நாணேற்ற முற்பட்டுத் தோல்வியுடன் திரும்பியபோது, அந்தணன் வேடத்திலிருந்த அருச்சுனன் திட்டத்துய்மனை நோக்கி மன்னர் தவிர அந்தணர்களில் ஒருவன் இலக்கை வீழ்த்தினாலும் திரௌபதி மாலையிடுவாளா என வினவினான். திட்டத்துய்மன் அவ்வாறு செய்வதில் குறையொன்றும் இல்லை என்று கூற, அருச்சுனன் வில்லை வளைத்து நாணேற்றி இலக்கினை அம்பெய்தி வீழ்த்தினான். அவனது வில் தேர்ச்சியைக் கண்ட திரௌபதி அவன் அருச்சுனனே என உளம் தெளிந்து அவனுக்கு மாலை சூட்டினாள்.

15. கீழ்க்காணும் உவமைகளைப் பொருளுடன் பொருத்தி விளக்குக.

(அ) ‘அழலிற்பட்ட நெய்போல’

உவமானம்	உவமேயம்
அழல்	மாறனின் மலர்க்கணை
நெய்	மன்னர்களது மனம்
நெய் உருகுதல்	மன்னர்களின் மனம் வருத்தத்தால் கரைதல்

பொருத்தம்: அழகிற் சிறந்த திரௌபதியினை நோக்கி மாறனின் மலர்க்கணையால் தாக்கப்பட்டு உளம் வருந்திய மன்னர்க்கு அழலிற்பட்ட நெய் உவமையாயிற்று.

(ஆ) 'அரியேறு ஆனின்தோல் போர்த்நாற் போன்ற'

உவமானம்	உவமேயம்
ஆண் சிங்கம்	பாண்டவர்
பசுத்தோல்	அந்தணர் வேடம்
சிங்கம் பசுத்தோல் போர்த்த செயல்	பாண்டவர் அந்தணர் வேடம் தாங்குதல்

பொருத்தம்: வலிமை மிக்க பாண்டவர்கள் சாதுவான அந்தணர் வேடம் தாங்கிய செயலுக்கு ஆண் சிங்கம் ஒன்று சாதுவான பசுத்தோலைப் போர்த்த செயல் உவமையாகக் கூறப்பட்டுள்ளது.

(இ) 'மலர்ப்பூ வொன்றைத் தேன் வரித்தென்ன'

உவமானம்	உவமேயம்
மலர்	திரௌபதி
வண்டு	அரசர்கள்
தேன் உண்ணச் சூழ்தல்	மணந்துகொள்ள எண்ணிக் கூட்டமாக வருதல்

பொருத்தம்: அழகிற் சிறந்தவளாகிய திரௌபதிக்குச் சுயவரம் என்று கேள்விப்பட்டவுடன் அவளை மணந்து கொள்ளும் ஆவலுடன் அரசர் பலர் திரண்டு வந்த செயலுக்கு மலர் ஒன்றினைத் தேன் உண்ணும் வண்டுகள் சூழ்ந்து கொள்ளுதல் உவமையாயிற்று.

(ஈ) 'கரியமேனி இரவி குலச் சிறுவனைப்போல்'

உவமானம்	உவமேயம்
இராமன்	அருச்சுனன்
சீதையை மணக்க எண்ணி வில்லை வளைக்க முயலல்	திரௌபதியை மணக்க எண்ணி வில்லால் இலக்கை வீழ்த்த முற்படுதல்

பொருத்தம்: சீதையை மணக்க எண்ணி வில்லை வளைப்பதற்காக இராமன் எழுந்தமை, திரௌபதியை மணக்க வில், அம்பு கொண்டு இலக்கை வீழ்த்த எண்ணி அருச்சுனன் எழுந்தமைக்கு உவமையாயிற்று.

16. இடம் சுட்டி விளக்குக.

(அ) 'சோதிடம் பொய்யாது தோன்றுவர் உரியோர்'

இடமும் பொழுதும்: பாண்டவரையே மணப்பது என்ற உறுதியான கொள்கையோடிருந்த திரௌபதி பாண்டவர் அரக்குமாளிகையிற் கொல்லப்பட்டனர் என்ற செய்தி கேட்டு மனக் கலக்கமுற்றபோது அவளது தாதியர், "சோதிடம் பொய்யாது தோன்றுவர் உரியோர்' என்று கூறினர்.

விளக்கம்: தாதியர் திரௌபதியை நோக்கி அவள் பிறந்த காலத்தில் அசரீரியாக அவள் பாண்டவரையே மணப்பாள் என்று கூறப்பட்ட சொல்லானது பொய்க்காது என்றும் மணப்பதற்குரியவர்களாகிய பாண்டவர் உரிய நேரத்தில் தோன்றுவர் என்றும் கூறினர்கள்.

(ஆ) "மாண்டெரி புகுவன்"

இடமும் பொழுதும்: சோதிடம் பொய்க்காது அவளை மணத்தற்குரிய பாண்டவர் உரிய நேரத்தில் வந்து சேர்வர் என்று தாதியர் கூறக்கேட்டு மனம் தெளிந்த திரௌபதி அவ்வாறு அருச்சுனன் வந்து தன்னை மணக்காவிடில் "மாண்டெரி புகுவன்" என்று கூறினாள்.

விளக்கம்: வேள்வித் தீயில் பிறந்த போதே அருச்சுனன் கணவனாவான் என்று தன் தந்தை கூறியபடி அவன் வந்து மணம்செய்து கொள்ளாவிடில் தீயிற் புகுந்து உயிர் விடுவதாகத் திரௌபதி கூறினாள்.

(இ) "தகவன்றே, மன்றலுக்குத் தாழ்வோ?"

இடமும் பொழுதும்: மன்னர் தவிர அந்தணரும் இலக்கை வீழ்த்தினால் அவரைத் திரௌபதி மணப்பாளா என்று வினவிய அந்தண வடிவில் வந்த அருச்சுனனுக்கு மறுமொழியாகத் திட்டத்துய்மன் " தகவன்றே, மன்றலுக்குத் தாழ்வோ " என்று கூறினான்.

விளக்கம்: இலக்கை வீழ்த்தி அந்தணர் எவரும் திரௌபதியை மணந்து கொள்வாராயின் அதிற் குறையொன்றுமில்லை என்றும், அது பெருமையே என்றும் கூறினான்.

இலக்கணக் குறிப்பு :

மனத்தேர்—உருவகம்.

கூர் இருள்—உரிச் சொற்றொடர்.

விரிபதன்—வினைத்தொகை.

இறகர்—ஈற்றுப்போலி.

வண்டுறை (வண்மை+துறை)—பண்புத்தொகை.

தண்டுறை (தண்மை+துறை)—பண்புத்தொகை.

எலாம்—இடைக்குறை.

எந்தை—எம் தந்தை என்பதன் மரூஉ.

வெங்கழல் (வெம்மை+கழல்)—பண்புத்தொகை.

பவளத்துவர் இதழ்—உவமைத்தொகை.

தோகை—உவமையாகு பெயர்.

போன்ம்—மகரக் குறுக்கம்.

௯. பெரியபுராணம்

பூசலார் நாயனார் புராணம்

1. நூற் குறிப்பும் ஆசிரியர் குறிப்பும் தருக.

நூற் குறிப்பு: பெருமை சான்ற சிவனடியார்களின் வரலாற்றைக் கூறும் நூலாகையால் இந்நூல் பெரிய புராணம் என வழங்கப்படுகிறது. இந்நூலுக்கு ஆசிரியர் இட்ட பெயர் திருத்தொண்டர் புராணம் என்பது. இது பன்னிரு திருமுறைகளுள் ஒன்றாகும்.

இது திருத்தொண்டர் திருவந்தாதி, திருத்தொண்டத் தொகை என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு பாடப்பட்டது.

ஆசிரியர் குறிப்பு: இதன் ஆசிரியர் சேக்கிழார். ஊர் குன்றத்தூர். இயற்பெயர் அருண்மொழித் தேவர். காலம் பன்னிரண்டாம் நூற்றாண்டு.

2. திருநின்ற ஊரின் சிறப்பினை விளக்குக.

நல்லொழுக்கத்திற் சிறந்த நன்மக்கள் வாழும் தொண்டை நாட்டில் செல்வம் நிறைந்த ஊர் திருநின்ற ஊராகும். அது, நான்கு மறைகளையும் ஓதியுணர்ந்த அந்தணர்கள் வாழும் பழமை மிக்க ஊராகும். அங்கு வாழும் அந்தணர்கள் மறை விதிகட்கு மாருத நல்லியல்பு வாய்ந்தவர்கள். எனவே, அவ்வூர் தொண்டை நாட்டிலேயே சிறந்து விளங்கியது.

3. பூசலாரின் ஒழுக்க நெறி யாது?

பூசலார், திருநின்ற ஊரில் அந்தணர் மரபில் தோன்றியவர். எப்போதும் சிவபெருமான் திருவடிகளையே சிந்தை செய்யும் இயல்பினர். அன்புமிக்கவர். மறை முதலான பல கலைகளிலும் தேர்ச்சியுடையவர். சிவபெருமானது அடியார்கட்கு வேண்டிய பொருள்களை எவ்வாறேனும் தேடித் தந்து உபசரிப்பதையே பெரிய சிவத் தொண்டாகக் கருதியவர்.

4. பூசலார் சிவபெருமானுக்கு ஆலயம் அமைத்த விதத்தை எழுதுக.

சிவபெருமானிடம் மாருத அன்பு கொண்டிருந்த பூசலார், அப்பெருமானுக்கு ஆலயம் அமைக்க மனங் கொண்டார். அதற்காக வருந்திப் பொருள் தேடியும் ஏதும் கிடைக்கவில்லை. அதனல் மனம் உடைந்த பூசலார் தம் மனத்திலேயே அப்பெருமானுக்கு ஆலயம் அமைக்கத் துணிவு கொண்டார். அதற்குத் தேவையான பொருள்களையும், தச்சர்களையும், தம் உள்ளத்தாலேயே எண்ணித் திரட்டிக் கொண்டார். சைவ நூல்களின் முறைப்படி ஒரு நல்ல நாளில் அடிக்கல் நாட்டி, இரவு பகல் உறக்கமின்றித் தன் மனத்திற்குள்ளாகவே அக் கோவிலைக் கட்டினர். பலவகையான அடுக்குகளை அமைத்து அழகிய பல உருவங்களைச் சிற்ப வேலைப்பாட்டுடன் செய்து, சிற்ப நூலில் கூறிய முறைப்படி ஒரு முழம் அளவில் சிகரம் அமைத்து, அந்த ஆலயத்தின் கோபுரத்தையும் கட்டி முடித்தார். பின்னர், விமானத்தில் ஸ்தூபி அமைத்துச் சுண்ணம் தீட்டிச் சித்திரங்கள் எழுதி அழகு படுத்தினர். பக்கத்தில் கிணறு ஒன்று அமைத்தார்.

திருக்குளமும் தோண்டினர். கோவிலைச் சுற்றி மதிலையும் கட்டினர். இவ்வாறு பூசலார் தம் மனத்திற்குள்ளாகவே கோயில் கட்டினர்.

5. காடவர் கோமான் கனவில் தோன்றிச் சிவ பெருமான் அருளியது என்ன ?

காடவர் கோமான் காஞ்சியில் அமைத்த கற்கோயி லில் சிவபெருமானை எழுந்தருளச் செய்வதற்காகக் குறித்த நாளும் பூசலார் தம் மனக் கோவிலில் இறைவனை எழுந்தருளச் செய்யக் குறித்த நாளும் ஒன்ருக அமையவே, சிவபெருமான் முதல் நாள் இரவு காடவர் கோன் கனவில் தோன்றி, தான் அம்மன்னன் குறித்த அந்நாளிலே பூசலார் தன் மனத்துள் திட்டமிட்டு அமைத்த கோவிலிலே எழுந்தருளப் போவதாகவும், காடவர் கோமான் கோவிலில் பிறிதொரு நாள் எழுந்தருள ஏற்பாடு செய்யலாம் என்றும் கூறியருளினர்.

6. காடவர் கோமான் பூசலாரைக் கண்ட செயலை விளக்குக. (20 வரிகள்)

சிவபெருமான் தனது கனவில் தோன்றிக் கூறி அருளியதைக் கேட்ட காடவர்கோன் அத்தகைய பெரி யாரைக் கண்டு வணங்கவேண்டும் என்ற விருப்பம் உடையவனுனன். திருநின்ற ஊரை நோக்கிப் புறப் பட்டான். ஆங்கிருந்தவர்களிடம் பூசலார் அமைத்த கோயில் எங்குள்ளது என வினவினன். அவர்கள் பூசலார் அவ்வாறு அமைத்த ஆலயம் ஏதும் இல்லை யெனக் கூறக் கேட்டுத் திகைத்தான். அங்கிருந்த அந்தணர்களிடம் வினவினன். அவர்கள் பூசலார் என்று ஒருவர் உண்டு என்று மட்டும் கூறினர்கள். அவரை அழைத்து வருவதாகக் கூறிப் புறப்பட்ட அந்தணர்களைத் தடுத்து நிறுத்தித் தாமே செல்வதாகக் கூறினன். அவரைக் கண்டு வணங்கி ஆலயம் பற்றிக் கேட்டான். ஆலயத் தில் இறைவனை எழுந்தருளச் செய்யும் நாள் அந்த நாளே யாதலின் அவரைக் கண்டு வணங்கிச் செல்ல விரும்பி வந்ததாகவும் கூறினன். மன்னனது சொற் களைக் கேட்டு வியப்பெய்திய பூசலார் இறைவனது இன்னருளைத் தம் உள்ளத்தால் நினைந்து உருகினர். தாம் கோவில் கட்டப் பெருவிருப்பம் கொண்டிருந்ததாயும்,

ஆனால் அதற்கேற்ற பொருள் கிட்டாமையால் தம் மனத்திலேயே கற்பனையாகக் கோயில் கட்டியதாயும் விளக்கினர். அவ்வரலாறு கேட்ட காடவர்கோன் வியப்படைந்து பூசலாரது பெருமையைப் போற்றி அவரை வணங்கித் தன் நகர் அடைந்தான்.

7. இடஞ்சுட்டி விளக்குக.

(அ) "என்னையோர் பொருளாக் கொண்டே
எம்பிரான் அருள் செய்தாரேல்"

இடமும் பொழுதும்: சிவபெருமான் பூசலாரைக் குறித்துக் கனவிற் கூறக் கேட்டு அவரைக் காண வேண்டித் திருநின்றவூர் சென்று அவரைக் கண்டு கனவில் நிகழ்ந்ததை விளக்கி ஆலயம் யாண்டுளது எனக் கேட்டபோது பூசலார் "என்னையோர் பொருளாக் கொண்டே எம்பிரான் அருள் செய்தாரேல்" எனக் கூறினர்.

விளக்கம்: தன்னை ஒரு பொருளாகக் கருதிச் சிவ பெருமான் இவ்வாறு காடவர் கோன் கனவிற் கூறியது உண்மையானல் என்பது பொருளாகும்.

(ஆ) "முன்வரு நிதியிலாமை மனத்தினுல்
முயன்ற கோயில் இன்னதாம்"

இடமும் பொழுதும்: காடவர் கோன் பூசலாரைக் கண்டு கனவு நிகழ்ச்சியைக் கூறி அவர் அமைத்த கோயில் யாண்டுளது எனக் கேட்டபோது "முன் வரு நிதியிலாமை மனத்தினுல் முயன்ற கோயில் இன்ன தாம்" எனக் கூறினர்.

விளக்கம்: தான் கோயில் அமைத்தற்குரிய செல்வம் கிடைக்கப் பெருமையால் மனத்தாலேயே அமைத்த கோயில் அதுதான் எனத் தான் மனக் கோயில் கட்டிய விதத்தை விளக்கினர்.

(இ) "என்னே புரையறு சிந்தையன்பர் பெருமை"

இடமும் பொழுதும் : பூசலார் தன் மனத்தே கோயில் அமைத்ததை விளக்கிக் கூற, அதுகேட்ட காடவர் கோன், "என்னே புரையறு சிந்தையன்பர் பெருமை" என்று எண்ணி வியந்தான்.

விளக்கம் : மனக்கோயில் அமைத்த வரலாறு கேட்ட காடவர்கோன் அக்குற்றமற்ற அன்பருடைய பெருமை எத்தகையது எனத் தன்னுள் எண்ணிப் பாராட்டினன்.

இலக்கணக் குறிப்பு :

எரித்தார்—வினையாலணையும் பெயர்.

மூதூர் (முதுமை + ஊர்)—பண்புத்தொகை.

இலா—ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்.

அருமறை (அருமை + மறை)—பண்புத்தொகை.

நைவார்—வினையாலணையும் பெயர்.

வருக—வியங்கோள் வினைமுற்று.

பொருளா—தொகுத்தல் விகாரம்

புக்கான்—புகு என்ற பகுதி ஒற்று இரட்டித்து இறந்த காலம் காட்டிற்று.

புனைமன்றுள்—வினைத்தொகை.

பொற்கழல்—மூன்றும் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்கத்தொகை.

(உ) பாஞ்சாலி சபதம்

சகுனியின் வஞ்சம்

1. சகுனி துரியோதனனிடம் கூறிய சூழ்ச்சி உரைகள் யாவை? (20 வரிகள்)

சகுனி துரியோதனனை நோக்கிக் கூறிய சூழ்ச்சி உரைகள் :—“ நீ ஏன் வருந்துகின்றாய் ? நான் இன்றே பாண்டவர்களை வென்று அவர்களது நாட்டினை உனக்குக் கொடுப்பேன். நான் கூறும் வழியினைக் கவனமாகக் கேள். தேவேந்திரனது மண்டபத்தைப் போல ஒரு அழகிய மண்டபத்தினை அமைத்து அதனைக் காண வருமாறு பாண்டவர்களை அழை. அவர்களிடம் நயமாகப் பேசி நம் எண்ணத்தை நிறைவேற்றிக் கொள்ளும் வண்ணம் அவர்களைச் சூதாட அழைப்போம். சூதாட்டத்தில் நான் வல்லவன் என்பதை நீ அறிவாய். சிறிது நேரத்தில் அவர்களை வென்று அவர்களது செல்வங்களை எல்லாம் கவர்ந்துகொண்டு அவர்களையும் உனக்கு அடிமையாக்குவேன். போர் செய்து பாண்டவர்களை வெல்ல இயலாது. அருச்சுனனது வில்லுக்கு ஈடானது இவ்வுலகில் இல்லை. நீ சூதாட்டத்தைக் குறைவாக எண்ணாதே. இதற்கு முன் இவ்வாறு சூதாட்டத்தின் மூலம் பகைவர்களை வென்ற பல மன்னர்கள் உளர். நாடும், மக்களும், செல்வமும் பெறவே போரிடுவர். மக்களது இரத்தத்தை ஓடச் செய்து நம்மைச் சேர்ந்தவர்களது மாமிசத்தைக் குவித்து நாம் கண்டு மகிழவா போர் செய்கிறோம்? நாடும் மக்களும் செல்வமும் ஒரு நாழிகைப் போதினில் சூதினால் வெல்லக் கூடுமானால் அதனை விடுத்து நாம் ஏன் வேறு வகையாக எண்ணவேண்டும் ?”

2. துரியோதனனது நிலையைச் சகுனி, திருதராட்டிரனிடம் எவ்வாறு கூறினான் ?

சகுனி திருதராட்டிரனை நோக்கி, ஐயனே ! உன் மகன் உடல் இளைத்துத் துரும்பாகவிருக்கிறான் ; உயிர் வாழ்வதை வெறுக்கிறான்; உண்பதையும் உடுப்பதையும் வெறுக்கிறான் ; நண்பர்களோடும் உறவாடுவதில்லை ; இளம் பெண்களைப் பற்றியும் நினைப்பதில்லை ; கண்கள் பசலை நிறம் பெற்றனன் ” என்று துரியோதனன் நிலையைக் கூறினான்.

3. திருதராட்டிரன் வினவியவை யாவை?

சகுனியின் உரை கேட்ட திருதராட்டிரன் துரியோதனனை நோக்கி, "மைந்தனே! உனக்கு என்ன வருத்தம்? இந்தச் சகுனி கூறுவதில் உண்மையுண்டோ? உனக்கு எந்த வகையிலாவது குறை உண்டோ? உன்னை எதிர்க்கின்ற பகைவரும் உளரோ? நீ நினைக்கின்ற பொருளை எல்லாம் உடனே உனக்குக் கொடுப்பவர் இல்லையோ?" என்று வினவினன்.

4. சகுனி கூறிய மறுமொழி யாது?

துரியோதனனை நோக்கித் திருதராட்டிரன் அவனது நிலைக்குக் காரணம் வினவ, அதற்கு மறுமொழியாகச் சகுனி "அந்தப் பாண்டவர்கள் இராச சூய யாகத்தில் நம்மை வேண்டுமென்றே இழிவு படுத்தி விட்டார்கள். கேட்பவரின்றி உன்மகனைப் பலர் எள்ளி நகையாடினர். மூத்தவர்க்கே அரசுரிமை என்ற முறைப்படி பார்த்தால் துரியோதனனுக்கே அரசு உரியது. அதனைப் பாண்டவர் பெற்று ஆள்வது கண்ட மாதரும் நமது கையாலாகாத செயலைப்பற்றிப் பழிக்கிறார்கள். அதனால் துரியோதனன் பாண்டவர்களது நாட்டைக் கவர்ந்து கொள்ள விரும்புகிறான். இந்த உலகம் முழுவதும் உங்களது ஆணையே செல்லவேண்டுமென்று எண்ணுகிறான். உங்களது குலப் பெருமை கெடலாகாது என்று அவன் நினைக்கிறான். சிறந்த வீரனாகிய அவனுக்கு இது பொருத்தமான செயலே ஆகும். இல்லையெனில் உலகம் அவனைக் கோழை யென்று பழிக்கும்" என்று கூறினன்.

இலக்கணக் குறிப்பு :

கேட்பை—முன்னிலை ஒருமை வினைமுற்று.

பணிதொண்டர்—வினைத்தொகை.

வெஞ்சமர் (வெம்மை+சமர்)—பண்புத்தொகை.

உண்ப—வினையாலணையும் பெயர்.

தடந்தோள்—உரிச்சொற்றொடர்.

வாள்விழி—உவமைத்தொகை.

வையம்நகும்—இடவாகுபெயர்.

(ஊ) பாண்டியன் பரிசு

வீரமங்கை

1. அரசனும் அரசியும் அகமகிழ்ந்திருந்தது எவ்வாறு? அவர்கள் கேட்ட செய்தி என்ன?

கதிர் நாட்டின் அரசனாகிய கதிரைவேலனும் அவனது மனைவியாகிய கண்ணுக்கினியாளும் நடன மண்டபத்தின் கண் அமைந்திருந்த இருக்கையின்மீது அமர்ந்து தமிழ்ச் சொற்களாகிய பூக்களால் இசைப்பாக்களாகிய மாலைகளைத் தொடுத்து உள்ள மகிழ்ச்சியோடு வீற்றிருந்தனர்.

அப்போது படைத் தலைவன் அங்கே வந்து ஒரு காத தூரத்தில் வேழநாட்டரசன் பெரும் படைகளோடு வந்து கொண்டிருப்பதாகக் கூறினான்.

2. கண்ணுக்கினியாள் கோபத்துடன் கூறியன யாவை?

கண்ணுக்கினியாள் தன் கணவன் மீதும் நாட்டின் மீதும் மக்கள்மேல் தனக்கிருக்கும் அன்பின் மீதும் ஆணை யிட்டுப் படையெடுத்து வரத் துணிந்த நரிக்கண்ணன் தன் தமையன் அல்லன் என்றும் தான் போர்க்களத்தை அடைந்து அங்கு அவன் இருப்பானாகில் தான் அவனை அழிப்பதாகவும், இன்றேல் தான் அவன் கையால் மாள்வதாகவும் தன் அண்ணன் அந்த நாட்டில் நுழைவதானால் தன் உயிரில் நுழைந்த பின்னரே நுழையவேண்டும் எனவும், தான் அவன் உயிரைக் குடித்த பிறகே மனத் தூய்மை பெற்று அரண்மனையில் கால் வைப்பதாகவும் வஞ்சினம் கூறினாள்.

3. கண்ணுக்கினியாளின் வீரச் செயல் யாது?

தன் கணவன் மீதும், நாட்டின் மீதும், மக்கள் மீது தான் வைத்த அன்பின் மீதும், ஆணையிட்டுத் தன் அண்ணனாகிய நரிக்கண்ணனைக் கொன்றாலன்றித் தன் அரண்மனைக்குள் வருவதில்லை என்று வஞ்சினம் கூறித்

தன் அண்ணன் இருக்குமிடத்திற்குத் தேரைச் செலுத்து மாறு கூறித் தேரின் மீது ஏறிக் கடுங்கோபத்துடன் போர்க்களம் நோக்கிச் சென்ருள்.

4. நரிக்கண்ணன் என்பவன் யார்? அவன் செய்த இழிசெயல் யாது ?

நரிக்கண்ணன் என்பான் கதிரை நாட்டரசி கண்ணுக்கினியாள் என்பவளின் தமையன், அவன் வேழ நாட்டரசனிடம் படைத் தலைவனுகப் பணியாற்றினன். தன் தங்கையை ஏமாற்றி அவளது நாட்டைக் கவரத் திட்டமிட்டான். வேழ நாட்டரசனைத் தூண்டி கதிரை நாட்டின் மீது படையெடுத்து வரச் செய்தான். வேழ நாட்டரசனும் கதிரைவேலனும் போரிட்டுக் கொண்டிருக்கும் போது நரிக்கண்ணன் ஒரு போர்வையால் தன்னை மறைத்துக்கொண்டு கதிரைவேலன் முதுகில் ஈட்டியைப் பாய்ச்சி விட்டு மறைந்து விட்டான். தனது இழி செயல் வெளிப்படாதிருப்பதற்காகத் தன்னை மறைத்துக் கொள்ளப் பயன்பட்ட போர்வையையும் முகமூடியையும் தனது படைவீரன் ஒருவனை அணிந்து கொள்ளுமாறு செய்து விட்டுப் போர்க்களத்தை விட்டகன்று கதிர் நாட்டு அரண்மனையை அடைந்தான். இதுவே நரிக்கண்ணன் புரிந்த இழி செயலாகும்.

5. கதிரைவேலன் போர்த் திறனை விளக்குக.

கதிரைவேலன் வடபுறமிருந்த வாயில் வழியாக வெளிப்பட்டுத் தன்னை எதிர்த்த பெரும்படை மீது தன் படையை ஏவி ஆங்கிருந்த வேழ மன்னனேடு போர் புரியத் தொடங்கினன். அவனது வாள் வீச்சுகள் அனைத்திற்கும் விடைதந்தான். தனது வாள் வீச்சுக்குக் கிடைத்த விடைகளையும் பெற்றுக் கொண்டான். சாவு இருவரையும் நொடிக்கு நொடி நெருங்கிற்று. வெற்றி மங்கை யாரை அடைவது என்று தெரியாமல் பலமுறை ஏமாறும் அளவிற்கு இருவரும் இணையான பலத்துடன் போரிட்டனர். இவ்வாறு கதிரைவேலன் வீரத்துடன் போரிட்டான்.

6. கண்ணுக்கினியாள் மனம் நாணியது ஏன்? அவள் கூறியது என்ன?

கண்ணுக்கினியாள் இறந்த தனது கணவனது உடலை அணைத்துக்கொண்டு அங்கங்களை வருடியபோது அவனது முதுகிலே ஈட்டி பாய்ந்ததால் ஏற்பட்ட புண் இருந்ததைக் கண்டாள். முதுகில் புண்பட்டதை அறிந்து வெட்கி, கணவனது உடலைத் தரைமீது எறிந்தாள். அவள் தனது கணவனின் இறந்த உடலை நோக்கி, "தமிழனை விட்டுப் பிரியாத மானமும் இன்று பிரிந்ததோ! தமிழா! உன் தமிழ் நெஞ்சம் முதுகு காட்டத் துணிந்ததோ? உனது முன்னேரும் எனது முன்னேரும் பகைவரது வாளை மார்பிலும் தோளிலும் ஏற்றதன்றிச் சிறிதளவும் திரும்பி முதுகில் ஏற்ற செய்தியினை இவ்வுலகம் கேட்டதுண்டோ?" என்று புலம்பினுள்.

7. வேழ மன்னன் கண்ணுக்கினியாளிடம் கூறிய ஆறுதல் மொழி யாது?

புறப்புண் பெற்றுனே என வெட்கிப் புலம்பிக் கொண்டிருந்த கண்ணுக்கினியாளை வேழ மன்னன் பார்த்து, "மனைக்கு விளக்காகத் திகழ்பவளே! உன் கணவன் வீரத்தோடு என்னுடன் வாட்போர் நிகழ்த்திக் கொண்டிருந்த வேளையில் ஒரு கயவன் முகத்திரையும் போர்வையும் கொண்டு தன்னை மறைத்துக் கொண்டு உன் கணவன் முதுகில் ஈட்டியாற் குத்தினுன். நான் திகைத்து நிற்கும்போதே உன் கணவன் பிணமாகத் தரையில் வீழ்ந்தான். அவன் புகழுக்கு எவ்விதக்கேடும் வரவில்லை. அவ்வாறிருக்க உன் குடியினது மானம் போயிற்று என்று நீ புலம்புவது ஏன்? உன் அரண்மனைக்குச் சென்று உன் துயரத்தை ஆற்றி இரு" என்று ஆறுதல் மொழி கூறினுன்.

8. இடம் சுட்டி விளக்குக.

(அ) "என் வெற்றி உன் துன்பம் அன்ரே?"

இடமும் பொழுதும்: கதிரைவேல் மன்னனும் அரசியும் நடன மண்டபத்தில் தமிழ்ப் பாக்களைப் பாடிக் களித்திருந்த வேளையில் படைத் தலைவன் அங்கு வந்து

வேழ நாட்டான் படையோடு வருவதாகக் கூற, அது கேட்ட மன்னன் அரசியை நோக்கி அப்படையெடுப்புக்கு அவள் தமையனுன நரிக்கண்ணனே காரணம் எனக் கூறி அவனைப் போர் செய்து ஒழிப்பதாகக் கூறி "என் வெற்றி உன் துன்பம் அன்ருே" எனக் கூறினுன்.

விளக்கம்: வேழ மன்னனேடு போரிட்டு அவனையும், அரசியின் தமையனுகிய நரிக்கண்ணனையும் கொல்வதால் பெறும் தனது வெற்றி, தன் தமையனை இழத்தலால் அவளுக்குத் துன்பமாக அமையும் என்று கதிரைவேலன் கூறினுன்.

(ஆ) "முதுகு காட்டத் துணிந்ததோ தமிழா ! உன் தமிழ் நெஞ்சம்"

இடமும் பொழுதும்: கதிரைவேலனும் வேழ நாட்டானும் போர் புரிந்துகொண்டிருக்கும் போது வஞ்சகமாகக் கொல்லப்பட்டு வீழ்ந்த கதிரைவேலனது பிணத்தைப் பார்த்து முதுகில் காயம் பெற்றிருப்பதைக் கண்டு வெட்கிய கண்ணுக்கினியாள் "முதுகுகாட்டத் துணிந்ததோ தமிழா ! உன் தமிழ் நெஞ்சம்" என்ருள்.

விளக்கம்: புறப்புண் பெறுதலைப் பெரும் இழுக்காகக் கருதும் தமிழ்க் குடியிற் பிறந்த தன் கணவன் புறப்புண் பெற்ருனே என்ற அளவில் அவனது வீர நெஞ்சம் எவ்வாறு புற முதுகு காட்டத் துணிந்தது என வினவினுள்.

(இ) "அகத் துன்பம் நீங்கியிரு"

இடமும் பொழுதும்: கணவன் புறப்புண் பெற்ருனே என்று கண்ணுக்கினியாள் வெட்கிப் புலம்பிக்கொண்டிருந்தபோது வேழவேந்தன் அவளை நோக்கி "அகத் துன்பம் நீங்கியிரு" என்று கூறினுன்.

விளக்கம்: கணவன் புறங்காட்டவில்லை என்றும் வஞ்சகமாகக் கொல்லப்பட்டான் என்றும் கூறி உள்ளத்தே எழும் வருத்தத்தை ஆற்றியிருக்குமாறு வேழ வேந்தன் கூறினுன்.

இலக்கணக் குறிப்பு :

தமிழ்ப் பூ—உருவகம்

அதிர்படை—வினைத்தொகை.

நுழைக—வியங்கோள் வினைமுற்று.

மாறி மாறி—அடுக்குத்தொடர்.

கருந்திரை (கருமை+திரை)—பண்புத் தொகை.

மலர்க்கை—உவமைத்தொகை.

IV. பல்சுவை

(அ) வருணனை

1. உதயம்

1. தோலாமொழித் தேவர் உதய வருணனையில் கூறியது யாது ?

"குளிர்ச்சி பொருந்திய தென்றல் காற்று மெதுவாக அசைந்து பல பொருள்களோடும் கூடி மகிழ்ந்து தவழ, உதய காலத்தில் விளங்கும் செம்மை நிறமானது விரைவாகக் கீழ்த்திசையில் மிக, பிரகாசிக்கும் சிறகுகளோடு கூடிய பறவைக் கூட்டங்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து இசைபோல் குரல் எழுப்ப, தளிர்களும் இலைகளும் நிறைந்துள்ள சோலையில் குளிர்ச்சி பொருந்திய மலர்கள் மலரும்" என்று தோலாமொழித் தேவர் உதய வருணனையிற் கூறுகிறார்.

இலக்கணம் :

அசைந்து அசைந்து—அடுக்குத்தொடர்.

செவ்வண்ணம் (செம்மை + வண்ணம்)—பண்புத் தொகை.

வளர்கா—வினைத்தொகை.

2. மருதம்

1. கம்பர் மருத நிலவரசன் கொலுவீற்றிருப்பதை எங்ஙனம் வருணித்துள்ளார்?

சோலையாகிய நடன அரங்கில் மயில்கள் நடனமாட, தாமரையாகிய மகளிர் தம் அரும்புகளாகிய விளக்குகளை ஏந்தி நிற்க, மேகங்கள் மத்தளம்போல் முழங்க, வண்டுக் கூட்டம் யாழ்போல் இன்னிசை எழுப்ப, நீரில் தோன்றும் அலைகள் திரைச்சீலைகளாய் அமைய, குவளை தன் மலர்களாகிய கண்களால் விழித்துப் பார்த்துக்கொண்டிருக்க மருதமாகிய அரசன் கொலுவீற்றிருந்தான் எனக் கம்பர் வருணித்துள்ளார்.

இலக்கணம்:

தெண்டிரை (தெண்மை+திரை)—பண்புத்தொகை.

தண்டலை (தண்மை+தலை)—பண்புத்தொகை.

ஆட, தாங்க, ஏங்க, நோக்க, பாட, காட்ட—வினையெச்சங்கள்.

3. தென்றல்

1. 'அங்கங்கே கலைகள்தேரும் அறிவன்போல்'—இவ்வுவமையை விளக்குக.

உவமானம்	உவமேயம்
மாணவன்	தென்றல்
மாணவன் ஆசிரியர் பலரை அடுத்து கல்வியும் ஒழுக்கமும் பெறுதல்	தென்றல் பல இடங்களிலும் சென்று மணமும் குளிர்ச்சியும் பெறுதல்
மாணவன் அடக்கமும் இன்சொல்லும் உடையனாய் விளங்குதல்	தென்றல் குளிர்ச்சி பொருந்தி மெதுவாக வீசுதல்

பொருத்தம்: அறிவிற்சிறந்த ஆசிரியர் இருக்குமிடமெல்லாம் சென்று கற்று அதன் காரணமாகப் பணிவும் இனிமையும் பொருந்தி ஒழுகுதல்.

தென்றற்காற்றுச் சோலைகளிற் புகுந்து, மலர்களின் நறுமணத்தை ஏற்று, குளங்களில் புகுந்து குளிர்ச்சியினைப் பெற்று, நீர்ப்பூக்களின் மணத்தை ஏற்று இருவாட்சி, முல்லை, மல்லிகை முதலிய கொடிகள் படர்ந்துள்ள பந்தல்களில் தாவி அங்குள்ள மலர்களின் மணத்தை ஏற்றுக் குளிர்ச்சி பொருந்தி மெதுவாக வீசுதல்.

4. ஞாயிறு

1. 'ஞாயிறு இல்லையேல் உலகம் இல்லை' என்பதை வாணிதாசன் எங்ஙனம் கூறியுள்ளார்?

ஞாயிறு ஒளியின் பிறப்பிடமாய் அமைந்துள்ளது. அது தனது பொன்மயமான ஒளியினைச் சோலைகள், புதர்கள் ஆகிய எல்லா இடங்களிலும் பரப்பி அனைத்தையும் பொன்மயமாக்குகிறது. தனது ஒளிக்காக ஏங்கி நிற்கும் உயிர்கட்கெல்லாம் ஊக்கத்தைத் தருகிறது. செந்நெல்லைப் பொன்னெல்லாய் மாற்றுகிறது. சிறுபுற்களின் நுனியில் நின்று சிரிக்கிறது. ஆகவே, ஞாயிறு இல்லையேல் இவ்வுலகம் இல்லையென்று வாணிதாசனுர் கூறுகிருர்.

5. இயற்கைத் தாய்

1. இயற்கை அன்னை எவ்வாறு மகிழ்வாள் என முடியரசன் கூறுகிருர்?

மலையில் வாழ்பவளாகிய இயற்கை அன்னை, உலகில் மக்கள் பசித்திருப்பர் என மனமுருகி, மலையை விட்டுக் கீழே இறங்கி ஆறு என்னும் பெயருடன் நெடுந்தொலைவு நடந்து எல்லா இடங்களிலும் கலைகள் செழிக்க வாய்க் கால்களாக ஓடிச் சென்று வயல்களிற் பாய்ந்து மலர்களை மலரச் செய்து நெற் கதிர்களைத் தோற்றுவித்துத் தம் மக்கட்கு உணவளித்துத் துன்பம் நீக்கி மகிழ்வாள் என்று முடியரசன் இயற்கை அன்னை மகிழும் விதம் பற்றிக் கூறுகிருர்.

இலக்கணம் :

மலர்க்கண்—உருவகம்.

கதிர்க்கை—உருவகம்.

6. கடல்

1. கடலில் முத்தும் பவழமும் விளைவதற்கு ஆசிரியர் கூறும் காரணம் என்ன ?

கடலானது பழங்காலத்தில் உலகம் போற்றும் சிறந்த தமிழ் நூல்களை எல்லாம் வாரி விழுங்கியது. அவ்வாறு, சிறந்த கலைகளை எல்லாம் அளவின்றி உண்டதனுலேயே இப்போது விலை மதிக்க முடியாத முத்துகளையும், பவழங் களையும் விளைவிக்கின்றது போலும் என்று ஆசிரியர் கடலில் முத்தும் பவழமும் தோன்றுதற்குக் காரணம் கற்பித்துக் கூறுகிருர்.

இலக்கணம் :

இலா—ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்.

7. தொண்டு புரிவீர்

1. தொண்டு புரிவோர்க்கு ஆசிரியர் சிங்கார வேலனுர் கூறுவன யாவை ?

"தொண்டு புரிவோர் ஒவ்வொருவரும் விடியற்காலை எழுந்திருக்கவேண்டும். செய்ய முற்படும் ஒவ்வொரு செயலையும் நன்கு ஆராய்ந்து செய்யவேண்டும். நாளை செய்து கொள்ளலாம் என்று எதையும் ஒதுக்கித் தள்ளக் கூடாது. இன்றே செய்திடும் நற்செயலால் இன்பமாகிய பயனை அடையலாம். ஆகவே, நல்லதையே எண்ணி சொல்லாலும் செயலாலும் நாள்தோறும் நல்ல தொண்டு புரிவீர்களாக!" என்று ஆசிரியர் சிங்கார வேலனுர் தொண்டு புரிவோர்க்குக் கூறுகிருர்.

இலக்கணம் :

சொற்செயல்—உம்மைத்தொகை.

நற்றெண்டு (நன்மை+தொண்டு)—பண்புத்தொகை.

எழுந்திடுக—வியங்கோள் வினைமுற்று.

(ஆ) சீட்டுக்கவி

1. ஆசிரியர் பாரதியார் சீட்டுக்கவியில் கூறியுள்ள செய்திகள் யாவை? (20 வரிகள்)

"எட்டையபுரத்தை ஆள்கின்ற வேங்கடேசுர எட்டப்ப பூபதியே! தமிழறிந்த மன்னர்கள் தமிழ் நாட்டில் இல்லை என்று மக்கள் கூறிவந்த வசைச் சொல், நீங்கள் மகுடம் புனைந்ததால் நீங்கிற்று. தமிழின் சுவை போற்றும் மன்னராய் விளங்குகின்றீர்கள். உலகம் போற்றும் புகழ் பெற்றுத் தமிழின் பெருமையை புகழ் உச்சியில் ஏற்றிவைக்கும் புலவர் இந்நாளில் இல்லையே என்று கூறும் வசை மறைய நான் இன்று கவிஞனாக உள்ளேன். எனது கவிதைகள் புதிய சுவை, புதிய பொருள், புதிய வளம், புதிய சொல், புதிய ஒளி ஆகியவை பெற்று விளங்கும் புகழ்க் கவிதைகள்; எந் நாளும் அழியாத புகழ்க் கவிதைகளாகும். அக்கவிதை களின் பெருமையுணர்ந்து பிரான்சு நாட்டுப் புலவர்களும் அவற்றைத் தங்கள் மொழியில் மொழி பெயர்த்துப் பாராட்டியுள்ளார்கள். அத்தகைய சிறப்புப் பெற்ற கவிதைகளை உங்களிடம் கொண்டுவந்துள்ளேன். வியப் பூட்டும் புதிய இசையில் அவைகளை நான் உமது திருமுன் பாட நீங்கள் கேட்டு இன்புற்று, எனக்குச் சால்வைகள், பொன் முடிப்புகள், பல்லக்கு, பரிவாரம் ஆகியவற்றைப் பரிசாக வழங்கி நீங்கள் பன்னெடுங் காலம் வாழ வேண்டும் என்று விரும்புகிறேன்" என்று பாரதியார் தமது சீட்டுக்கவியில் கூறியுள்ளார்.

(இ) இரட்டுறமொழிதல்

1. மயிலுக்கும் கரும்புக்கும் அமைந்துள்ள இரு பொருட் பொருத்தத்தை விளக்குக.

பொது :

மேனியெல்லாம் கண்உறல்—

மயில்	கரும்பு
தன் உடல் முழுவதும் அழகிய கண்களைப் பெற்றிருத்தல்.	தன் உடல் முழுவதும் கணுக்களைப் பெற்றிருத்தல்.

வேள் விரும்பும் தன்மை—

முருகனால் விரும்பப் படும் நிலை.	மன்மதனால் விரும்பப்படும் நிலை.

ஆனபசுந்தோகை—

தான் பெற்றுள்ள அழகிய தோகை.	தான் பெற்றுள்ள பசுமையான தோகை (இலை).

ஆடல்—

தோகை விரித்து ஆடுதல்.	காற்றில் அசைந்தாடுதல்.

இலக்கணம் :

பசுந்தோகை (பசுமை+தோகை)—பண்புத்தொகை.

(ஈ) சிற்றிலக்கியம்

1. திருவேங்கடத்தந்தாதி

1. திருமால் திருவடிகளின் பெருமையைப் பிள்ளைப் பெருமாள் ஐயங்கார் எவ்வாறு கூறுகிறார்?

"முதலை வாயில் அகப்பட்டுக் கதறிக் கஜேந்திரன் என்னும் யானை அழைக்க அதனைக் காக்க ஓடிய திருமாலின் திருவடிகள் திருவேங்கடத்தில் நிலைபெற்றன.

இராமாவதாரத்தில் காட்டில் நடந்தன. இழிபிறவியின ராகிய எங்கள் துயரத்தை ஒழிப்பதற்கு எங்கள் உள்ளத்தே தங்கியிருந்தன" என்று திருமால் திருவடி களின் பெருமையைப் பிள்ளைப் பெருமாள் ஐயங்கார் கூறுகிறார்.

இலக்கணம் :

சிற்றன்னை (சிறுமை + அன்னை)—பண்புத்தொகை.

தாழ்பிறப்பு—வினைத்தொகை.

அஞ்சல்—ஏவல் ஒருமை எதிர்மறை வினைமுற்று.

2. மதுரைக் கலம்பகம்

1. வெள்ளியரங்கம், என்பரவாமை, மாகவிமானம், தடமதிற்கூடல்—இருபொருள் எழுதுக.

வெள்ளி + அரங்கம் = மதுரையில் சிவபெருமான் நடமிடும் வெள்ளியாலான அவை.

எள்ளியர் + அங்கம் = இறைவனைத் தவிர பிற பொருள் களை வெறுத்து ஒதுக்கிய ஞானியரது உள்ளம்.

என்பு + அரவு + ஆமை = எலும்பும், பாம்பும், ஆமையும்.

என் + பரவாமை = எனது வணங்காதிருக்கும் தன்மை.

மா + கவி + மானம் = பெருமையுடைய தேவாரம் திருவாசகம் போன்ற பாடல்கள்.

மாக + விமானம் = விண்ணிலிருந்து இறங்கிய இந்திர விமானம்.

தட + மதில் + கூடல் = அகன்ற மதில்களையுடைய மதுரை.

தடம் + அதில் + கூடல் = (வெள்ளிமலையாகிய) இடத்தில் பொருந்தியிருத்தல்.

இலக்கணம் :

பரவாமை, உணர்வுருமை—எதிர்மறைத் தொழிற் பெயர்கள்.

விரும்பு பாடல்—வினைத்தொகை.

தடமதில்—உரிச்சொற்றொடர்.

3. சேக்கிழார் பிள்ளைத்தமிழ்

தாலப் பருவம்

1. பிள்ளைத்தமிழ் என்ருல் என்ன ?

தெய்வங்களையோ, மக்களிற் சிறந்தவர்களையோ குழந்தைகளாகப் பாவித்துக் குழந்தைப் பருவ நிகழ்ச்சிகள் எல்லாம் அமையப் பாடப்படும் நூல் பிள்ளைத்தமிழ் என்று சொல்லப்படும். குழந்தைப் பருவச் செயல்களைப் பத்துப் பருவங்களாகப் பிரித்து. பருவத்துக்குப் பத்துப் பத்துப் பாடல்களாகப் பாடப்படுவது வழக்கம். இஃது ஆண்பாற் பிள்ளைத்தமிழ் பெண்பாற் பிள்ளைத்தமிழ் என இரு வகைப்படும்.

2. தாலப் பருவம் என்ருல் என்ன ?

குழந்தையைத் தொட்டிலிற் கிடத்தித் தாய் தாலாட்டுப் பாடுவதுபோல, பாட்டுடைத் தலைவனைத் தொட்டிற் பருவத்துக் குழந்தையாகக் கற்பனை செய்து தாலாட்டுப் பாடுவதாக அமைத்துப் பாடப்படும் பருவம் தாலப் பருவமாகும்.

3. சேக்கிழாரை ஆசிரியர் எவ்வாறு அழைக்கிருர் ?

சேக்கிழார் பிள்ளைத் தமிழ் ஆசிரியர் மீனுட்சி சுந்தரம் பிள்ளை சேக்கிழாரைக் குன்றத்தூர்த் தலைவன் என்றும், எல்லா ஆகமங்களையும் உணர்ந்த புலவன் என்றும், தெய்வத் தன்மை வாய்ந்த சைவ சமயத் தலைவன் என்றும் அழைக்கிருர்.

4. குன்றத்தூர் எவ்வாறு சிறப்பித்துக் கூறப் படுகிறது ?

குன்றத்தூரில் மடங்களில் சோறு நிறைந் திருக்கும்; மக்கள் உள்ளங்களில் தூய்மை நிறைந் திருக்கும்; அவர்களது ஆடைகளில் பொன் நிறைந் திருக்கும்; தோள்களில் அணிந்துள்ள மாலைகளிலிருந்து மணம் வீசும்; வயல்களில் சேறு நிறைந்திருக்கும்; மாளிகைகளில் பலவகைச் செல்வங்கள் நிறைந்திருக்கும்; மேடைகளில் தென்றல் தவழும்; பாடல்களில் தெய்வத் தன்மை நிறைந்திருக்கும்; மக்கள் நெற்றிகளில் திருநீறு ஒளி வீசித் தோன்றும்; கறிகளில் நெய் மணம் கமழும்; யாக குண்டங்களில் எப்போதும் நெருப்பு எரிந்துகொண் டிருக்கும்; மக்களிடையே அன்பு பொங்கி வழியும்; திருவிழாக்கள் மிகுந்திருக்கும்; என்று குன்றத்தூர் சேக்கிழார் பிள்ளைத் தமிழ் ஆசிரியரால் சிறப்பித்துக் கூறப் படுகிறது.

(உ) வழிபாட்டுப் பாடல்கள்

1. திருநாவுக்கரசர் ஈசன் இணையடி நீழல் எத்தன்மையதென்கிறார் ?

குற்றமில்லாத வீணையின் ஒலியும், மாலைக் காலத்தே ஒளிரும் முழுநிலவும், மெதுவாகத் தவழ்ந்து வீசுகின்ற இளந்தென்றலும், சிறப்புமிக்க இளவேனிற் பருவமும், வண்டுகள் ஒலிக்கின்ற குளமும் போன்றது ஈசனுடைய திருவடி நிழல் என்று திருநாவுக்கரசர் கூறுகிறார்.

2. மாணிக்கவாசகர் இறைவன் எவ்வெவ்வாறு விளங்குவதாகப் பாடியுள்ளார் ?

பரந்த ஆகாயமாகவும், இந்நிலவுலகமாகவும், காற்றா கவும், நெருப்பாகவும், உடலாகவும் உடலினுள்ளே வாழ் கின்ற உயிராகவும், அழியாத உண்மைப் பொருளாகவும், ஓரிடத்திலும் இல்லாத பொய்யான பொருளாகவும், எல்லார்க்கும் தலைவனாகவும், 'நான்' என்றும் 'எனது' என்றும் ஆணவங்கொள்ளச் செய்து எல்லாரும் அறியாமையால் மயங்கிக் கூத்தாடச் செய்பவனாகவும், இறைவன் விளங்குவதாக மாணிக்கவாசகர் கூறியுள்ளார்.

3. தொண்டரடிப் பொடியாழ்வார் இறைவனிடம் யாது முறையிடுகிருர் ?

" திருவரங்கப் பெருமானே ! எனக்கு ஊரும் இல்லை ; உரிமையான இடமும் இல்லை ; உன்னைத் தவிர உறவும் இல்லை ; உன் திருவடிகளையே ஆதாரமாகப் பற்றவும் இல்லை ; ஆதரவற்றுக் கதறும் எனக்கு உன்னைத் தவிர வேறு ஆதரவும் இல்லை ; கருணைமிக்கவனுகிய நீயே என்னைக் காத்தருள வேண்டும்" என்று தொண்டரடிப் பொடியாழ்வார் இறைவனிடம் முறையிடுகிருர்.

4. ஏசுநாதரைத் துதித்தலால் விளையும் நன்மைகள் யாவை ?

ஏழை பங்காளனுகிய ஏசு பெருமானைத் துதிப்பதால் வானுலகமும் மண்ணுலகமும் மகிழ்ச்சி பெறும் என்றும், அறிவும் நன்மையும் சிறக்குமென்றும், குற்றங்களும் பாவங்களும் ஒழியும் என்றும், ஏசுநாதரைத் துதிப்பதால் விளையும் நன்மைகளென எச். ஏ. கிருட்டினப்பிள்ளை கூறுகிருர்.

5. உமறுப்புலவர் இறைவனை எவ்வாறு வாழ்த்தியுள்ளார் ?

"தேவர்கட்கும் உன்னுடைய தூதுவர்க்கும், வேதத்தைத் தெளிவாக உணர்ந்த மற்றவர்க்கும், பல உயிர்கட்கும் உணர்தற்கரிய பேரொளியாய் உயர்ந்து நிற்கும் அறிவு மயமான மேலான பொருளே ! என்றும் அழிவில்லாத மோட்சமாய் விளங்குபவனே ! நடுவு நிலைமை தவருமல் நின்று எப்பொழுதும் குற்றம் இல்லாமல் திருவிளையாடல் புரிந்து எல்லாக் காலங்களிலும் எல்லா இடங்களிலும் நீக்கமற நிறைந்துள்ள தலைவனே !" என்று உமறுப் புலவர் இறைவனை வாழ்த்தியுள்ளார்.

இலக்கணம் :

வீசுதென்றல் மூசுவண்டு வீங்கு இளவேனில்	} வினைத்தொகைகள்.

கூத்தாட்டுவான்—வினையாலணையும் பெயர்.

வாழ்த்துவன்—தன்மை ஒருமை வினைமுற்று.

கார்—மேகத்திற்குப் பண்பாகு பெயர்.

மாநகர்—உரிச்சொற்றொடர்.

வானம், பூமி—இடவாகு பெயர்.

ஏத்துவாம்—தன்மைப் பன்மை வினைமுற்று.

பேறு—முதல்நிலை திரிந்த தொழிற்பெயர்.

மாணவர் மனங்கொள்க!

என்றுங் காலை எழுந்திடுக!
எண்ணித் துணிவீர் ஒவ்வொன்றும்!

ஒன்றும் நாளை என்றென்றே
ஒதுக்கித் தள்ளல் நன்றன்றே!

இன்று செய்யும் ஆள்வினையால்
இன்பப் பயனும் எய்திடலாம்!

நன்றே எண்ணிச் சொற்செயலால்
நாளும் புரிவீர் நற்றொண்டே!

உரைநடைப் பகுதி

1. தமிழும் தமிழரும்

(திரு. வி. கலியாணசுந்தரனார்)

1. தமிழ் என்பதன் பொருள் யாது? சான்றுகள் தருக.

தமிழ் என்பதற்கு 'இனிமை' என்பது பொருள். தமிழ்ப் புலவர்கள், 'தமிழ் தழீஇய சாயலவர்' என்றும், 'தமிழ் சேர் காஞ்சி' என்றும், 'இனிமை' என்னும் சொல்லைத் தமிழ் எனப் பயன்படுத்தி இருப்பதிலிருந்து அறியலாம்.

2. அகவாழ்வு, புறவாழ்வு என்பன யாவை?

அகவாழ்வாவது, ஒத்த நலன், ஒத்த குணன், ஒத்த கல்வி முதலியன உடைய ஒருவனும், ஒருத்தியும் கூடி நடத்தும் இல்லற வாழ்வு.

புறவாழ்வாவது, அரசு, கல்வி, பொருள் முதலிய வற்றைக் கொண்டது ஆகும்.

3. பண்டைத் தமிழ் நாட்டில் சாதி இல்லை என் பதை ஆசிரியர் எவ்வாறு விளக்கியுள்ளார்?

பண்டைத் தமிழ்நாட்டில் பிறப்பால் சாதிப் பாகுபாடு இல்லை. நிலப் பாகுபாடு மட்டும் இருந்தது. இதனைப் "பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும், சிறப்பொவ்வா செய் தொழில் வேற்றுமை யான்" எனத் திருவள்ளுவர் கூறி யுள்ளார். இடைக் காலத்தில் தோன்றிய பிறப்பு உயர்வு தாழ்வும், தீண்டாமைக் கொடுமையும் நாட்டை அடிமைக் குழியில் வீழ்த்திவிட்டன என ஆசிரியர் விளக்கியுள்ளார்.

4. பழந்தமிழ் நாட்டில் பெண்கள் நிலை எவ்வாறு இருந்தது?

"தலைவனும், தலைவியும் ஒத்த கல்வியுடையவராய் யிருந்தனர்" என்னும் குறிப்பும், "பெண்மகள் தனக்கு இனிய ஒருவனைத் தனக்குரிய தலைவனாகத் தானே தெரிந்தெடுக்கும் உரிமை பெற்றிருந்தாள்" என்னும் குறிப்பும், இன்ன பிறவும், பழந்தமிழ் நாட்டுப் பெண்மக்கள் நிலையைப் புலப்படுத்தும்.

5. தமிழகத்தில் சிறந்து விளங்கிய கலைகள் யாவை? (20 வரிகள்)

தமிழகத்தில் கல்வி, இசை, ஓவியம், மருத்துவம், வானூராய்ச்சி முதலிய கலைகள் சிறந்து விளங்கின. தமிழ் இயல், இசை, நாடகம் என்னும் மூன்று வழிகளிலும் வளர்ந்து வந்தது. தமிழ்க் கல்வித் திறனை சங்க இலக்கியங்களும், பெரியபுராணம், கம்பஇராமாயணம், தேவாரம், திருவாசகம், நாலாயிர திவ்யப் பிரபந்தம் முதலிய இலக்கியங்களும் உணர்த்தின. நம் நாடு ஆங்கிலேயர்களிடத்தில் அடிமைப்பட்டு இருந்ததாலும், மக்கள் வயிற்றுப் பிழைப்பிற்காக ஆங்கில மொழியைப் பயின்றதாலும் நல்ல இலக்கியங்கள் தோன்றவில்லை.

தமிழ் நாட்டின் சிறந்த இசைக் கலையைச் சிலப்பதிகார அரங்கேற்று காதையும், தஞ்சை ஆப்ரகாம் பண்டிதர் இயற்றிய 'கருணமிர்த சாகரம்' என்னும் நூலும் எடுத்துக் கூறுகின்றன. நம் நாட்டின் மருத்துவ மாண்பை சித்த நூல்களால் அறியலாம். நாடி பார்த்து நோய் நிலை உணர்தலும், பாடாணங்களில் மருந்து செய்தலும் தமிழ் மருத்துவத்தின் சிறப்புகளாம்.

தமிழர் ஓவியக் கலையில் உயர்நிலை அடைந்திருந்தனர். சோழர் காலத்துக் கோயில்களும், கட்டடங்களும், மாமல்லபுரம், அமராவதி முதலிய இடங்களின் சிற்ப நுட்பங்களும், தமிழர்களின் அணிகலன்களும் அவர் தம் ஓவிய உயர்வை உணர்த்துவன. தாகூர் முதலிய கவிவாணரும், தமிழர்களின் ஓவியத் திறனைப் போற்றியுள்ளனர். "நெடுநிலை மாடத்து இடைநிலத்து இருந்துழி"

என்றும், "நிரைநிலை மாடத்தரமிய மேறி" என்றும், "வேயா மாடமும்" என்றும் "மான்கண் காலதர் மாளிகை இடங்களும்" என்றும் இளங்கோவடிகள் கூறியவற்றிலிருந்து கட்டடக் கலையின் சிறப்பு விளங்கு கிறது.

6. தமிழ்நாட்டு அரசியல் குறித்து ஆசிரியர் யாது கூறியுள்ளார்?

பழந்தமிழ் நாட்டு அரசியல் அறம், அன்பு, அருள் இவற்றை அடிப்படையாகக் கொண்டது என்பதை, "நெல்லும் உயிரன்றே; நீரும் உயிரன்றே; மன்னன் உயிர்த்தே மலர்தலையுலகம்" என்னும் புறநானூற்று அடிகளால் அறியலாம். கோல் கோடிய மன்னன் நாட்டில் வாழ்வதைவிடக் கடும்புலி வாழும் காடே நன்று. அரசின் பெற்றி உணர்ந்த தமிழ் மக்கள் அரசை உயிர் எனக் கொண்டார்கள். அதற்கேற்ப அரசும் அமைந் திருந்தது. அரசு நடுவு நிலையும், அருள் தன்மையும் பெற்றிருந்தது எனத் தமிழ் நாட்டு அரசியல் குறித்து ஆசிரியர் கூறியுள்ளார்.

7. தமிழ் மருத்துவத்தின் தனிச் சிறப்பு யாது?

நாடி பார்த்து நோய் இயல்பு உணர்தலும், பாடாணங் களில் மருந்து செய்தலும் தமிழ் மருத்துவத்தின் தனிச் சிறப்பாகும்.

8. தமிழ் மக்களது தொழில் முறைகளைப் பற்றி எழுதுக.

தமிழ் மக்களது தொழில் முறைகளைச் சிலப்பதிகாரம் இந்திரவிழவூரெடுத்த காதையில் மிகுதியாகக் காணலாம். அதில் பட்டினும் மயிரினும் பருத்தி நூலினும், கட்டு நுண்வினைஞர் என்றும், கிழியினுங் கிடையினுந் தொழில் பல பெருக்கியவர் என்றும், பாலாவியன்ன மிக மெல்லிய ஆடை நெய்தவர் என்றும், கூறப்பட்டிருப்பதை நோக்க இயற்கை இன்ப வாழ்விற்குத் தேவையான பல தொழில்கள் தமிழ்நாட்டில் இருந்தமை அறியலாம்.

9. தமிழர்களது வாணிகப் பெருக்கை விளக்குக.

தமிழ் நாட்டார் பிற நாட்டினரோடு செய்த வாணிகத்தால் நம் நாட்டுவளனும், தொழில் முறைகளும் புலனுகும். அந்நாளில் தமிழர் காலிற் பிரிவதோடு, கலத்திற் பிரிந்துங் கடல் கடந்து வாணிகம் செய்தனர். காலிற் பிரிதல், கலத்திற் பிரிதல், என்னும் வழக்கும், 'திரைகடல் ஓடியும் திரவியம் தேடு' என்னும் முதுமொழியும் தமிழரது கடல் வாணிகத்தைக் குறிப்பனவாம். பண்டு நாம் பாபிலோன், எகிப்து முதலிய நாடுகளோடு வாணிகத் தொடர்பு கொண்டிருந்ததை வரலாற்று ஆசிரியர்கள் எடுத்துக் கூறியுள்ளனர். பிற நாடுகளுக்குத் தேக்கு, சந்தனம், தந்தம், தோகை, மிளகு, ஏலம் முதலியன தமிழ் நாட்டிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்டமைக்குப் பல அகச்சான்றுகள் உண்டு.

2. சமுதாயச் சிற்பிகள்

(அறிஞர் அண்ணு)

1. தமிழகத்தில் ஏற்பட்ட சமுதாயப் புரட்சியைக் குறித்து ஆசிரியர் கூறுவது யாது?

ஒரு காலத்தில் சிலர் கல்வி கற்கத் தகுதியற்றவர் என்றும், சிலரே தகுதி உடையவர் என்றும் கருதப்பட்டு வந்தது. நல்ல வேளையாக இரத்தம் சிந்தாத சமுதாயப் புரட்சி ஒன்று எழுந்தது. நெடுங்காலமாகத் தகுதியற்றவர் என அடக்கி யொடுக்கி வைக்கப்பட்ட மக்களிடையே ஒரு வியப்பாற்றல் வீறிட்டெழுந்தது. கல்வி கற்கத் தகுதியற்றவர் எனக் கருதப்பட்டவர் மிகச் சிறந்த கற்றவரும் கற்பிக்கிறவரும் ஆயினர். அவர்கள் மனிதனுக்கு மனிதன் வேற்றுமையற்றவன் என்பதைப் புலப்படுத்தி விட்டனர். இதுவே தமிழகத்தில் ஏற்பட்ட சமுதாயப் புரட்சியாகும்.

2. **தமிழகத்தே கொடையுள்ளம் படைத்த செல்வர்கள் புரியும் அறச்செயல்களென ஆசிரியர் கூறுவன யாவை?**

தமிழகத்தே கொடையுள்ளம் படைத்த செல்வர் சிலர், பல கல்வி நிலையங்களைத் தோற்றுவித்தனர். வள்ளன்மை படைத்த செல்வர் சிலர் தமிழகத்தின் பல இடங்களிலும் தொடக்கக் கல்வி முதல் கல்லூரிக் கல்வி வரை பல கல்வி நிலையங்களைத் தோற்றுவித்துள்ளனர். இத்தகைய அறச் செல்வர்கள் இல்லையேல், மக்கள் இந்த அளவுக்கு முன்னேறியிருக்க இயலாது என்றும், ஆசிரியர் இருபத்தையாயிரம், ஓர் இலட்சம், இரண்டிலட்சம் என நன்கொடையளிப்பவர்களைக் காணும்போது தன் உள்ளம் இறும்பூதடைகிறதென்றும் கூறுகிறார்.

3. **கல்வித் தரம் உயர்வதற்கு மேற்கொள்ள வேண்டிய வழிகள் யாவை?**

கல்வித்தரம் உயர்வதற்கு ஆசிரியர்களுக்கான வேனிற்கால வகுப்புகளும், கருத்தரங்குகளும் நடத்த வேண்டும். ஆசிரியர்கள் காலத்துக்கேற்ற புதிய கருத்துகளை உணர்ந்து கல்வி வளர்ச்சிக்கு இன்றியமையாத செய்திகளைத் திரட்டிக்கொள்ளும் பொருட்டு நல்ல நூல் நிலையங்களையும் ஏற்படுத்தவேண்டும். இத்தகைய வாய்ப்புகளை நல்குவது வாயிலாக அவர்கள் வகுப்பில் நுழையும்போதே ஒருவிதப் புத்துணர்ச்சியுடன் நுழையக் கூடும். ஒவ்வோராண்டும் மத்திய அரசு மாநில அரசுக்கு உதவி புரிய முன் வரவேண்டும். ஒவ்வொரு மாநிலத்திலும் இருவர், மூவர் ஆசிரியர் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். அவர்கள் இந்த நாடு முழுவதும் சுற்றிப் பார்க்க வாய்ப்பளிக்க வேண்டும். இதற்காகும் செலவிற் பாதியை மத்திய அரசும், பாதியை மாநல அரசும், ஏற்றுக்கொள்ள வேண்டும். நூல்களைப் படிப்பதால் கிட்டாத அறிவு பல இடங்களைச் சுற்றிப் பார்ப்பதால் ஆசிரியர்களுக்குக் கிட்டுமாதலால் அதற்காக ஒரு திட்டத்தை மேற்கொள்ள வேண்டும்.

3. சடையப்ப வள்ளல்

(திரு. எஸ். வையாபுரிப் பிள்ளை)

1. சடையப்பரைத் 'தருமதேவதை' என்பது எவ்வாறு பொருந்தும் ?

சடையப்பர் மக்களுக்குப் பேருபகாரியாய் இருந்து அவர்களை இனிது காத்து வந்ததனால் அவரைத் 'தரும தேவதை' என்று தமிழ் அறிஞர்கள் போற்றினார்கள். அத னாலேயே, சிதம்பரத்திலே நடராசப் பெருமான் களித்துக் கூத்தாடுதலை மேற்கொண்டாராம். உலகத்தைக் காக்கும் தொழிலையுடைய திருமாலும் திருவரங்கத்திலே கவலை யற்றுக் கண் வளர்தலை மேற் கொண்டாராம். இவ்வாறு தேவர்களுக்கெல்லாம் தொழிலினின்று விடை கொடுத்து, அவர்கள் கவலையை நீக்கி மகிழ் வூட்டி வந்த பெரியாரைத் 'தருமதேவதை' என்று சொல்வது பொருத்தமாகும்.

2. சோழ மண்டல சதகத்தில் சடையப்பரின் பெருமை எவ்வாறு பாராட்டப்பட்டுள்ளது ?

சடையப்பர், 'நூற்றுக்கணக்கான மக்களுக்கு நாள் தோறும் பாலுஞ்சோறும் பரிந்தளித்தனர்' என்றும், ஏழைகளோடு ஏழையாய் வாழ்ந்தாலும் முடியுடை மூவேந்தர்களுக்கும் ஒரு முறை விருந்தளித்தபோது அவர்கள் விருந்தின் மேன்மையை உணர்ந்து 'திரிகர்த்த ராயன்' என்ற பட்டம் அளித்து சிறப்பித்தனர் என்றும் சோழ மண்டல சதகம் சடையப்பரின் பெருமையைப் பாராட்டுகிறது.

3. தமிழ் நாவலர் சரிதையில் சடையப்பர் பெருமை எவ்வாறு புகழப்பட்டுள்ளது ?

சடையப்பரின் வள்ளல் தன்மையை தமிழ் நாவலர் சரிதை 'அடையா நெடுங்கதவும் அஞ்சலென்ற சொல்லும் உடையான்' என்றும் புகழ்ந்து போற்றுகிறது.

4. கம்பர் சடையப்பரை எவ்வெவ்வாறு சிறப்பித்துள்ளார் ?

கம்பர் சடையப்பரைத் 'தான வீரன்' என்று பொருள் படும் 'கொடை மீளி' என்றனர்; அன்றியும் இவரை, "மண்ணவர் வறுமை நோய்க்கு மருந்தன சடையன்" எனவும் கூறுகிருர். 'சொன்ன சொல் தவருத கொடையாளி' எனவும் குறிப்பிட்டு, இறுதியில் 'கண்ணன் என்றே கருதி 'வெண்ணெய் வாழ் கண்ணன்' என்றும் புகழ்ந்துள்ளார்.

5. சோழ மண்டல சதகத்தில் சடையப்பரின் செல்வச் சிறப்பை விளக்கக் கூறப்பட்டுள்ள கதைக் குறிப்பை எழுதுக.

சடையப்பர் ஏழைகளோடு ஏழையாய் வாழ்ந்தாலும், அரசர்களுக்குச் சமமாய், அவர்களும் வியந்து கொண்டாடும்படியாகவும் பெருக வாழ்ந்தார். ஒரு முறை சேர சோழ பாண்டியர் என்ற முடியரசர் மூவரையும் இவர் விருந்துக்கு அழைத்தனராம். விருந்தின் மேம்பாட்டினை உணர்ந்த அவ்வரசர்கள் இவருக்கு 'திரிகர்த்தராயன்' என்ற பட்டப்பெயரை அளித்தார்களாம். இவ்வாறு சோழ மண்டல சதகத்தில் சடையப்பரின் செல்வச் சிறப்பு கூறப்பட்டுள்ளது.

6. கம்பருக்கும் சடையப்பருக்கும் ஏற்பட்ட தொடர்பின் நிலையையும், அது வளர்ந்த தன்மையையும், அதனல் உண்டான நன்மையையும் எழுதுக. (20 வரிகள்)

சடையப்பரின் அருள் வாழ்க்கையிலே அரும்பிய ஒரு நன்மலர்தான் அவருக்கும் கம்பருக்கும் இடையே ஏற்பட்ட பெரு நட்பு. இளமைதொட்டே இந்நட்பு ஏற்பட்டது. சடையப்பர் மாணவராய் பள்ளிக்குச் செல்லும்பொழுது கம்பர் ஏடு தூக்கிச் சென்றனர் என ஒரு கதை வழங்குகிறது. இவரது வீட்டிலேயே கம்பர் வளர்ந்து வாழ்ந்தவர் என்று சோழ மண்டல சதகம்

கூறுகிறது. இவை இருவரும் அறிமுகமாவதற்குப் பொருந்தலாம். நட்பினராதற்கு வேறு காரணம் இருந்தது. கல்வியிற் சிறந்த கம்பரின் கவித்துவ சக்தி சடையப்பரை வயப்படுத்தி விட்டது. அவரது அறிவாற்றல் வியக்கத்தக்கதாய் இருந்தது. இவற்றையெல்லாம் சடையப்பர் அறிந்து மகிழ்வதற்குத் தக்க வாய்ப்புகளும் இருந்தன. எனவே, தாம் செல்வர் என்பதையும் கம்பர் தமது வீட்டில் ஏவல் புரிந்து வந்தவர் என்பதையும் அறவே மறந்தார். காலஞ் செல்லச் செல்ல இந்நட்பு முதிர்ந்து பெருகியது. இருவர் உள்ளத்திலும் திருமாலின் மீதுள்ள பக்தி பெருகத் தொடங்கியது. கம்பர் இவரைக் கண்ணன் என்றே கருதி விட்டார். சடையப்பரும் கம்பரைத் திருமாலின் சிறந்த அடியார் எனக் கருதி அவர் மீது பக்தி கொள்ளலாயினர். இங்ஙனம் இருவரிடையேயும் அன்பு முதிர்ந்து நட்பாகி, நட்பு முதிர்ந்து பக்தியாய்ப் பரிணமித்து விட்டது. இப்பக்தியினுல் கம்பர் இராம சரிதத்தை இயற்ற வேண்டும் என்று எண்ணினுர்.

7. கம்பர் இராமாயணத்தை அரங்கேற்றிய விழாக் காட்சிகளை எழுதுக.

கம்பர் தமது இராமாயணத்தை சடையப்பரது திருவெண்ணெய் நல்லூரிலேயே அரங்கேற்றினுர். இதனை சடையப்பர் மிக அன்போடு போற்றியிருத்தல் வேண்டும். சடையப்பர் தம் ஊர்புறத்துள்ள அழகிய சோலையில் அவரது அன்பே வடிவெடுத்தாற் போன்ற பெருமை வாய்ந்த மணிமண்டபம் ஒன்று வனப்புத் தோன்ற அமைத்தனர். அப்பூச்சோலையில் இயற்கையன்னை அமைதியாய் விளங்குகிருள். மணிமண்டபத்தின் நடுவே கம்பர் கம்பீரமாக வீற்றிருக்கிருர். அவரை அடுத்துத் தமிழ் அறிஞர் பலர் சூழ்த்திருக்கின்றனர். வாயிற்படியருகே சடையப்பர் வீற்றிருக்கிருர். சோலையின் வாயிலில் காவலாளர் சிலரும் நிற்கின்றனர். தமிழ்ச் செல்வர் சிலர் அறிமுகமுள்ள காவலாளரின் வாயிலாக உள்ளே வந்து நெருங்கியிருந்தனர். ‘உலகம் யாவையும் தாமுளவாக்கலும்’ என்னும் மதுரத் திருவாக்குக் கம்பரது இதயத்திலிருந்து பொங்கி எழுந்தது. மண்டபம் நிறைந்து பூஞ்சோலையிற் பரந்துலவி மக்கள் இதயங்களில் குடி கொண்டு நின்றது. இத்தெய்வத் திருவாக்கு இராமாயண

கீதமாய்க் கரைந்து பெருகித் தமிழுலகில் வெள்ளமாய்ப் பாய்ந்தது என்று அரங்கேற்று விழாக் காட்சி சிறப்பிக்கப் பட்டது.

8. சடையப்பரின் குலத்தோர் பெருமையைக் கம்பர் எவ்வாறு பாராட்டியுள்ளார்? அதன் மூலம் நாம் அறிவது என்ன?

இராம சரிதத்தின் இறுதிப் பகுதி அரங்கேறலாயிற்று. கைகேயியின் சூழ்வினையால் தடைபட்டுச் சீதையைக் கவர்தல் என்னும் சோக நிகழ்ச்சியால் இடையீடுற்ற முடிசூட்டுவிழா, சிறப்பாக வாசிக்கப் பெற்றது. விரிகடல் உலகம் ஏத்தும் வெண்ணெய்மன் சடையன் வண்மை மரபுளோர் கொடுக்க வாங்கி வசிட்டனே புனைந்தான் மௌலி" எனச் சடையப்பரின் பெருமையைக் கம்பர் பாடியுள்ளார்.

இதன் மூலம் கம்பர் தன்னை ஆதரித்த சடையப்ப வள்ளலின் நன்றியை மறவாமல் போற்றியிருத்தலை அறியலாம்.

9. இராமன் முடி சூடிய காட்சி கம்பரால் எவ்வாறு கூறப்பட்டுள்ளது? அதனல் நாம் அறியக் கூடியது யாது?

இராமனது அரியணையை அனுமன் தாங்கிக் கொண்டிருக்க, அங்கதன் இராமனது உடைவாளை ஏந்திக் கொண்டிருக்க, பரதன் வெண் கொற்றக் குடையைப் பிடித்திருக்க, இலக்குவனும், சத்ருக்கனும் வெண்சாமரம் வீச, உலகோர் புகழும் சடையப்ப வள்ளலின் முன்னோர்கள் மணி முடியை எடுத்து வசிட்டனிடத்தில் கொடுக்க, அவன் இராமனுக்கு முடிசூட்டினன் என்று இராமன் முடி சூடியமையைக் கம்பர் கூறுகிறார். அதனல் நாம் கம்பர் செய்நன்றி மறவாச் செம்மல் என்பதை அறிகிறோம்.

4. கலையின் விளக்கம்

(டாக்டர் ரா. பி. சேதுப்பிள்ளை)

1. கலைகளை எத்தனை வகைகளாகப் பகுக்கலாம்? அவற்றைப் பற்றி விளக்கி எழுதுக.

கலைகளைக் "கவின் கலை" என்றும், "பயன் கலை" என்றும் இரு வகைகளாகப் பகுக்கலாம். கண்ணையும், செவியையும் கவர்ந்து அவை வாயிலாக மனத்திற்கு இன்பம் ஊட்டும் கலைகள் கவின் கலைகளாகும். மக்கள் வாழ்க்கைக்குப் பயன்படும் பலதிறப்பட்ட பொருள்களை ஆக்கிக் கொள்வதற்குச் சாதனமாகிய கலைகள் பயன் கலைகள் எனப்படும்.

2. கலைமகள் எங்கெங்கு உறைகிருளெனப் பாரதியார் கூறுவதை ஆசிரியர் எவ்வாறு விளக்குகின்ருர்?

கவி இயற்றும் கலைவாணர் கருத்திலும், உள்ளொளி வாய்ந்த உரவோர் மனத்திலும், உயரிய மறையிலும், மக்களின் மழலை மொழியிலும், மாதரின் மதுரப் பாட்டிலும், கீதம் பாடும் குயிலின் குரலிலும், கிளியின் செந்நாவிலும், அழகுமிக்க ஓவியங்களிலும் சீரிய சிற்பங்களிலும், கலைமகள் உறைகிருளெனப் பாரதியார் கூறுவதாக ஆசிரியர் விளக்குகிருர்.

3. கலைமாது யார் பணிகளில் பண்புற்று இலங்குகின்ருள்?

இரும்பை உருக்கி படை வழங்கும் கொல்லரும், தண்ணிய மரத்தில் பணிபுரியும் தச்சரும், மட்பாண்டங்களை வனையும் குயவரும், ஆடை நெய்யும் சாலியரும், மக்கள் வாழ்க்கைக்குத் தேவையான பல்பணி புரிவதால் அவர்கள் பணிகளில் கலைமாது பண்புற்று இலங்குகிருள் என்று ஆசிரியர் கூறுகிருர்.

4. கலைமகள் அறிவுத் தெய்வம் என்பதனை நீ எவ்வாறு நிலை நாட்டுவாய்?

வேதம் பயிலும் வேதியரும், வீரம் விளைக்கும் வேந்தரும், வான் பொருளீட்டும் வணிகரும், தாளாண்மையிற் சிறந்த வேளாளரும், ஒருங்கே வணங்கும் தெய்வம் ஆதலாலும், மக்களின் உள்ளத் தாமரையில் உறைந்து அவர்கட்கு நல்ல வழிகளைக் காட்டுவதனாலும், மேலோர் கீழோர் என்றும் செல்வர் வறிஞர் என்றும், முதியோர் இளையோர் என்றும், பாராது, அறிவினை விரும்புவோர் அனைவருக்கும் அருள் செய்வதாலும் கலைமகள் அறிவுத் தெய்வம் என்று கூறலாம்.

5. நாமகளின் அருள்பெறப் பாரதியார் கூறும் வழிபாடு யாது?

தமிழ் நாட்டிலுள்ள வீடுதோறும் கலையின் ஒளி திகழ வேண்டும். வீதிதோறும் இரண்டொரு பள்ளி இலங்க வேண்டும். நகரந்தோறும் கலாசாலைகள் ஓங்கவேண்டும். கல்வி நலம் அறியாத கசடர் வாழும் ஊர்களை தீயினுக்கு இரையாக்க வேண்டும். இவ்வாறு அறியாமையை நீக்கி அறிவு மணங்கமழச் செய்வதே நாமகளின் அருள் பெறுதற்குரிய நல்ல வழிபாடென்று பாரதியார் கூறுகிறார்.

6. எழுத்தறிவித்தலே எல்லா அறங்களிலும் தலையாய அறம் என்பதற்குரிய காரணங்கள் யாவை?

"எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்" என்னும் உண்மையை உணர்ந்து போற்றியவர்கள் பழந்தமிழ் மக்கள். கல்வி நலம் வாய்ந்தவரே மாந்தர் என்றும், மற்றையோர் விலங்கனையர் என்றும் திருக்குறள் கூறுகின்றது. "கற்றல் கேட்டல் உடையார் பெரியார்" என்றார் ஞானசம்பந்தர். கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியாம் இறைவன், "கல்லார் நெஞ்சில் நில்லான்" என்பதை உணர்ந்தால் இறைவனை வணங்கும் ஆலயங்களை அமைப்பதற்கு முன்னே அறிவினை வளர்க்கும் கல்லூரிகளை அமைத்தல் சிறந்தது என்பதை

அறியலாம். இதனாலேயே, ஏழை எளியவர்க்கு எழுத்தறிவிக்கும் அறம், ஏனைய எல்லா அறங்களிலும் தலையாய அறம் என்று பாரதியார் கூறுகிறார்.

7. தமிழ் நாட்டின் சிறப்பினைப் பற்றி எழுதுக.

தமிழ் நாடு பல்லாண்டுகட்கு முன்னே அறம் வளர்த்த சிறப்புடையது. வருந்தி வந்தவர் பசி நீங்க உணவளித்து அவர் மகிழ்ச்சியைக் கண்டு திளைத்தது. முல்லைக் கொடி படர்வதற்குத் தன் பொற்றேரைத் தந்த புரவலன் வாழ்ந்தது. வழி நடந்து செல்வோர் வருந்தா வண்ணம் இனிய சாலைகளும் சோலைகளும் அமைத்து அறம் வளர்த்தது. இறைவனுக்குச் செம்மை சான்ற கோயில்களும் கோட்டங்களும் எடுத்தது என்று தமிழ் நாட்டின் சிறப்பினை ஆசிரியர் கூறியுள்ளார்.

5. 'நிற்க அதற்குத் தக!'

(டாக்டர். மு. வரதராசனார்)

1. இன்று காந்தியடிகளைப் பற்றி மக்கள் கொண்டுள்ள கருத்து யாது?

"காந்தியடிகள் மிகப் பெரியவர். அவர் வழியில் நடக்க நம்மால் இயலாது. அவரைப் போற்றி வணங்குவது நம் கடமை" என்பது இன்று காந்தியடிகளைப் பற்றி மக்கள் கொண்டுள்ள கருத்தாகும்.

2. பாரதியாரும், திரு. வி. கவும் காந்தியடிகளை எங்ஙனம் போற்றிப் புகழ்ந்துள்ளனர்?

பாரதியார் காந்தியடிகளின் வழியே சிறந்தது என்றறிந்து அவரைப் போற்றிப் பாடினார். பாரத தேசந் தன்னை வாழ்விக்க வந்த காந்தி மகாத்மா நீ வாழ்க! என

வாழ்த்துக் கூறினர்; முடிவிலாக் கீர்த்தி பெற்ருய்; புவிக்குள்ளே முதன்மையுற்ருய் என்று அவர் பெறப் போகும் புகழையும் தலைமையையும் உணர்ந்து பாடிவிட்டார்.

திரு. வி. க. காந்தியடிகளும் மனித வாழ்க்கையும் என்ற நூலை இயற்றி அவரது வாழ்வின் பெருமையை விளங்க வைத்தார்.

3. காந்தியடிகள் கூறிய அறிவுரைகளின் அடிப்படைகள் யாவை? அவர் எதை மேற்கொண்டு வாழ்ந்தார்?

காந்தியடிகள் கூறிய அறிவுரைகளின் அடிப்படைகள் அன்பும், உண்மையும் ஆகும். அவற்றுள் உண்மையைப் போற்றி அன்பையே மேற்கொண்டு வாழ்ந்தவர் காந்தியடிகள்.

4. உண்மையும் அன்பும் புறக்கணிக்கப்படுவதற்கு ஆசிரியர் மு. வ. கூறும் காரணங்களை விளக்கமாக எழுதுக.

மனித மனத்தின் இயல்பான குறுகிய நோக்கம் உண்மையைப் போற்ற இயலாதபடிச் செய்கிறது. பண்டு பண்டமாற்று முறை இருந்ததால் செல்வத்தை எண்ணிக் கையில் எண்ணி மதிப்பிட வாய்ப்பில்லை. பணப் புழக்கம் வந்த பிறகு அதனைக் குறுக்கு வழிகளில் தேடும் முயற்சியும் வாய்ப்பும் பெருகின. அத்தகைய குறுக்கு வழிகளுக்கு உண்மை இடையூருய் உள்ளது. ஆகையால் உண்மை புறக்கணிக்கப்படுகிறது. தன்னலப் பெருக்கினுல்தான் பணத்தைப் பெருக்க இயலுகிறது. தன்னலம் பெருகியவர்களே பணத்தைப் பெருக்கி வாழ்வை வளமாக்கிக் கொள்ள இயலுகிறது. அன்பு தன்னலத்திற்கு இடையூருனது. ஆகவே, இன்றைய உலகத்தாரின் முதல் முயற்சியாகிய பண நாட்டத்துக்கும் அன்பு இடையூருனது. வெற்றியுடன் விளங்குவோரின் வாழ்வில் (பெரும்பாலும்) உண்மையும் அன்பும் காணமுடியாமற் போகின்றன. மற்றவர்களும் அவர்களைப் பின்பற்றுவார்கள் ஆதலால் அவர்களும் உண்மையையும் அன்பையும் மதிப்புடன் போற்றுவதில்லை என்று மு. வ. கூறுகிருர்.

5. காந்தியடிகள் ஏன் இராட்டையைப் பரப்பினர் ?

காந்தியடிகள் அறிவுறுத்திய திருத்தங்களுள் ஒன்று பணத்தை மதிக்காமல் உழைப்பை மதிக்கவேண்டும் என்பது. உடலுழைப்பு இல்லாமல் உண்ணுதல் திருட்டுக்கும் சமமானதே என்ருர். ஒவ்வொருவரும் இராட்டையால் நூற்க வேண்டும் என்று வற்புறுத்தியதற்குக் காரணம் இதுவே. நாட்டின் நெருக்கடியான நேரங்களில் ஓய்வில்லாமல் உழைத்தபோதும் நூல் நூற்கத் தவறியதே இல்லை காந்தியடிகள். அன்புநெறி வாழவேண்டுமானல், அது தவிர வேறு வழியில்லை என்பது அவர் கண்ட முடிவு. அதனலேயே அவ்வாறு பிடிவாதமாய் இருந்தார். தம்மைச் சார்ந்தவர்களையும் அதனைக் கடமையாக மேற்கொள்ள வேண்டும் என்று வற்புறுத்தினர்.

6. 'உண்மையின் ஒளியை மறைக்க வல்ல திரைகள் என்று அவர் எவற்றைக் கருதினர் ?

தேவைக்குமேல் பொருள் சேர்த்தல், தேவைக்குமேல் நுகர்தல், ஆடம்பர வாழ்க்கை எல்லாம் உண்மையின் ஒளியை மறைக்கவல்ல திரைகள் என்பது அவர் கருத்து ஆகும்.

7. விடுதலை விழாவில் காந்தியடிகள் ஏன் கலந்து கொள்ளவில்லை ?

விடுதலை விழாவில் காந்தியடிகள் கலந்துகொள்ளாததற்குக் காரணம் நவகாளிப் பகுதியில் வாழ்ந்த மக்களின் அச்சத்தையும், நடுக்கத்தையும், பூசலையும், பகைமையையும் போக்குவதற்காக அங்கு செல்லவேண்டியமையேயாகும்.

8. உண்மையின் ஒளியை அவர் எவ்வாறு காண முடிந்தது ? விளக்கி எழுதுக.

நாட்டு விடுதலை விழாக் கொண்டாட்டத்தில் கலந்து கொள்ளாது நவகாளிப் பகுதி மக்களின் அச்சத்தைப் போக்க அங்கு நடந்தே சென்ருர். எல்லாரையும் இந்நாட்டு மன்னராக்கிய அந்தச் சான்ரேர் இந்நாட்டுக்

குடியானவனின் உடையே போதும் எனத் தம் வாழ்வை முடித்துக் கொண்டார். தம்மை வரவேற்பதற்காக அரண் மனைகள் காத்துக் கிடந்த நிலையிலும், எளிய மக்களின் சேரிப் பகுதி குடிசையே போதும் என்று அமைத்துக் கொண்டார். குறைந்த தேவைக்கு மேல் எதையும் விரும்பாத துறவறம், அவர் உலகிற்குக் காட்டிய புதுமை. தமக்காகக் கட்டப்பட்ட கோயில்களையும் மாற்றியமைத்த துறவு மனம், அவருடைய தூய மனம். தமது பாராட்டு இதழ்களைப் படிக்காமலேயே ஏலமிட்ட நன்னெஞ்சம் அவரது உயர்ந்த நெஞ்சம். தமது பிறந்த நாள் விழாவை யும் சர்வோதய விழாவாக மாற்றிய மனம் அவரது எளிய மனம். இவ்வாறெல்லாம் எளிமையை மேற்கொண்டு வாழ்வதிலேதான் உண்மையின் ஒளியை அவர் காண முடிந்தது.

9. காந்தியடிகள் ஆடம்பரத்தை ஏன் வெறுத்தார்?

மற்ற மனிதர்களைத் தாழ்த்துவதற்கும், வேறுபடுத்து வதற்கும் காரணமாய் இருப்பதாலேயே ஆடம்பரத்தை அவர் மிகமிக வெறுத்தார்.

10. காந்தியடிகள் நெறிக்கு எப்போது நல்ல செல்வாக்கு ஏற்படும் என ஆசிரியர் கூறுகிறார்?

புகழ் விருப்பங்களும், ஆடம்பர ஆசைகளும் உண்மையின் ஒளியை மறைக்கும் மேகங்களாய் உள்ளன. இந்தக் காலம் கருமேகங்கள் நிறைந்த வானம் போன்று உள்ளது. மப்பும் மந்தாரமும் வானத்தில் எப் போதும் உள்ளன அல்ல. கரு முகில்கள் எப்போதும் வானத்துக் கதிரவனை மூடி மறைக்க இயலாது. அவை விலகிப் பகலவன் ஒளி வீசும் காலம் வரும். அப்போது காந்தியடிகளுடைய நெறிக்கு நல்ல செல்வாக்கு ஏற்படும் என ஆசிரியர் கூறுகிறார்.

6. சென்னைக் கடற்கரை

(டாக்டர் அ. சிதம்பரநாதச் செட்டியார்)

1. சென்னைக் கடற்கரையோரமாக வாழக் கொடுத்து வைத்தவர் எவரெவர்?

சென்னைக் கடற்கரையோரமாக வாழக் கொடுத்து வைத்தவர் பலராவர். அல்லும் பகலும் அறுபது நாழிகையும் அங்ஙனே வாழ்ந்து வருவோர் ஆவர். இவரேயன்றிப் பகலில் மட்டும் அதனிலும் பத்து நாழிகை முதல் இருபத்தைந்து நாழிகை வரையே கடற்கரையோரமாகக் கட்டப்பட்டுள்ள கண்ணைக் கவரும் மாளிகையில் தங்கியிருப்போர் சிலருண்டு! அவர்கள் வடபால் கப்பல் பகுதி அலுவலாளர் முதலாகவும், அரசாங்கக் காரியாலய அதிகாரிகள் இடையாகவும், தென்பால் மாகாண ஊர்க் காவலரின் அதிகாரிகள் கடையாகவும் உள்ளோர் ஆவார்.

2. வண்டியை இழுத்துச் செல்பவர் எக்குறளை நினைவு படுத்துகின்றனர்? விளக்குக.

வண்டியை சிலர் தள்ள சிலர் முட்ட சிலர் இழுக்கப் பார்ப்போரை "அறத்தாறு இது என வேண்டா சிவிகை பொறுத்தானோடு ஊர்ந்தான் இடை" என்ற திருக்குறள் நினைவு படுத்துகின்றது.

3. கடற்கரை யோரத்தில் நிறுத்தப்பட்டுள்ள கார்கள் பற்றிக் கட்டுரையாசிரியர் கூறுவதென்ன?

கடற்கரையோரத்தில் நிறுத்தப்பட்டுள்ள கார்கள் பற்பல வகையானவை. பற்பல பெயருடன் கூடியவை. கடற்கரையோரமாகக் கீழ்ப்பால் ஒரு பெருந்தொடர் போல நிறுத்தப் பட்டிருக்கும். தொலைவிலிருந்து பார்ப்போர் சிலவிடங்களில் இவையென்ன பிணைக்கப்பட்ட மோட்டார் சங்கிலியோ என நினைக்கக் கூடும்.

4. பெண்டிர் காரேட்டுவதைக் கண்ட நாட்டுபுற மக்கள் கூறுவது என்ன?

பெண்டிர் காரோட்டுவதைக் கண்ட நாட்டுபுற மக்கள் மூக்கின் மேல் விரல் வைத்து இவரென்ன ஆடவரினுங் கடிது செலுத்திப் போகின்றனரே! நன்று நன்று! ஆடவரை வெல்லப் பார்க்கின்றனர். உலகக் கேட்டின் அறிகுறியா இது? எனக் கூறிச் செல்வர்.

5. கடற்கரைக்கண் ஒருவருக்கொருவர் வணக்கம் செய்து கொள்வது எங்ஙனம் விளக்கப் படுகிறது? (20 வரிகள்)

கடற்கரைக்கண் கற்றரையின் மீது நடந்து செல்லும் சிலருக்கு வேறுசிலர் கைம்மாறு கருதாது கும்பிடு போடுவதையும், கையை ஆட்டி தலை ஆட்டத்தைப் பெறுவதையும், அஞ்சலி செய்து அரைக் கும்பிடு வாங்குவதையும், கைக்கும்பிடு கொடுத்துக் கண் கும்பிடு வாங்குவதையும், கைக்கும்பிடு கொண்டு புன்முறுவல் கும்பிடு வாங்குவதையும் கண்டு எத்தனை விதமான கும்பிடு ஐயா! என்பாரும், கும்பிடு போட்டுக் கும்பிடு பெருவழி என்ன செருக்கு இவனுக்கு என்று குறை கூறுவோர் சிலர். செய்த அஞ்சலியைத் திருப்பிச் செய்ய மதியா அறியா முடியா இவன் வேறெதனைக் கொடுப்பினும் திருப்பிக் கொடுப்பனே! கொடான் கொடான்! எனக் கூறிப் போவோர் சிலர். முன்னெரு நாள் கும்பிடு மறந்து சென்ற ஒருவன் பின்னெரு நாள் நண்பனைக்கண்டு அஞ்சலி செய்யுங்கால் அந்நண்பன் இப்பொழுதென்ன ஏதேனும் என்னிடம் ஆக வேண்டுவதுண்டா? அன்று நான் செய்த அஞ்சலிக்கு மாற்றஞ்சலியின்றி வெட்கிப் போகும்படிச் செய்தாயே அஃதென்ன? எனக்கேட்டு நிற்பதையும் சமாதானம் பெறுவதையும் காணலாம். அவ்வாறு கூறப்படும் சமாதானங்களுள் நீ கும்பிடு போட்டதை நான் பார்க்கவே இல்லை. உன்னை யான் பார்க்கவே இல்லை என்பவை பெரும்பாலும் கேட்கப்படும். பின்னும் விடாது, ஆனல் மெய் மறந்து சென்றனையோ? கண்ணெரு பக்கம் மனமொரு பக்கமோ? என்று சிலர் கேட்கும் வினுக்களும் காதில் விழும் என்று விளக்கப் பட்டுள்ளது.

6. உயர்ந்த ஆட்சியாளருக்குச் செலுத்தப்பட்ட வணக்கமும் அதன் விளைவும் எவ்வாறு விளக்கப் படுகின்றன.

நடந்து செல்வோருள் சிலர் உயர்ந்த ஆட்சியாளர் எதிரே கண்டு அஞ்சலி செய்வோர்க்குத் தம்கையிற் பிடித்த கோலினல் அவர்கள் கும்பிடிட்டுச் செல்வதைக் காணின் வந்தனந் தந்ததற்குத் தண்டனையோ இது எனத்தோன்றும். அவருக்குக் கும்பிடு மறுநாளும் போட்டு அவர் கோலசைவு காண விழைக்கின்றவர், குட்டுப் பட்டாலும் மோதிரக் கையினற் குட்டுபட வேண்டும் என்று நினைப்பவர்க்கு ஒப்பாவர் என்று உயர்ந்த ஆட்சியாளருக்குக் செலுத்தப்பட்ட வணக்கமும் அதன் விளைவும் விளக்கப்படுகின்றன.

7. கடற்கரையில் செல்வோரின் உடைகளைப்பற்றி ஆசிரியர் கூறுவதென்ன ?

கடற்கரையில் செல்வோரின் உடைகளைப்பற்றி ஆசிரியர், வயிறு விரியப் பட்டாடை தரித்துப் பலங் கொள்ள நடப்பர் சிலர் என்றும், நீண்ட காற்சட்டை, சிறு கைச்சட்டை, அதன் மீதொரு சட்டை, கையிலே ஒரு குட்டை, கழுத்திலே காலருடன் டை இவற்ருேடு நடப்பர் சிலர் என்றும்; 'மேனுடு வேறு; கீழ்நாடு வேறு; ஆனல், இரண்டும் சேரின் பேறு' என்பதை விளக்குவார் போன்று மேனுட்டு உடையும், நம் நாட்டு உடையும் கலந்துடுத்துப் போவார் சிலர் என்றும்; அங்கு உலாவுவதற்கென்றே வைத்திருக்கும் சீனப் பட்டினல் ஆய கோட்டையும். பாப்ளின் பட்டினலாய ஷர்ட்டையும், பாலாடையன்ன மேலாடையாய் விளங் கும் மல்லையும், கல்கத்தாச் சிலிப்பரையுந் தரித்துப் போவர் சிலர் என்றும்; 'உடுப்பவை இரண்டே' என்ற நக்கீரனர் மொழியை மெய்யாக்குபவர் போன்று ஈராடையே உடுத்துப் போவர் மிகச் சிலர் என்றும்; ஆடையில்லா மனிதர் அரை மனிதர்; ஆதலால் ஆடை யின்றிப் போவார் ஆங் கருமையே என்றும் கூறுகிருர்.

8. கடற்கரையில் காணும் இரு பிச்சைக்காரர் களின் நிலைமையை எழுதுக.

கடற்கரையில் நடந்து செல்வோர் இரு பிச்சைக்காரர் களைக் காணத் தவருர். "அங்கமெல்லாம் குறைந்தழுகு தொழு நோயினுல் பார்ப்போர் மனத்தில் இரக்கத்தையும், அச்சத்தையும் உண்டாக்குபவனுய் உள்ளான் ஒருவன். எலும்பெல்லாம் மெய்ந்நிறைந்து, நரம்பெழுந்துலறிய நிரப்பாமென்ருேளுடன் நரைத்த தலைமயிரினை உடைய ளாய், குழறும் வாயினளாய், 'உங்கள் வாய்க்குத் தாம்பூலம் என் வயிற்றுக்குச் சோறு; ஒரு பைசா போட்டு விட்டுப் போங்கள்!' என்று நா வற்றக் கதறுபவளாய் உள்ளாள் ஒருத்தி. இருவரையும் மேரி மகாராணி கல்லூரியின் எதிரேயுள்ள கற்றரையில் காணக்கூடும். அவர்களது நிலையும் துன்பமும் உரைத்தல் இயலாது. கிழிந்த ஆடை, இழிந்த வாழ்க்கை, பிடிச்சோற்றுக்குப் படாதபாடு இவற்ருேடு நாழிகை நாளாக, நாள் திங்களாக திங்கள் ஆண்டாக எண்ணிக் காலங் கழிக்கின்றனர். அவரது நிலை இரங்கத் தக்கது என்று ஆசிரியர் கூறுகிருர்.

9. மணலின் மீது அமர்ந்துள்ளோரின் செயல்கள் யாவை?

கூற்றம் தன் வாழ்நாளை உண்டு வருவதை அறியாது முயன்று வினை செய்யாராய், சீட்டைக் கையிலே பிடித் துக் கொண்டு பாட்டை வாயிலே பாடிக்கொண்டு விளை யாடுகின்ற இளைஞர், முதியோர் ஆகியோரைக் கண்டு வருந்திப் போவார் சான்ருேர் சிலர் என்றும், மண்ணைத் தோண்டிக் காலை முழந்தாள் வரையில் பதித்து நன்ருகக் கெட்டித்துக் காலிலுள்ள நோயைப் போக்கிக் கொள்வார் சிலர் என்றும், கடற்கரை நாற்றத்தைப் பொறுக்கமாட்டா தாராய் கைக்குட்டையைக் கொண்டு மூக்கை அடைத்துக் கொண்டு அப்பாற் செல்லாமல் அங்கேயே இருப்பர் சிலர் என்றும், நண்பர்களுடனும், மனைவி மக்களுடனும் பேசிக் களித்திருப்பார் சிலர் என்றும், குழந்தைகளோடு விளையாடித் தாமும் இளைஞராவார் சிலர் என்றும், முதியோரும் குழவிகளோடு சேர்ந்து விளையாடுவதை யும் அவர்கள் கொடுக்கும் அடியை இன்பத்தோடு வாங்கிக்கொள்வதையும், அவர்கள் மண்ணை அள்ளிப் போடும் போது மகிழ்வதையும், அவர்களது மழலை மொழி களில் மகிழ்வதையும் சிலர் செய்வர் என்றும், சிலர்

வானொலி கேட்டு மகிழ்வர் என்றும், அதனால் சிலர் மயங்கி உறங்குவர் என்றும், சிலர் அதனை இரசித்துக் கொண்டிருப்பர் என்றும், தின்பண்டங்களை உண்பார்கள் என்றும், அந்திக் கால அருங்கடன் செய்வோர் சிலர் என்றும் மணலின் மீது அமர்ந்துள்ளோரின் செயல்களை ஆசிரியர் கூறுகிறார்.

7. வாழ்க்கை நிகழ்ச்சிக் குறிப்புகள்

(முத்தமிழ் காவலர் கி. ஆ. பெ. விசுவநாதம்)

1. 'சோ. சு. பாரதி' என்னும் தொடரின் பொருள் யாது?

'சோ. சு. பாரதி என்பது சோமசுந்தர பாரதி என்றாகாது; சோமு பாரதி, சுப்பு பாரதி என்ற இரட்டையர்களைக் குறிக்கத் தோன்றிய ஒரு சொற்றொடர் ஆகும்.

2. பாரதி என்கிற பட்டம் எவ்வாறு வந்தது?

கடையம் என்ற ஊரில் சுப்புவின் திருமணம் நடந்தது. சோமு இல்லாமல் சுப்புவின் திருமணம் நடைபெறவில்லை. எல்லாரும் கடையம் சென்றனர். திருமணத்தில் தமிழ் மணம் வீசியது. மணக் கோலத்தில் இருந்த சுப்பிரமணியத்திற்கும் தோழனாயிருந்த சோமசுந்தரத்திற்கும் அங்கு வந்திருந்த புலவர் பெருமக்களால் அளிக்கப் பெற்ற பட்டமே 'பாரதி' எனும் பட்டமாகும்.

3. 'பாரதி' என்பதன் பொருள் யாது?

பாரதி என்பதன் பொருள் 'கலைமகள்' என்பது. அது கலைமகளையும் அவள் அருளையும் குறிக்கும். எனினும் இவர்கள் அதற்குக் கூறும் விளக்கம் 'பாரதத் தாயின் மக்கள் யாவரும் பாரதி' என்பதே யாகும்.

4. இரண்டு பாரதியார்களுக்கும் இருந்த தொடர்பை விளக்குக.

இரண்டு பாரதியார்களும் தமிழ் இலக்கணம் பயின்றனர்; தாமாகவே படித்தனர்; ஓய்வுள்ள போதெல்லாம் படித்தனர். சோமுவுக்குச் சுப்புவும், சுப்புவுக்குச் சோமுவுமே இலக்கண ஆசிரியராய்த் திகழ்ந்தனர். காவிரியை அரங்கம் தடுத்துப் பிரித்ததைப்போல, அன்பு மிக்க இருவரையும் ஆங்கிலப் படிப்பு தடுத்துப் பிரித்துவிட்டது என்று இருவரின் தொடர்பையும் ஆசிரியர் விளக்குகிருர்.

5. சோமசுந்தர பாரதியார் இயற்றிய நூல்களின் பெயர்களை எழுதுக.

'மாரிவாயில்' 'மங்கலக் குறிச்சிப் பொங்கல் நிகழ்ச்சி' என்ற கவிதை நூல்களும், 'சேரர் தாயமுறை,' 'தசரதன் குறையும் கைகேயியின் நிறையும்,' 'சேரர் பேரூர்' என்ற ஆராய்ச்சி நூல்களும் தொல்காப்பியத்தில் அகம், புறம், மெய்ப்பாடு என்ற முப்பிரிவுகட்கும் எழுதிய ஆராய்ச்சி நூல்களும், 'தமிழகமும் பழந்தமிழ் நூல்களும்' என்ற ஆங்கில நூலும் சோமசுந்தர பாரதியார் இயற்றிய நூல்களாம்.

6. யார் யார் நாளின் தொடக்கம் எவ்வெப்போது? தமிழர்களின் நாளின் தொடக்கம் யாது? சான்று என்ன?

ஆரியர்களுக்கு நாள் தொடக்கம் காலை ஆறு மணி. அராபியர்களுக்கு நாள் தொடக்கம் மாலை ஆறு மணி. ஐரோப்பியர்களுக்கு நாள் தொடக்கம் நள்ளிரவு 12 மணி. ஆனால் தமிழர்களின் நாள் தொடக்கம் நண்பகல் 12 மணி எனக் கண்டு கூறியவர் பாரதியார். இதனை அரண் செய்வது புறப்பாடல் 280ஆம் செய்யுளில் உள்ள 'நடு நாள் வந்தது' என்னும் சொற்றொடர் ஆகும்.

7. சோமசுந்தர பாரதியார் பெற்ற பட்டங்கள் யாவை? விளக்குக.

சோமசுந்தர பாரதியார் பெற்ற வேறு பட்டங்கள் டாக்டர் பட்டமும், நாவலர் பட்டமும் ஆகும். சுவாமி

விபுலானந்தரின் அழைப்பிற்கிணங்க சோமசுந்தர பாரதியார் யாழ்ப்பாணம் சென்று தமிழ் மழை பொழிந்தார். மனங்குளிர்ந்த புலவர் பெருமக்களால் வாழ்த்தி வழங்கப் பெற்ற பட்டமே 'நாவலர்' பட்டமாகும். முத்தமிழ்ப் பணி புரிந்த மூதறிஞர் நாவலர்க்கு அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தினர் சென்னை மாநிலம் முழுவதையும் கூட்டி வைத்து வழங்கி மகிழ்ந்த பட்டமே 'டாக்டர்' பட்டமாகும்.

8. நாவலர்க்கு ஒப்பாக மதிக்கப்பெறும் வேறு புலவர் யார் யார்?

வெள்ளக்கால் வி. பி. சுப்பிரமணிய முதலியார், உ. வே. சாமிநாதய்யர், அரசன் சண்முகனார், ரா. இராகவையங்கார், மு. ரா. கந்தசாமிக் கவிராயர், மு. ரா. அருணசலக்கவிராயர், பா. வே. மாணிக்க நாயக்கர், சுவாமி விபுலானந்தர், நாட்டாரையா, நெல்லையப்பக் கவிராயர், கரந்தைக் கவியரசு வேங்கடாசலம் பிள்ளை, கா. சுப்பிரமணியபிள்ளை முதலியவர்கள் நாவலர்க்கு ஒப்பாக மதிக்கப்பெறும் பிற புலவர்கள் ஆவர்.

9. 'பாரதியாரின் உள்ளம் உணர்ச்சியின் வெள்ளம்,' என்பது எதனால் புலனாகின்றது?

சுப்பிரமணிய பாரதியார் புதுச்சேரி சென்று செயலிழந்து இருந்த போது, இராசத் துரோகக் குற்றம் என்று எண்ணி எவரும் எதுவும் பேசாதிருந்தனர். அக்காலத்தில் 'சுப்பிரமணிய பாரதியாரைப் புதுச்சேரியில் விட்டு வைத்திருப்பது தமிழுக்கு இழப்பு, தமிழனுக்கு இழிவு, தமிழகத்திற்கு மானக்கேடு' என்று எழுதிப் பேசி, கண்டித்துச் செய்தித்தாளில் வெளியிட்டுப் பயனை எதிர் பார்த்திருந்த உணர்ச்சி வெள்ளம் பாரதியாரின் உள்ளம் என்பதை அறியலாம். அதுமட்டுமல்லாமல் பாரதியார் விடுதலை பெற்று வந்ததும் சு. பாரதியார் சோ. பாரதியாரைக் கட்டித் தழுவிக் கண்ணீருகுத்த காட்சி கண் கொள்ளாக் காட்சியாகும்.

8. நாடு பார்க்கும் முறைகள்

(தவத்திரு. தனிநாயக அடிகள்)

1. நாடு காணச் செல்வோர் காணுதற்குரியவை எவை?

நாடு காணச் செல்வோர் அந்நாட்டின் தலைநகரை மட்டும் பார்த்து விட்டு நாட்டைப் பார்த்துவிட்டோம் என்று நினைப்பது தவறு. நாம் போதிய பொருளும் காலமும் கிட்டாமையால் தலைநகர்களையும் துறைமுகங் களையும் மட்டுமே பார்க்கிறோம். அவை பல்வேறு இனத்தாரின் உறைவிட மாதலால், நாட்டின் தனிப் பண்புகளைக் காட்ட வல்லவை அல்ல. எனவே, நாட்டுப் புறத்தினையும் தலைநகர்களினும் சிறிய நகர்களையும் சுற்றுலாச் செல்வோர் பார்வையிடுதல் வேண்டும். அவ்விடங்களில் அந்நாட்டு மக்களுடன் உரையாடுதல் வேண்டும். அவர்கள் பண்பாடுகளையும் சின்னங்களையும் பார்த்து வருதல் வேண்டும்.

2. இலண்டன் மாநகர் நிலம்புகு வண்டியில் நிகழ்ந்தது யாது?

இலண்டன் மாநகர் நிலம்புகு வண்டியில் ஆங்கிலேய அம்மையார் ஒருவர் ஆசிரியரின் நண்பரை இமை கொட்டாமல் பார்த்தார். ஆசிரியரின் நண்பர் அவ்வம் மையார் அவரோடு உரையாட விரும்புவதை அறிந்து, அவர் தான் இந்தியாவிலிருந்து வந்ததாகக் கூறினார். 'இந்தியாவா? அப்படியானால் ஆகாகானை நிலா வெளிச் சத்தில் கண்டிருக்க வேண்டுமே!' என்று வியந்து வினவினார் அவ்வம்மையார். அதற்கு நண்பர், தான் ஆகாகானை நிலவொளியில் காணும்பேறு பெற்றிலாதவர் என்று கூறி தாஜ்மஹாலை நிலவொளியில் கண்டதாகக் கூறினார். அந்த அம்மையார் தாம் தாஜ்மஹாலின் பெயரை மறந்தே ஆகாகானென்று கூறிவிட்டதற்கு மன்னிக்க வேண்டினார்.

3. ஆங்கில மொழிப்பயிற்சி இன்றியமையாத தென்பதை கட்டுரை ஆசிரியர் எக்காரணங் காட்டி விளக்குகிருர்?

ஆங்கிலத்தை நன்ருகப் பேச அறிந்திருந்தால் எந்நாட்டிலும் எளிதில் பிரயாணம் செய்தல் கூடும். ஆங்கிலம் இன்று எல்லா நாடுகளிலும் பல காரணங் களாற் பயிலப்பட்டு வருகின்றது. ஆகவே ஆங்கில மொழிப் பயிற்சி இன்றியமையாதது என்பதை அறியலாம்.

4. நாடு பார்ப்பவர் எம்முறைகளைக் கையாள வேண்டும்?

பயணஞ் செய்வது ஒரு கலை. சிறு தொகையுடன் பல இடங்களைக் காண்பது எப்படி? ஓர் இடத்திற்குச் சென்ருல், அங்கு எதனைப் பார்க்க வேண்டும்? யாரைச் சந்திக்க வேண்டும்? என்பன போன்ற விவரங்களைப் பழகிய சுற்றுச் செலவுக்காரர்களிடமிருந்து அறிந்து கொள்வது நன்று. எந்தெந்த நாடுகளுக்கு செல்கிருேமோ அந்தந்த நாடுகளின் அனுமதி பெறவேண்டும். நமக்கு வேண்டிய பொருள்களை எடுத்துச் செல்லவேண்டும். நோய் தடுப்பதற்குரிய ஊசிகளைக் குத்திக்கொள்ள வேண்டும் என்று நாடு பார்ப்பவர் கையாளவேண்டிய முறைகளை ஆசிரியர் கூறுகிருர்.

9. எழுதா இலக்கியம்

(திரு. ஔவை. சு. துரைசாமிப் பிள்ளை)

1. பழமொழி என்பது என்ன?

தமிழகத்தில் ஏட்டில் எழுதப் பெருமல் பேச்சு வழக்கிலேயே சில இலக்கிய மொழிகள் நிலவுகின்றன. பொருள் பொதிந்த சிறுசிறு சொற்களால் இயன்றுள்ள பழமொழிகளே அவைகள். அவை ஏட்டில் எழுதப்படா

விட்டாலும் கற்றவர்களால் பாராட்டப்பட்டும், இலக்கிய உரை வகையாகக் கருதப்பட்டும் தமிழ்ப் பெருமக்களால் போற்றப்பட்டும் வருகின்றன. அவைகளை எழுதா இலக்கியம் என்பதோடு 'முது மொழி' என்றும், பழங் கால முதலே வழங்கி வருவது பற்றிப் 'பழமொழி' என்றும் சான்றோர் வழங்குவர்.

2. தொல்காப்பியம், கலித்தொகை, திருக்குறள் ஆகியவற்றில் வழங்கியுள்ள பழமொழிகளைச் சான்றுடன் எழுதுக.

"அப்பனைப் போல் பிள்ளை" என்ற பழமொழியைத் தொல்காப்பியர் "தந்தையர் ஒப்பர் மக்கள் என்பதனால், அந்தமில் சிறப்பின் மகப் பழித்து நெருங்கலும்" என்று தொல்காப்பிய கற்பியலில் குறித்துள்ளார்.

'கும்பிட்ட தெய்வம் கொடுமை செய்யுமா' என்ற பழமொழியை நல்லந்துவனர் "வழிபட்ட தெய்வந்தான் வலியெனச் சார்ந்தார்கட்கு அழியும் நோய் கைம்மிக அணங்காகியது போல" என்று கலித்தொகையில் கூறியிருக்கிருர்.

'இறைக்கிற ஊற்று தான் சுரக்கும்' என்ற முது மொழியை திருவள்ளுவர் "மறைப்பேன்மன் யான் இஃதோர் நோயை இறைப்பவர்க்கு ஊற்றுநீர் போல மிகும்" என்று தமது திருக்குறளில் அமைத்திருக்கிருர்.

3. பொருள், வாணிகம், தொழில், சமயம், அரசியல் குறித்து வழங்கும் பழமொழிகள் யாவை?

'பணமில்லாதவன் பிணம்', 'பணம் பத்தும் செய்யும்' முதலியன பொருள் பற்றி வழங்கும் எழுதா மொழிகள். 'கப்பலேறிப் பட்ட கடன் கொட்டை நூற்றுத் தீருமா?' 'கருவாடு விற்ற காசு நாருது' என வருவன வாணிகத்தில் வழங்கும் பழமொழிகள். 'வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்', 'உழைப்பாளிக்கு ஒருத்தர் சோறு போட வேண்டா' என்பன தொழில் பற்றிச் சொல்லப்படும் தொல்லுரைகள். 'விதை பழுது முதற் பழுது', 'பார்க்காத பயிரும் கேட்காத கடனும் பாழ்', முதலியன உழவுத்துறைக்குரிய உலகுரை. சமயத் துறையில் 'அவனே அவனே என்பதைவிடச் சிவனே

சிவனே என்பதுமேல்,' இரவெல்லாம் இராமாயணம் கேட்டு விட்டு, விடிந்த பின் 'சீதைக்கு இராமன் சிற்றப் பன்,' 'படிக்கிறது இராமாயணம் இடிக்கிறது பெருமாள் கோவிலா?' என்பன முதலிய பழமொழிகள் பரந்து உலவு கின்றன. 'தோட்டி முதல் தொண்டைமான் வரை' என்பது இடைக்காலச் சோழர் பாண்டியர் கால அரசியல் பற்றியும், 'தில்லிக்குப் பாச்சாவானாலும் தல்லிக்குப் பிள்ளை' என்பது விசய நகர வேந்தர் காலத்து அரசியல் பற்றியும், 'நாட்டுக்கு நல்லதுரை வந்தாலும் தோட்டிக்குப் புல்லுசுமை போகாது', 'பரங்கிக்குத் தெரியுமா சடங்கும் சாத்திரமும்?' என்பவை மேனாட்டார் காலத்து அரசியல் பற்றியும் வழங்கும் பழமொழிகளாம்.

4. கல் என்றாலும் கணவன் என்பதன் கருத்து யாது?

பண்டு விழுப்புண் பட்டு இறந்த வீரரை, அவரது பெயரும் பெருமையும் ஒரு கல்லில் எழுதி, அதனை நீராட்டிப் பலர் செல்லும் வழிகளில் திறுத்துவது வழக்கம். அக்கல்லை அவனது மனைவி நீராட்டி நெல்லும் பூவும் சொரிந்து, தன் கணவனாகவே எண்ணி வழிபடுவாள். 'ஒலிமென் கூந்தல் ஒண்ணுதல் அரிவை நடுகல் தொழுது பரவும்' எனப் புறநானூறு முதலிய சங்க நூல்கள் கூறு கின்றன. இது பற்றியே 'கல்லானாலும் கணவன்' என்ற பழமொழி உண்டாயிற்று.

5. 'புல்லாள்'—இரு பொருள் எழுதுக.

'வயல்களில் கதிர் முற்றி வரும் பயிர்களுக்குக் காவ லாகப்' புல்லும் வைக்கோலும் கொண்டு ஆடவன் போல உருவம் செய்து வரப்புகளில் நிறுத்தி வைப்பதைப் 'புல்லாள்' என்பர். போர்க்குரிய ஆண்மை இல்லாமல் வழிப்பறி செய்து வாழ்பவரைப் 'புல்லாள்' என்பதொரு முறையும் உண்டு.

6. 'பெண் கொலை புரிந்த நன்னன்'—இத் தொடர் கூறும் வரலாறு யாது?

கொங்கு நாட்டில் மேற்கு மலைத்தொடரின் அடிப் பகுதியில் நன்னன் என்றொரு தலைவன் வாழ்ந்து வந்தான். அவனது ஊர் நன்னனூர் என்பது. அவ் வூரில் ஆற்றங்கரையில் அவன் ஒரு மாமரத்தை வைத்து

வளர்த்து வந்தான். அதற்குக் காவலும் ஏற்படுத்தினன். அப்போது அங்கு கோசர் என்னும் மரபினர் வாழ்ந்து வந்தனர். அக்கோசரில் செல்வன் ஒருவனுடைய மகள் ஆற்றிற்குக் குளிக்கச் சென்ருள். அவள் குளித்துக் கொண்டிருக்கும் போது மாங்காய் ஒன்று நீரில் மிதந்து வந்தது. அதனை அப்பெண் எடுத்துத் தின்ருள். அது கண்ட காவலன் நன்னனிடம் அதனைத் தெரிவிக்கவே, கொடியவனுன நன்னன் அவளைக் கொன்றுவிடக் கட்டளையிட்டான். அதை அறிந்த அவள் தந்தை அவளது நிறையளவு பொன்னும், எண்பத்தொரு யானைகளும் தந்து வணங்கி அவளைக் கொல்லாது விட்டுவிட வேண்டினன். நன்னன் சிறிதும் மனம் இரங்காது அவளைக் கொன்ருன். உடனே கோசர்கள் அனைவரும் திரண்டு வந்து அம் மாமரத்தை வெட்டி வீழ்த்தி, அவனையும் ஊரை விட்டே ஓட்டி விட்டனர். சின்னுட்களில் சேர மன்னன் ஒருவனிடம் தோல்வியுற்று இறந்தான். அவன் வழி வந்தோர் 'பெண்கொலை புரிந்த நன்னன் மரபினர்' என்று மக்களால் பழிக்கப்பட்டனர்.

7. 'ஆரியக் கூத்தாடினுலும் காரியத்திலே கண்' இந்தப் பழமொழி எதனுல் எழுந்தது?

முத்தமிழின் ஒரு கூருகிய நாடகம், (கூத்து) ஆரியக் கூத்து, தமிழ்க் கூத்து என இருவகைப்படும். ஆரியக் கூத்தாடுவோர் ஆரிய நாட்டிலிருந்து வந்து கழைக் கூத்தர் போலக் கயிற்றின்மேல் நின்று பக்கத்தே பறை கொட்ட அழகாக ஆடுவர் என்பதை அறிகிருேம். அவர்கட்கு தமிழ் வேந்தர்களும் பிற செல்வர்களும் பொன்னும், பொருளும் பரிசிலாகத் தருவார்கள். தமிழ்க் கூத்தர்க்கு நிலம் வழங்குவது மரபு. அந்நிலம் 'கூத்தாட்டுக் காணி' எனக் கூறப்படும். நாளடைவில் தமிழ்க் கூத்தர் ஆரியக் கூத்தைப் பயின்று அதனையும் ஆடத் தலைப்பட்டனர். அதற்குரிய பரிசில் பொன்னும் பொருளுமேயாயினும், தமிழ்க் கூத்தர் தாம் வழிவழியாகப் பெற்று வந்த நிலப் பரிசிலையே விரும்பினர். அதனையே பெற்றனர். ஆகவே, தமிழ்க் கூத்தர் ஆரியக் கூத்தாடினுலும் காரியமாகிய கூத்தாட்டுக் காணி பெறுவதையே நாட்டமாகக் கொண்டிருந்தனர் என்பதையும், அதுபற்றியே 'ஆரியக் கூத்தாடினுலும் காரியத்தில் கண்' என்னும் பழமொழி வழங்கி வருகிறது என்பதையும் அறியலாம்.

10. நிலாவில் மனிதன்

(கலைக்கதிர்)

1. அப்பலோ-11 உலகிலிருந்து நிலாவை அடைந்தது பற்றி 20 வரிகளில் சுருக்கி எழுதுக.

1969ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 10ஆம் நாள், இந்திய நேரப்படி மாலை 7-02 மணிக்கு அப்பலோ-11 விண்ணில் செலுத்தப்பட்டது. அது நெருப்பை உமிழ்ந்து பேரிடி முழக்கம்போல ஒலி எழுப்பி நிலத்தையே நடு நடுங்கச் செய்தது. முதலில் பூமியைச் சுற்றிவிட்டு நிலவை நோக்கிப் புறப்பட்டது. ஜூலை 19ஆம் நாள் இரவு நிலவைச் சுற்றும் பாதையை அடைந்தது. பத்து முறை நிலவைச் சுற்றிய பின்னர் முதலில் ஆல்டிரின் தாய்க் கலத்திலிருந்து நிலாக் கூடத்திற்குள் சென்றார். நிலாக் கூடத்தை நன்கு சோதித்த பின்னர் ஜூலை 20ஆம் நாள் இந்திய நேரப்படி மாலை 11-17 மணிக்கு அதைத் தாய்க் கலத்திலிருந்து பிரித்தார்கள். பின்னர் காலின்ஸ் மட்டும் தாய்க் கலத்திலிருந்து நிலாவைச் சுற்றிக் கொண்டிருக்க, ஆம்ஸ்டிராங், ஆல்டிரின் இருவரும் தமது நிலாக் கூடத்தில் நிலாத் தரையை நோக்கி இறங்கினர். அவர்கள் நிலாத் தரையில் இறங்கியது ஜூலை 21ஆம் நாள் அதிகாலை 1-47 மணிக்கு ஆகும். அப்பொழுது பூமியிலிருந்து புறப்பட்டு 102 மணி 42 மணித்துளிக் காலம் ஆகியிருந்தது.

2. நிலாவில் இறங்கிய முதல் மனிதர் யார்?

ஆம்ஸ்டிராங் நிலாவில் இறங்கிய முதல் மனிதர் ஆவார்.

3. வீரர்கள் நிலவில் கண்ட காட்சிகளைத் தொகுத்து எழுதுக.

நிலவில் பெரிய பள்ளமும், பாறைகளும் இருந்தன. நிலாத் தரை உறுதியாய் இருந்தது. அங்கு குறுமண் படர்ந்திருந்தது. ஈர்ப்பு ஆற்றல் குறைவாக இருந்தது.

நிலவின் மேற்பரப்பு மென்மையாகத் தோன்றினாலும் அதைத் தோண்டும் பொழுது கடினமாக இருந்தது. அதன் பொதுத் தோற்றம் பாலைவனத்தைப் போன்று தோன்றினாலும், அதன் அழகே அழகு என புகழப் படுகிறது. இவைகளே வீரர்கள் நிலவில் கண்ட காட்சிகளாம்.

4. நினைவுச் சின்னத்தில் பொறித்திருப்பவை யாவை?

நினைவுச் சின்னத்தில் கி.பி. 1969ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள், பூமியிலிருந்து வந்த மனிதர்கள் இங்கு தான் முதன்முதலில் கால் வைத்தார்கள். மனித இனம் முழுவதும் ஒற்றுமையுடன் வாழவேண்டும் என்ற நோக்கத்தின் பாற்பட்டது இப் பயணம் என்னும் பொருள் பட பொறிக்கப்பட்டிருந்தது.

5. வீரர்கள் நிலவில் அமைத்த கருவிகளைக் குறித்தும், அவற்றின் பயன்களைக் குறித்தும் குறிப்பு எழுதுக.

ஆம்ஸ்டிராங், ஆல்டிரின் இருவரும் நிலாத் தரையில் தொலைக் காட்சிப் படக் கருவியை அமைத்தனர். அதனால் உலகினர் அவர்களாற்றிய பணிகளைப் பார்த்து மகிழ்ந்த னர். இது தவிர இன்னும் மூன்று விஞ்ஞானக் கருவிகளை யும் அவர்கள் நிலாவில் அமைத்தார்கள். அவற்றினுள் ஒன்று, நிலாத் தரையின் அதிர்வுகளை அளவிட்டு உல கிற்குத் தெரிவிக்கும் கருவி. அது அதிநுட்பம் வாய்ந்தது. அக் கருவி விண்வெளி வீரர்கள் நிலாத் தரையில் நடந்த பொழுது ஏற்பட்ட அதிர்வையும் உலகிற்கு அஞ்சல் செய்தது. மற்றொன்று, 'லேசர் தட்டு' எனப்படும் கருவி. அது உலகிலிருந்து அனுப்பப்படும் 'லேசர்' ஒளியை வாங்கி எதிரொளி செய்து உலகிற்கு அனுப்ப வல்லது. அதன் உதவியால் உலகிற்கும், நிலவிற்கும் இடையே உள்ள தொலைவை அங்குலத் துல்லியமாக அளவிடலாம். அது நிறுவப்பட்ட சிறிது நேரத்திற்குள் பூமியிலிருந்து செலுத்தப்பட்ட 'லேசர்' ஒளி எதிரொளி செய்து பூமியை அடைந்ததை விஞ்ஞானிகள் கண்டார்கள். மூன்றாவது, ஞாயிற்றின் கதிர் வீச்சை

ஆயுங் கருவி. அது குடை போன்ற அமைப்புடையது. அதை விரித்து வைத்துவிட்டால் ஞாயிற்றின் கதிர் வீச்சில் வரும் துகள்கள் அதில் ஒட்டிக்கொள்ளும். அத் துகள்களின் தன்மையைப் பின்னர் உலகிலிருந்தவாறே ஆய்ந்தறியலாம்.

6. சிறு குறிப்பு எழுதுக.

(அ) வீரர்கள் அணிந்திருந்த உடைகள்: நிலாத் தரையில் இறங்கிய வீரர்கள் தனி உடை ஒன்று அணிந் திருந்தனர். அந்த உடையின் முதுகுப் புறத்தில் பெட்டி போன்ற ஓர் அமைப்பு இருந்தது. அதில்தான் அவர்கள் மூச்சு விடுவதற்குத் தேவையான உயிர்க் காற்று (ஆக்ஸிஜன்) இருந்தது.

(ஆ) வீரர்கள் சேகரித்த பொருள்கள்: பலவகை யான கற்களையும் மண்ணையும் அவ்வீரர்கள் திரட்டிச் சேகரித்தனர்.

7. பயணத்தின் முடிவுகளைப்பற்றி நீ அறிவன யாவை?

கட்டளைக்கூடம் காற்று மண்டலத்தில் நுழைந்த போது, உராய்வு காரணமாக உண்டான 5,000 டிகிரி வெப்ப நிலையில் கூடத்தின் மேலுறை தீப்பற்றி எரிந்தது. தீப்பிழம்பாக அந்தக் கூடம் பூமியை நோக்கிப் பாய்ந்தது. மேலுறை எரிந்து முடிந்ததும் தீ அணைக்கப்பட்டது. கட்டளைக்கூடம் ஜூலை 24ஆம் நாள் மாலை 10-20 மணிக்குக் கடலில் இறங்கியது. அப்பொழுது ஏற்பட்ட சிறு பழுது காரணமாக கூடம் தலைகீழாக நீரில் இறங் கியது. பின்னர் காற்றழுத்தக் கருவிகளின் உதவியால் நிமிர்த்தப்பட்டது. வீரர்கள் விண்வெளியிலிருந்து ஏதே னும் நோய் பரப்பும் கிருமிகளைக் கொண்டு வந்திருப்பார் களோ என்ற ஐயத்தில் அவர்களை தனி இடத்தில் வைத் தார்கள். காப்பு விடுதியில் மூன்று வாரம் தங்கிய பின்னர், மாறுதல் எதுவும் இல்லை என்பதைக் கண்டனர். இவைகளே பயணத்தின் முடிவுபற்றி அறிவனவாம்.

11. நாடகக் கலை

(ஔவை தி. க. சண்முகம்)

1. இயல், இசைத் துறைகளில் சிறந்து விளங்கிய புலவர் யாவர்?

திருவள்ளுவர், இளங்கோ, சாத்தனர், கம்பர், திருத்தக்கதேவர், ஒட்டக்கூத்தர், புகழேந்தி ஆகிய பல சங்கப் புலவர்கள் இயல் துறையில் சிறந்து விளங்கியவர் ஆவர்.

நாயன்மார்கள், ஆழ்வார்கள், மாணிக்கவாசகப் பெருமான், அருணகிரியார், அண்ணுமலை ரெட்டியார், இராமலிங்க வள்ளலார், முத்துத்தாண்டவர், கோபால கிருஷ்ண பாரதியார் முதலாயினேர் இசைத் துறையில் சிறந்து விளங்கினர்.

2. பழங்கால நாடக இலக்கண நூல்கள் சிலவற்றையும், பிற்காலத்திய நாடக இலக்கண நூல்களையும், குறிப்பிடுக.

முறுவல், சயந்தம், செயிற்றியம், குணநூல், பரதம், அகத்தியம், பரத சேனுபதீயம், மதிவாணனர் நாடகத் தமிழ் நூல் போன்றவை பழங்கால நாடக இலக்கண நூல்களாம்.

பரிதிமாற் கலைஞரின் நாடக இயல், விபுலானந்த அடிகளாரின் மதங்க சூளாமணி ஆகிய நூல்கள் பிற் காலத்தே தோன்றிய நாடக இலக்கண நூல்களாம்.

3. நாடக நூல்கள் சிலவற்றைக் குறிப்பிடுக?

பழனி நொண்டி நாடகம், திருக்கச்சூர் நொண்டி நாடகம், குறவஞ்சி நாடகம், இராம நாடகம், நந்தனர் சரித்திரம் முதலியன சில நாடக நூல்களாம்.

4. நாடகங்கள் பண்டைக் காலத்திலும் நடை பெற்றன என்பதை நீ எவ்வாறு நிலைநாட்டு வாய்?

காலத்தால் முற்பட்ட தொல்காப்பியத்திலே காணப் படும் "வாடா வயவர் ஏத்தும் வள்ளி" என்ற தொடருக்கு வள்ளிக் கூத்து என்று உரை காணப் படுகிறது.

செல்வம் நிலையாமையைக் கூறவந்த வள்ளுவர் செல்வம் விரைந்து வளர்வதற்கும், விரைந்து கழிவதற்கும் கூத்தாட்டு அவையில் மக்கள் விரைந்து வந்து கூடி விரைந்து கலைந்து செல்வதை உவமையாகக் குறிக்கிறார்.

மேலும், 'நாடகத்தால் உன் அடியார் போல் நடித்து' என்று கூறுவதன் வாயிலாக நாடகம் நடிப்பது அக்காலத்தே வழக்கத்திலிருந்தது என்ற கருத்தினைப் பெற வைக்கிறார்.

மேற்கூறிய இலக்கிய சான்றுகளிலிருந்து காலத்தைக் கணக்கிடவியலாத பழமை வாய்ந்த தொல்காப்பியக் காலத்திலிருந்து எல்லாக் காலங்களிலும் நாடகங்கள் அரங்கங்களில் நடிக்கப்பட்டன என்பதை நாம் உணர முடியும்.

5. சங்கரதாஸ் சுவாமிகள், பம்மல் சம்பந்த முதலியார் ஆகியோர்களைப் பற்றி சிறு குறிப்பு எழுதுக.

பம்மல் சம்பந்த முதலியார்:—பயில் முறை நாடக சபைகளைத் தோற்றுவித்த பெருமைக் குரியவர். இவர் தொண்ணூற்றுக்கும் மேற்பட்ட நாடக நூல்களை எழுதி யுள்ளார். ஷேக்ஸ்பியர் நாடகங்கள் சிலவற்றை மொழி பெயர்த்திருக்கிறார். காளிதாசனின் நாடகங்கள் சில வற்றையும் மொழி பெயர்த்துள்ளார். நாடகத்தைப் பற்றி நன்கு ஆராய்ந்து நாடகத்தமிழ் என்ற நூலும் தனது நாடக அனுபவங்களை விவரித்து நாடக மேடை என்ற நூலும், எழுதியுள்ளார். நடிப்புக் கலையில் தேர்ச்சி பெறுவது எப்படி? என்ற நூலும் வெளியிட்டுள்ளார்.

சங்கரதாஸ் சுவாமிகள்:—நாடகங்கள் பலவற்றைப் பாடல்களும் உரையாடல்களும் அமைத்து அனைவரும் பார்க்கும் தகுதியுடையனவாக ஆக்கினர். அவரது நாடகங்களே இன்றைய தமிழ் நாடகத்துக்கு அடிப்படை. அவரது நாடகங்கள் பெரும்பாலும் புராண இதிகாச நாடகங்களே. தொழில் முறை நாடக சபைகள் தோன்றக் காரணமாயிருந்தார்.

6. சதாவதானம் தெ. பொ. கிருஷ்ணசாமிப் பாவலரைப் பற்றி நீ அறிவன யாவை?

சதாவதானம் கிருஷ்ணசாமிப் பாவலர் 'கதரின் வெற்றி' முதலிய தேசிய நாடகங்களை எழுதியவர். தேசீயத்தை முதன் முதலாக நாடகத்திற் புகுத்தியவர். அவரே "தேசீயக் கொடி" என்னும் நாடகத்தையும் அரங்கேற்றினர். ஒரு குழுவை அமைத்துக்கொண்டு இலண்டனில் தமிழ் நாடகங்களை நடத்தி வெற்றி பெற்றார். நெஞ்சுறுதியும் புலமையும் மிக்கவர். பதி பக்தி, பம்பாய் மெயில், பர்த்ருஹரி முதலிய நாடகங்களையும் எழுதினர். பேசாப் படங்களோடு போட்டியிட்டுத் தமிழ் நாடகக் கலையைக் காப்பாற்றினர்.

7. ஔவையார் நாடகத்தின் சிறப்புகள் யாவை?

'ஔவையார்' நாடகத்தில் கதாநாயகன் என்ற பாத்திர மில்லை. காதற்காட்சிகள் இல்லை. தொண்டு கிழவியான மூதாட்டியே கதாநாயகி. தோன்றுதல், திரிதல் ஒடுங்கல் ஆகிய இலக்கண வரம்புகளைக் கடந்தது. இந்நாடகம் தமிழ் நாட்டினில் பெரும் வரவேற்பினைப் பெற்றது. இவையே ஔவையார் நாடகத்தின் சிறப்புகள் ஆகும்.

8. நாடகங்களின் பயன்கள் யாவை?

நாடகங்கள் இலக்கியத் தரம் உடையன. நாட்டையும் மொழியையும் மக்களையும் உயர்த்துவதில் தமிழ் நாடகங்கள் பெரும் பங்கு பெறுகின்றன. நாடகங்கள் சட்டத்திற்குத் துணையாக நின்று மக்களது மனத்திலே நீதி நெறிகளை இயல்பாகப் பரப்பி பொது மக்களின் ஒழுக்கத்தை நிலை நிறுத்தும்.

9. **தமிழில் உயர்ந்த நாடக இலக்கியம் தோன்ற வில்லை என்பதற்குக் கட்டுரை ஆசிரியர் கூறும் காரணம் யாது? விளக்கி எழுதுக.**

கதை அமைப்பும், பாத்திரப் படைப்பும் மட்டுமே நாடகத்தை இலக்கியமாக உருப்பெற்றுவிடச் செய்ய முடியாது. காந்தியடிகள் உள்ளத்தைக் கவர்ந்து, அவரை பண்படுத்திய அரிச்சந்திர நாடகம் இலக்கியமாக அமைய வில்லை. காளிதாசனின் மாளவிகாக்கினி மித்திரமும், சாகுந்தலமும், ஷேக்ஸ்பியரின் ஹாம்லெட்டும், ஒதெல்லோவும் இலக்கியங்களாகப் போற்றப்படுகின்றன இராமாயணம் நாடகமாக நடிக்கப்படும் போது இலக்கிய மாகவில்லை. ஆனால் அதே கதை கம்பர் வாக்கிலிருந்து வரும்போது இலக்கியமாகிறது. ஆகவே, தமிழில் உயர்ந்த இலக்கியங்கள் தோன்றுமைக்குக் கதைகளின் குறையோ, பாத்திரப் படைப்புகளின் குறைபாடோ காரணமன்று. நூல்களாக இடம் பெறத்தக்க வகையில் பெரும் புலவர்கள் அதனைச் செய்யாததே காரணமாகும்.

இவ்வாறு தமிழில் சிறந்த நாடக இலக்கியம் தோன்றுமைக்குரிய காரணங்களை ஆசிரியர் விவரிக்கிறார்.

12. எது அறம்?

(திரு. மா. முத்துசாமி)

1. **மணிமேகலையின் ஆசிரியரான கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார் எவற்றை 'அறம்' என் கிறார்?**

மக்கள் வாழ்விற்கு அடிப்படைத் தேவைகளான உண்டி, உடை, உறையுள் ஆகிய மூன்றையும் வழங்குதலே 'அறம்' என்று கூறுகிறார் மணிமேகலையின் ஆசிரியரான கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார்.

2. **கந்தபுராணம் 'அறம்' பற்றிக் கூறுவது யாது?**

தருமத்தை ஒருவன் கடைபிடித்து ஒழுகினால் சேர்க் கையால் அன்பு பெற்ற குழந்தையாகிய அருள் வந்த டையும். அன்பும் அருளும் ஒருவனை அடைந்து தவம்

என்ற மாண்பும் அவனைச் சேருமானால் தெளிந்த ஞானம் பெற்று அவன் உயிர் சிவனைச் சென்றடையும். இவ்வாறு கந்தபுராணம் அறம் பற்றிக் கூறுகிறது.

3. 'அறம்' பற்றி வள்ளுவர் கூறுவது யாது ?

மனத்தில் குற்றமில்லாதிருப்பதே எல்லா அறங்களும் ஆகும் என்று அறம் பற்றித் திருவள்ளுவர் கூறுகிறார்.

4. இறைவரிடம் 'பக்தர்' கேட்ட வரம் யாது ?

தனக்குக் கிடைப்பதுபோல் இருமடங்கு பக்கத்து வீட்டுக்காரருக்குக் கிடைக்குமென்பதை அறிந்த பக்தன் இறைவரை நோக்கித் தனக்கு ஒரு கண் கெடவேண்டு மென வேண்டினான்.

5. மன மாசுகளாக வள்ளுவர் கூறுவன யாவை? மனம் தூய்மையடைய வள்ளுவர் கூறும் வழி யாது ?

பொறாமை, பேராசை, கோபம், கொடுஞ்சொல் ஆகிய நான்கும் மன மாசுகளென வள்ளுவர் கூறுகிறார். புறத்தில் உள்ள அழுக்கை நீரைக்கொண்டு அகற்றுவதுபோல் உள்ளத்தே பொருந்தியுள்ள அழுக்கை வாய்மையால் நீக்கவேண்டும் என்று கூறுகிறார். மனத்தை வாய்மை யோடு சேர்ப்பதால் மனத்திலுள்ள மாசுகள் நீங்கு மென்றும், மாசுகள் நீங்கினால் ஒருவன் செய்கின்ற செயல்கள் அறச் செயல்களாக அமையுமென்றும் கூறு கிறார்.

6. அறஞ் செய்தலைப் பற்றி நாலடியார் கூறுவது யாது ?

தாம் இளைஞராக இருப்பதால் அறம் செய்து கொள் வதைப் பிறகு வைத்துக் கொள்ளலாம் என்று எண்ணமல் கையில் பொருள் உள்ள காலத்திலேயே அறம் செய்ய வேண்டும் என்றும், பெருங்காற்றில் பழங்கள் மட்டும் உதிராமல் முதிராத காய்கள்கூட விழுந்து விடுமாதலின் மனிதர் முதுமை யடைந்த பிறகு மட்டுமல்லாமல் இளமையிலும் இறக்கக்கூடும் என்னும் நிலையாமையை

உணர்ந்து அறச்செயல்களைச் செய்ய வாய்ப்புள்ள போதே ஒளிக்காது அறஞ்செய்ய வேண்டுமென்றும் நாலடியார் அறஞ்செய்தலைப் பற்றிக் கூறுகிறது.

7. அறச்செயல்களால் ஏற்படும் பலன்கள் யாவை?

உயிர் பிரிந்த பிறகு உடல் அழிந்து விடுகிறது. நற் செயல்கள் செய்தலால் ஏற்பட்ட புகழ் உலகில் அழிவ தில்லை. புகழோ பல காலங்களையும் கடந்து உலகில் நிலைத்து நிற்க வல்லது. அறத்தின் வழியாகக் கிடைத்த அரும் புகழ் ஒருவரது உடம்பு மறைந்து போனாலும் உலகம் உள்ளளவும் நிலைத்து நிற்கக் கூடியது.

8. அறம் பற்றிய வள்ளுவர் கருத்தைத் தொகுத்து எழுதுக.

மனத்தில் குற்றமில்லாதிருப்பதே எல்லா அறங்களும் ஆகும் என்றும், பொறுமை, பேராசை, கோபம், கொடுஞ் சொல் ஆகியவை மனமாசுகள் என்றும், அத்தகைய மன மாசுகளை அகற்றுவதற்கு வாய்மையே வழியாகும் என்றும், முடிந்த வகையிலெல்லாம், செல்லும் இடமெல் லாம் அறத்தினைச் சுருக்காது செய்ய வேண்டுமென்றும் அறம் பற்றித் திருவள்ளுவர் கூறுகிறார்.

13. புத்தாண்டுப் பரிசு

(ஜவஹர்லால் நேரு)

1. பழைய நினைவுகள் குறித்து நேரு கூறியது யாது?

உலகத்தின் கடந்த கால வரலாறு பற்றியும் அப் போது வாழ்ந்த பெரியோர்கள் குறித்தும் அவர்கள் செய்த செயல்கள் குறித்தும் நினைத்துப் பார்ப்பதும் படிப்பதும் இன்பம் பயப்பனவாகும். வரலாற்றைப் படிப்பதைவிட கதை இயற்றுவது மிக இனியது. இன்று நம் வரலாற்றை நாமே இயற்றிக் கொண்டிருக்கிறோம். இந்தியாவின் கடந்த காலம் நீண்டது. பழமை அதனைப்

போர்த்து நிற்கிறது. பழைய வரலாற்றில் நாம் வெட்கமும், துக்கமும் அடைதற்குரிய நிலைகள் உள்ளன. ஆனால், மொத்தமாகப் பார்க்கும்போது நமது பழமையும் மிகவும் போற்றுதற்குரியது. அதனை நினைக்கும்போது ஒவ்வொரு இந்தியனும் தலை நிமிர்ந்து பொறுமையும் அடையாமல் இருக்கமுடியாது. பழம் பெருமை பேசி வாளா இருக்க முடியாது. வருங்காலம் நமது மனத்திலும் கண்ணிலும் நீங்காமல் நிறைந்துள்ளது. வருங்காலத்தை நாம் படைத்துக்கொண்டிருக்கிறோம். இவ்வாறு பழைய நினைவுகள் பற்றி நேரு கூறுகிறார்.

2. சிறையில் அவர் தனது மனநிலை பற்றிக் கூறியதை எழுதுக.

'நைனிச் சிறையில் படிக்கவும், எழுதவும் எனக்கு நேரமிருக்கிறது. ஆனால் மனம் நிலையின்றித் திரிகிறது. அது எப்போதும் வெளியில் நடக்கும் போராட்டத்தைப் பற்றியே எண்ணிக்கொண்டிருக்கிறது.' மற்றவர்கள் என்ன செய்து கொண்டிருக்கிறார்கள்? என்றெல்லாம் எண்ணுகிறது. நிகழ்காலம் வருங்காலம் பற்றிய நினைவுகள் என்னுள் நிறைந்து நிற்பதால் கழிந்த காலம் பற்றி எண்ண இடமில்லை. இது தவறு என்று உணர்கிறேன். வெளியிலிருந்து வேலை செய்ய இயலாதபோது நான் ஏன் அதைப் பற்றி எண்ணி மனத்தைப் புண்ணாக்கிக் கொள்ளவேண்டும்? இவ்வாறு நேரு சிறையிலிருந்த போது தனது மனநிலை பற்றிக் கூறுகிறார்.

3. நேரு தம் மகளாருக்குக் கடிதம் எழுதத் தயங்கியது ஏன்?

தன் மகளுக்குச் சொல்லிக் கொடுக்கக் கூடிய அளவிற்குத் தமக்குத் தெரியுமா? என்ற ஐயத்தாலும், அவள் விரைந்து வளர்ந்து அறிவில் மேம்பட்டு வருவதால் தான் கற்றது அவளைத் தெளிவிக்கப் போதுமானது என்று கருதியமையாலும், தான் கூறுவது அவளுக்குச் சுவையாக இராது என்று கருதுவதாலும், மேதாவி நிலையைத் தாம் அடைந்ததாகக் கருதவில்லை என்பதாலும் தான் தன் மகளாருக்குக் கடிதம் எழுதத் தயங்கியதற்குக் காரணம் என நேரு கூறுகிறார்.

4. உலக வரலாற்றை மாணவர்கள் அறிய வேண்டுவதன் இன்றியமையாமையை நேரு எங்ஙனம் விளக்கினர்?

மாணவர்கள் ஒரு நாட்டின் வரலாற்றை மட்டும் கற்பதும், அதிலும் சில நாள்களேயும், நிகழ்ச்சிகளேயும் மனப்பாடம் செய்வதும் தனக்குப் பிடிக்காதது என்றும், வரலாறு என்பது ஒன்றுக்கொன்று தொடர்புடைய ஒரு முழு நிகழ்ச்சி என்றும், ஒரு நாட்டின் வரலாற்றை மட்டு மாவது முழுவதும் உணர வேண்டுமானல் கூட உலகத் தின் பிற பகுதிகளிலும் நிகழ்ந்த நிகழ்ச்சிகளே உணராமல் முடியாது என்பதால் மாணவர்கள் உலக வரலாற்றை அறிய வேண்டுவதன் இன்றியமையாமையைக் குறித்து நேரு கூறுகிருர்.

5. சிறையில் கடிதம் எழுதும் நிலே குறித்து அவர் யாது கூறினர்?

முன்னர் வெகு தொலேவில் இருந்தாலும் அடிக்கடி கடிதம் எழுத முடிந்தது என்றும், இப்போது அண்மை யிலிருந்தாலும் தொடர்பு கொள்ள முடியாமல் சிறையின் மதில்கள் தடுக்கின்றன என்றும், பதினைந்து நாள்களுக்கு ஒரு முறைதான் கடிதம் என்ற கட்டுப்பாடு சிறையில் இருப்பதால் அடிக்கடி கடிதம் எழுத முடியவில்லே என்றும் நேரு தமது மகளுக்குக் கடிதம் எழுத முடியாத நிலே குறித்து எழுதியுள்ளார்.

6. புத்தாண்டுப் பரிசு என நேரு கூறியது யாது? விளக்குக.

தன் மனேவியைக் கைது செய்து சிறைக்குக் கொண்டு போனதாகக் கிடைத்த செய்தியே தனக்குக் கிடைத்த புத்தாண்டுப் பரிசாக நேரு குறிப்பிடுகிருர்.

அன்று புத்தாண்டு நாளாதலின் தன் மகளேப் பற்றியே சிந்தித்துக் கொண்டிருந்ததாகவும், படுக்கையிற் படுத்தபடியே விண்மீன்களேப் பார்த்துக் கொண்டிருந்த தாகவும், கடந்த ஆண்டில் நடந்த சம்பவங்கள் பெற்ற இன்ப துன்பங்கள் மனத் திரையில் ஓடிக்கொண்டிருந்த

தாகவும், காந்தியடிகளை நினைத்துப் பார்த்ததாகவும், தனது தந்தையையும் மற்றவர்களையும் நினைத்துப் பார்த்ததாக வும் அப்போது தனது மனைவியைச் சிறைக்குக் கொண்டு சென்றார்கள் என்ற செய்தி கிடைத்ததாகவும், அச்செய் தியே சிறந்த புத்தாண்டுப் பரிசு என்று தான் நினைப்ப தாகவும் கூறுகின்றார் நேரு.

14. மரமும் மழையும்

(திரு. கே. எஸ். மகாதேவன்)

1. மழை எப்போது உண்டாகிறது?

வானத்தில் மிதந்து செல்லும் மேகக் கூட்டங்கள் நீர் நிரம்பியனவாக இருந்தாலும், அது எப்போதும் மழையாக மாறும் என்று நாம் எண்ண முடியாது. குறிப்பிட்ட ஓர் அளவிற்கு மேகங்கள் குளிர்ச்சியைப் பெற்றால்தான் மழை பொழியும்.

2. காடுகளிலும் மலைகளிலும் மிகுதியாக மழை பெய்வது ஏன்?

தாவரங்கள் எத்தகைய வெப்பக் காலமானாலும் சூடேறாமல் குளிர்ச்சியாகவே உள்ளன. மரங்கள் எப் பொழுதும் குளிர்ச்சியாக விருப்பதனால் மரங்கள் அடர்ந்த காடுகளில் மிகுதியாக மழை பொழிகிறது.

3. சிறு குன்றுகளில் மிகுதியாக மழை பெய்ய என்ன செய்யலாம்?

சிறு குன்றுகளில் பசுமரங்கள் மிகுத்த காடுகளைத் தோற்றுவிப்பதன் மூலம் மலையின் உயரத்தைப் பெருக் கலாம். அதன் வாயிலாக உயர்ந்த மலைகள் தரும் மழை வளத்தைத் காடுகள் நிறைந்த சிறு குன்றுகளே தரக் கூடும். இவ்வாறு சிறு குன்றுகளில் மிகுதியான மழை பொழியச் செய்யலாம்.

4. மரங்கள் மழைக்கு எவ்வாறு கைம்மாறு செய்கின்றன ?

மரங்கள் மழையின் வாயிலாக நீரைப் பெற்றுச் செழித்து வளர்கின்றன. மேகங்கள் மழையாக மாறுவதற்கேற்ற குளிர்ச்சியை மரங்கள் தருவதால் மரங்கள் மழைக்குக் கைம்மாறு செய்வதாக ஆசிரியர் குறிப்பிடுகிறுர்.

5. பஞ்சாங்க உலகம் அஞ்சாமல் கூறும் செய்தி யாது ?

பழங்கால மக்கள் வானத்தில் மிதக்கும் மேகங்களை நீர்த்தொட்டிகள் என்று கருதினர். அத்தகைய மேகங்கள் ஆண்டுக்கு ஒருமுறை கடலுக்குச் சென்று நீரை முகந்து வருவதாகவும் அவ்வாறு செல்வதைக் கர்ப்போட்டம் என்றும் பஞ்சாங்க உலகம் அஞ்சாமற் கூறி வருகிறது.

6. கார்காலத்தில் தலைவன் வீடு திரும்பாததை எண்ணி வருந்திய தலைவியைத் தோழி எவ்வாறு தேற்றினுள் ?

தலைவன் வீடு திரும்பாததை எண்ணி வருந்திய தலைவியை நோக்கி அவளது தோழி " இம்மேகங்கள் இப்போதுதான் நீர் முகந்து வரச் செல்கின்றன. அப்படிச் செல்லும்போது, சென்ற ஆண்டில் பெய்யாது மிகுத்து வைத்திருக்கின்ற நீரை இப்போது கொட்டிச் செல்கின்றன. அதனைக்கண்டு ஏமாந்த மயில்கள் ஆடின. ஆனுலும் உண்மையான மழைக்காலம் இன்னும் தொடங்கவில்லை " என்று கூறித் தேற்றினுள்.

7. கடல் நீர் கரிக்கவும் மழை நீர் கரியாமலிருக்கவும் காரணம் யாது ?

மேகம் கடலிற் சென்று நீரை முகந்து வருகின்றது என்று கூறித் தேற்றினுள்.

மேகம் கடலிற் சென்று நீரை முகந்து வருகின்றது என்ற கூற்று உண்மையன்று. கடலில் உள்ள நீர்

கதிரவன் வெப்பத்தால் ஆவியாகி மேகமாகப் பரவி நிற்கிறது. கடல் நீர் கரிப்புடையதாக இருந்தாலும் அதனின்று தோன்றும் நீராவி கரிப்பதில்லை. அதனுல் தான் நீராவி குளிர்ந்து, மழை நீராகும்போது மழைநீர் உப்புக் கரிப்பதில்லை.

8. சிவப்பிரகாசர் மேகத்தை உவமையாகக் கொண்டு விளக்கும் செய்தி யாது?

கடல் நீர் கரிப்பதால் அது எவர்க்கும் பயன்படுவ தில்லை. பயன்படாத அந்த நீரை மேகம் முகந்து வந்து மழையாகக் கொடுக்கிறது. அது அனைவர்க்கும் பயன் படுகிறது. இவ்வுவமையைக் கொண்டு கருமி கையி லுள்ள பொருள் பிறர்க்கு உதவாது என்றுலும் அது நல்லவன் கைக்கு மாறினுல் பலருக்கும் பயன் படும் என்ற உண்மையைச் சிவப்பிரகாசர் விளக்குகிருர்.

9. பல நீர் ஆவி பெருமேகம்!—எவ்வாறு? விளக்குக.

கடலிலிந்து மிகத் தொலைவில் உள்நாட்டில் அமைந் திருக்கும் இடங்களின் மீது தவழ்ந்து கொண்டிருக்கும் மேகமானது கடலிலிருந்து உருவாகி வந்தன என்று சொல்ல முடியாது. அப்பகுதியிலுள்ள சிறுநீர் நிலை களிலிருந்தே திரண்டெழுந்தன என்று சொல்வதே பொருத்தமுடையதாகும்! பல நீர் ஆவி பெருமேகம்! என்பதே உண்மையாகும் என்று ஆசிரியர் கூறுகிருர்.

10. கோடை காலத்திலும் மரங்கள் சூடேருமைக் குக் காரணம் என்ன?

மரங்கள் வேரின் மூலம் உண்ட நீரைக் கொணர்ந்து இலைகளிலே தேக்கி வைத்துக் கொள்கின்றன. சூரிய னின் கதிர்கள் முழுதும் அந்நீரை ஆவியாக்குவதிலே செலவழிந்து விடுகின்றன. இலைகளைச் சூடு தாக்குவ தில்லை. அதனுலேயே கோடை காலத்திலும் மரங்கள் சூடேருமல் உள்ளன.

11. 'மர மேகங்கள்' என்பவை என்ன ? விளக்குக.

செடிகள் நீரை ஆவியாக்குவது பற்றிக் குறிப்பிடுகை யில் ஓர் அறிஞர் 454 கிராம் தானியத்தை விளைக்கும் ஒரு செடி குறைந்தது 104 கிராம் நீரை ஆவியாக மாற்றுகிறது என்று கூறுகிருர். சிறு செடிகளே இவ்வாறு எனின், எல்லையில்லாது பரந்து கிடக்கும் காடுகளைப்பற்றிக் கூற வேண்டுவதில்லை. பசுமரங்கள் நிறைந்த காட்டைப் பசுங்கடல் என்றே கூறலாம். மரங்கள் மேகத்திட மிருந்து மழையைப் பெறுவதுடன் மேகத்தையும் உண்டாக்குகின்றன. இவ்வாறு மரங்களின் துணை கொண்டு உற்பத்தியாகும் மேகங்களை 'மர மேகங்கள்' என்று கூறலாம்.

12. மழை மறுபிறப்பு எடுப்பது எவ்வாறு ?

நிலத்தில் பெய்த மழை நீர் எல்லாம் ஆருக வாய்க்கா லாக ஓடிக் கடலிற் கலக்கின்றது என்று நாம் நம்பு கிறோம். ஆனல், நிலத்தில் பெய்த மழையை மரங்கள் உட்கொண்டு தம் இலைகளின் வழியாக ஆவியாக்கி மேகமாக்கி மறுபிறப்பு எடுக்கச் செய்கின்றன. மழை நீர் கடலுக்குச் சென்றடைவதற்குள் குறைந்தது ஐந்து தடவைகளாவது இவ்வாறு மறுபிறப்பு எடுப்பதாக அறிஞர் கூறுகின்றனர்.

13. சதுப்பு நிலங்களை நன்னிலங்களாக மாற்றும் வழி யாது ?

காடுகளை வளர்ப்பதே சதுப்பு நிலங்களை நன்னிலங் களாக மாற்றுவதற்குரிய வழியாகும். மரங்கள் மண்ணில் உள்ள ஈரத்தை உறிஞ்சி இலைகள் மூலம் நீராவியாக்கி விடுவதால் நாளடைவில் சதுப்பு நிலங்கள் எல்லாம் நன்னிலங்கள் ஆகிவிடும்.

15. புலவர் போப்பையர் தொண்டு

(தவத்திரு. அருள் தங்கையா)

1. புலவர் போப்பையரிடம் இளமை முதல் நிலவிய நற்பண்புகள் யாவை ?

போப்பையர் தமது இளமை முதல் ஒவ்வொரு நொடிப் பொழுதையும் பயன்படுத்தப் பழகியிருந்தார். அவர் ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகத்தில் பேராசிரியராக இருந்தபோது ஓயாமல் படித்து இடைவிடாது உழைத்தார். மொழிகளையும், இலக்கியங்களையும் மட்டுமின்றிப் பிற கலைகளையும் பயின்ருர். முதல் நான்கு நூற்ருண்டுகளில் வாழ்ந்த மறைநூற்புலவர் எழுதியுள்ள நூல்களை யெல்லாம் பன்முறை பயின்ருர். பழங்கால நூல்களோடு தற்கால ஆராய்ச்சி நூல்களையும் பயின்ருர். செந்தமிழ் நூல்களில் அவர் உள்ளம் ஈடுபாடு கொண்டது. தமிழ் நூல்கள் கற்பதையே தனக்குரிய விளையாட்டாகக் கருதினுர். கிழவராகிய அவர் பல கலைகளையும் பயின்று கொண்டு இள மாணவராகவே சுறுசுறுப்புடன் தோன்றினுர். இவையே இளமை முதல் போப்பையரிடம் நிலவி வந்த நற்பண்புகளாம்.

2. புலவர் போப்பையர் எழுதிய ஆராய்ச்சி நூல்களால் தமிழ் மக்கள் எவ்வாறு எழுச்சியுற்றனர்?

அவர் எழுதிவெளியிட்ட நூல்களும், கட்டுரைகளும் தமிழின் பெருமையை உலகறியச் செய்தன. தமிழ் மொழிக்கு புத்துயிர் அளித்தன. அவரது நூல்களைப் படித்த தமிழர் தமிழின் தனிப் பண்பை யுணர்ந்து அதனை போற்றிக் கற்கத் தொடங்கினர். அவர் இந்நாட்டை விட்டுச்சென்ற பிறகும் தமிழ்த் தொண்டு செய்தார். மாணிக்கவாசகரைப் பற்றியும், தமிழ் நீதி நூல்களைப் பற்றியும், தமிழ் மொழியின் சிறப்பைப் பற்றியும், அவர் ஆராய்ந்து எழுதிய கட்டுரைகள் பல உண்மைகளைத் தமிழர்க்கு உணர்த்தின. தமிழர் அவருடைய ஆராய்ச்சி முறையைப் பின்பற்றித் தாமும் ஆராய்ச்சி செய்யத் தொடங்கினுர்கள்.

இவ்வாறு போப்பையரால் எழுதப்பட்ட ஆராய்ச்சி நூல்காளல் தமிழ் மக்கள் எழுச்சியுற்றனர்.

3. திருக்குறள் ஆங்கில மொழி பெயர்ப்பின் முகவுரையில் ஐயர் கூறிய கருத்துகள் யாவை?

"நான் தமிழ் பயிலத் தொடங்கிய நாளில் நினைத்த இந்த வேலை முடிவு பெற்றமைக்காக இறைவனுக்கு நன்றி செலுத்துகிறேன். பல்வேறு குலத்தினரது ஆளுகைக்குத் தமிழகம் உட்பட்டிருந்தாலும் பல மாறுதல்கட்கு ஆளாகி யிருந்தாலும் தமிழர் பழைய நல்லொழுக்கத்தைக் காத்து வருகின்றனர். பிற்காலத்தில் அவர்கட்கு நற்காலம் பிறக்கும் என்பது திண்ணம்.

ஆங்கில அன்பர்கள் மேனுட்டினின்றும் கற்கக்கூடிய வற்றையெல்லாம் கற்பித்தாலும் குறள் காட்டும் ஒழுக்க நெறியறிந்தவர்களிடம் அவர்கள் அறிந்துகொள்ள வேண்டியது நிரம்பவுள்ளது. தாழ்மை அன்பு, மன்னிப்பு ஆகிய கிறித்துவ நற்குண நலன்களைத் திருக்குறள் நன்கு வலியுறுத்திக் கூறுகிறது.

உயர்நீதியை கடைபிடித்தொழுகும் சிறந்த மக்கள் வாழும் நாட்டிலேதான் திருக்குறள் போன்ற ஒழுக்க நூல்கள் எழுதமுடியும்.

குறள் வடசொற் கலப்பில்லாத தூய தமிழில் ஆக்கப் பட்டுள்ளது. தமிழ் வடமொழியின் கிளையன்று. அது சொற்செல்வம் படைத்த தனிமொழி. தமிழ் இலக்கண நெறியும் தத்துவ உண்மைகளும் அடங்கிய தெளிவான பண்பட்ட மொழி. அஃது எவ்வகையிலும் வடமொழிக்கு இணையானது.

தமிழே தென்னிந்திய மொழிகட்குத் தாய். பழங் காலத் தூய தமிழுக்கு எடுத்துக்காட்டு.

4. நாலடியார் முகவுரையில் போப்பையர் கூறி யுள்ள கருத்துகள் யாவை?

"தமிழ்நாட்டில் எழுந்த பேரிலக்கியங்களை வெளி யிடுவதால் நலன் விளையும் என்று உறுதியாக நம்பு கிறேன். தமிழ்நாட்டு இளைஞர் ஊக்கமும் திறமையு முடையவராய் ஆங்கிலம் கற்கின்றனர். அவர்கள் வியக்கத் தகுந்த தங்களது தாய்மொழியைப் புறக்கணிப் பதைப் பார்த்து நான் வருந்துகிறேன். அவர்களுள் சிலராவது இத்தகைய பதிப்புகளை விரும்பிப் படித்துப் பயன் அடைவர் என்று நம்புகிறேன்."

" நாலடியாரைப் படிக்கும்போது பல அரிய உண்மைகள் வெளிப்படுகின்றன. தமிழ் மக்கள் ஒழுக்கத்தைக் கடைப்பிடிக்க வேண்டுமென்னும் விருப்பமுடையவர்கள்; தந்நலமற்ற அன்புள்ளவர்கள்; உயர் நோக்கமுள்ளவர்கள்; ஒழுக்க நெறி காட்டும் நூல்களை இயற்றுவதையே தங்கள் பொழுதுபோக்காகக் கொண்டார்கள். இத்தகைய மக்களுக்கு நற்காலம் தோன்றுமென்று நம்புகிறேன். இந்திய மக்களுள் முதன்மையானவர் தமிழரே. திருக்குறளும் நாலடியாரும் இம் முதன்மைப்பேற்றை நல்கிவிட்டன."

5. புலவர் போப்பையர் தமிழ்மொழிக்குச் செய்த தொண்டினைத் தொகுத்து எழுதுக.

புலவர் போப்பையர் தமிழ்நாட்டுக்கு வந்து தமிழ் பயிலத் தொடங்கினர். தமிழின் இலக்கண இலக்கியச் சிறப்புகள் அவரை வெகுவாகக் கவர்ந்தன. தமிழில் ஓர் அகராதி தொகுக்கவேண்டுமென்று முயன்று பல குறிப்புகளைத் திரட்டினர். அவரது இம்முயற்சி, பிறகு சென்னைப் பல்கலைக் கழகத்தார் வெளியிட்ட அகராதிக்குப் பெருந்துணை புரிந்தது. தமிழின் சிறப்பை விளக்கிப் பல ஆராய்ச்சிக் கட்டுரைகள் எழுதி வெளியிட்டார். அவை தமிழ் மக்களின் ஆர்வத்தைத் தூண்டித் தமிழ் மொழியினிடம் பற்றுக் கொள்ளச் செய்தன. திருக்குறளைக் கற்ற அவர் உலக இலக்கியங்களில் அதற்கு இணையானது வேறு இல்லை என்பதை உணர்ந்து அதனை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார். அதன் மூலம் குறளின் பெருமையை உலகறியச் செய்தார். தமிழின் வளத்தைப் பிறநாட்டவரும் உணர வழி கோலினர். திருக்குறள் மொழி பெயர்ப்பில் அவர் எழுதியுள்ள முன்னுரையில் காணப்படும் குறிப்புகள் தமிழ்மீது அவருக்கிருக்கும் பற்றையும் வெளிப்படுத்துகின்றன. திருக்குறளைப் போலவே நாலடியாரையும் மொழிபெயர்த்துள்ளார். அந்நூலின் முன்னுரையில் தமிழ் மக்களின் ஒழுக்கச் சிறப்பையும், தமிழர்தம் பண்பாட்டையும் விளக்கியுள்ளார்.

16. பணமும் சிறுசேமிப்பும்

(புலவர் நா. வேணுகோபாலர்)

1. பணத்தின் சிறப்பு பற்றி 20 வரிகளிற் கட்டுரை வரைக.

இவ்வுலக வாழ்விற்குப் பணம் இன்றியமையாத தொன்ருகும். "பணம் இல்லாதவன் பிணம்" எனக் கருதப்படுகிருன். "பணம் என்ருல் பிணமும் வாயைத் திறக்கும்" என்பது பழமொழி. "பணம் பாதாளம் மட்டும் பாயும்" என்பது மற்ருேர் பழமொழி. கல்லாதாரிடையே கூட வழங்கப்படும் இப்பழமொழிகள் பணம் இவ்வுலக வாழ்வில் எத்தகைய சிறந்த இடத்தைப் பெற்றுள்ளது என்பதை உணர்த்தும் சான்றுகளாகும்.

கைப்பொருள் மிகுந்திருக்குமாளுல் ஒருவன் கல்லாதவனுக இருந்தாலும் எல்லாரும் போற்றுவர் என்றும், அஃதின்றேல் கொண்ட மனேவியும் பெற்ற தாயும் கூட அவனே விரும்ப மாட்டாள் என்றும், அவன் வாய்ச்சொல்லுக்கு எவ்வித மதிப்பும் இல்லே என்றும் ஔவையார் கூறுகிருர்.

மேலும் தெய்வப் புலவர் திருவள்ளுவர், "பொருளில் லார்க்கு இவ்வுலகம் இல்லே" எனக் கூறியுள்ளார். இவ் வுலக வாழ்விற்குப் பொருள் இன்றியமையாததொன்று என்பது அவரது கருத்து.

மேலும், இல்வாழ்வை மேற்கொள்ளும் தலேமகன் அந்த இல்வாழ்வு செவ்வனே நடைபெறுதற்கும் இல் வாழ்வானுக்குரிய அறங்களேக் கடைப்பிடித்தற்கும் ஏது வாகக் கடல் கடந்தாவது பொருளீட்டச் செல்வது மரபு என்பதை இலக்கியங்கள் இயம்புகின்றன. இக்கருத்தினே ஒட்டி எழுந்ததே, "திரைகடலோடியும் திரவியம் தேடு" என்னும் முது மொழி. எவ்வகையில் முயன்றேனும் அற வழியில் பொருளீட்ட வேண்டுமென்றும், பொருளேப் பிற்காலத்திற்காக ஓரளவு சேமித்து வைக்கவேண்டும் என்றும் நமது அற நூல்கள் அழகுபடக் கூறுகின்றன.

இவ்வாருக, பணம் நமது வாழ்வில் இரண்டறக் கலந்த சிறப்பினேயுடையது என்பதை நாம் அறிகிருேம்.

2. பணத்தின் வரலாற்றை 20 வரிகளில் சுருக்கி வரைக.

மிகப்பழைய காலத்தில் பணம் என்ற ஒரு கருவி இல்லை. மக்கள் தங்களிடம் மிகுந்திருக்கும் பொருளைத் தேவையானவர்க்குக் கொடுத்து அவர்களிடமிருந்து தமக்குத் தேவையானவற்றைப் பெற்றுக் கொள்ளும் பண்டமாற்று முறை வழக்கத்திலிருந்தது.

தமக்குத் தேவையான பொருள் பிறரிடம் தேவைக் கதிகமாகவும் தம்மிடம் மிகுந்துள்ள பொருள் அவருக்குத் தேவையாகவும் இருக்கக் கூடிய வகையில் பண்ட மாற்றுச் செய்து கொள்வதற்கு ஏற்றவர்களைத் தேடிக் களைத்தல் மிகவும் இடர் தருவதாக இருந்தது. தாம் விரும்பிய எல்லாப் பொருள்களையும் தம்மிடம் மிகுதியாக வுள்ள பொருள் கொடுத்துப் பெறுவதில் மிகுந்த துன் பங்கள் இருந்தன. அவற்றால் தாம் விரும்பும் பொருளை எல்லாம் விரும்பியபடியே பெறமுடியாமல் போயிற்று. ஒரு பொருளையே பலரும் விரும்பும் போது அப்பொருள் பலருக்கும் கிடைக்காமற் போயிற்று.

மேலும், தம்மிடமுள்ள பொருள்களைப் பெற்றுக் கொண்டு, பிறரிடமுள்ள தனக்குத் தேவையான பொருள் களைப் பெறுதற்குப் பொருள்களைச் சுமந்த படியே பல இடங்கட்கும் அலைய நேர்ந்தது. மேலும் பொருள்கட்கு ஒரு நிலையான விலைமதிப்பும் இருந்ததில்லை.

எனவே, மேற்கண்ட தீமைகளை அகற்றுதற்காக உலோகங்களாலான நாணயங்களை ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு எடுத்துச் செல்வதிலும் பாதுகாத்து வைப்பதிலும் கையாள்வதிலும் பல துன்பங்கள் எழுந்த மையால், அரசாங்கம் உலோக நாணயங்கட்குப் பதிலாக அச்சடித்த காகிதப் பணத்தை வெளியிடலாயிற்று.

இதுவே பணம் தோன்றி வளர்ந்த வரலாறாகும்.

3. பண்டமாற்று என்பது என்ன ?

தன்னிடம் மிகுந்திருக்கும் பொருளைக் கொடுத்து மற்றவரிடம் மிகுந்துள்ள, தனக்குத் தேவையான பொருளைப் பெற்றுக் கொள்ளும் முறைக்குப் பண்டமாற்று எனப் பெயர். பண்டங்களை மாற்றிக் கொள்வதால் இதற்குப் பண்டமாற்று எனப் பெயர் வந்தது.

4. பண்டமாற்றில் உள்ள குறைகள் யாவை?

தன்னிடம் மிகுந்துள்ள பொருளைக் கொடுத்துத் தனக்குத் தேவையான பொருளைப் பிறரிடமிருந்து பெற வேண்டுமாயின் தன்னிடம் மிகுந்த பொருளை விரும்பும் ஒருவரையும், தனக்குத் தேவையான பொருளை வைத்திருக்கும் ஒருவரையும் தேடி அலைய நேரும். விரும்புகின்ற எல்லாப் பொருளையும் இம்முறையில் வாங்குவது அரிது. பொருளுக்கு மதிப்பும் ஒரே சீராக இராது. இவ்வாறாகப் பண்டமாற்று முறையில் பல குறைகள் உள்ளன.

5. காகிதப் பணம் தோன்றக் காரணம் என்ன?

பணம் உலோக நாணயமாக இருந்தால் இவற்றை எண்ணுவதும், பாதுகாப்பதும் ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு எடுத்துச் செல்வதும் கடினமாகும். எனவே, உலோக நாணயங்கட்குப் பதில் காகிதப் பணம் தோன்றலாயிற்று.

6. காசோலை (Cheque)—குறிப்பெழுதுக

காசோலை என்பது வங்கியில் பணம் சேர்த்திருப்பவர்க்கு உறுதிமொழியளிக்கும் காகிதமாகும். பணம் சேர்த்திருப்பவர் கையெழுத்து இருந்தால்தான் காசோலை செல்லும். அது அவர் சேர்த்திருக்கும் தொகைக்குமேல் இருக்குமானல் செல்லாது.

7. பணம் செலவிடும் முறை பற்றி 20 வரிகளில் எழுதுக.

வறியவராயினும் செல்வராயினும் பணத்தைச் செலவிடும்போது மிகவும் கவனமாயிருக்கவேண்டும். வருவாய்க்குமேல் செலவிடுவாராயின் பின்னல் வரும் தேவைகட்குக் கடன் வாங்க நேரும். கடன் வாங்குவது கொடிய பழக்கம். இப்பழக்கத்திற்கு அடிமையாகும் ஒருவர் அதனின்றும் மீள்வது அரிது. கடன் வாங்கும் பழக்கத்தால் உறவினர், நண்பர் ஆகியவர்களிடமும் நன்மதிப்பை இழக்க நேரும்.

குடும்பத்திலுள்ள ஒவ்வொருவரும் தங்கள் வருமானத்தை மனத்துட் கொண்டு வீட்டு வாடகை, உணவு, உடை, பள்ளிக்கட்டணம், பிற இன்றியமையாச் செலவுகட்கு எவ்வளவு செலவு செய்யலாம் என்று திட்டமிட்டு வருவாயில் ஒரு பகுதியைப் பிற்காலத்திற் காகச் சேர்த்து வைக்கவேண்டும்.

வருவாய்க்கு அதிகமாகச் செலவு ஏற்படும் என்று தோன்றினல் செலவுகளைக் குறைக்கத் திட்டமிட வேண்டும். பிறர் பாராட்டுவதற்காக, வீண் பெருமை பேசி ஆடம்பரமாகச் செலவு செய்தால் குடும்பம் சீரழிந்து போகும். மிகுத்து வைக்கும் பழக்கத்தை மேற் கொண்டால் அது நமது செலவுகளைக் கட்டுப் படுத்த வழிகோலும்.

இவ்வாறு நிகழ் காலத்திற்காகவும் எதிர் காலத்திற் காகவும் வரவையும் செலவையும் சீர்தூக்கி ஏற்றவாறு திட்டமிட்டுச் செலவு செய்யவேண்டும்.

8. சிறு சேமிப்பு என்பது பற்றி 20 வரிகளில் கட்டுரை வரைக.

'சிறுதுளிப் பெரு வெள்ளம்' என்பதுநமது நாட்டிலே வழங்கிவரும் பழமொழியாகும். நமது வருவாயில் ஒரு சிறு பகுதியைச் சிறிது சிறிதாகச் சேமித்துவைக்கத் தொடங்கினல் அது பிற்காலத்தில் ஒரு பெருந்தொகை யாக வளர்வதைக் காணலாம்.

மிகுந்த பணத்தைக் கையிலேயே வைத்திருக்கலாம் என்று எண்ணினல் அந்த எண்ணம் கைகூடாது. பிறகு பார்த்துக் கொள்ளலாம் என்ற எண்ணத்தில் அதனைச் செலவிட நேரும். ஆனல் அரசினரால் ஆங்காங்கே இந்த நோக்கத்திற்காக ஏற்படுத்தப்பட்டிருக்கும் நிலையங் களில் சேமித்து வைப்பதால் ஒழுங்காகத் தொகை வளர் வதோடு அதற்குரிய வட்டியும் அதனேடு சேர்ந்து தொகை மேலும் பெருகும்.

சிறு சேமிப்பினல் சேமிப்பவர் பயனடைவதோடு பலராலும் சேமிக்கப்படும் சிறு சிறு தொகை பெருந் தொகையாகி அது நாட்டின் முன்னேற்றத் திட்டங்கட்குப்

பயன்படும். தன்னை உயர்த்திக் கொள்வதோடு தன்னைச் சார்ந்த சமூகத்தையும் உயர்த்தும் பெருமை சேமிப்பவர்க்குக் கிட்டுகிறது.

அஞ்சலகச் சேமிப்பு நிலையங்களிலோ, வங்கிகளிலோ சேமிப்புக் கணக்கை ஏற்படுத்தி ஒழுங்காகச் சேமிக்க ஆரம்பித்தால் தனக்கு நன்மை செய்து கொள்வதுபோல் நாட்டிற்கும் நன்மை பயக்கக்கூடும்.

9. குறிப்பெழுதுக:—

(அ) 12 ஆண்டு தேசியப் பாதுகாப்புப் பத்திரம்:

இது எல்லா அஞ்சல் நிலையங்களிலும் கிடைக்கும். ரூ. 5 முதல் 100 வரை இவ்வகையில் பத்திரங்கள் உள்ளன. ஆண்டொன்றுக்கு 6% தனிவட்டியும் 4% கூட்டு வட்டியும் கிடைக்கும், பத்து ரூபாய்ப் பத்திரம் வாங்கினால் 12 ஆண்டுகட்குப் பிறகு மொத்தம் ரூ. 17-50 கிடைக்கும். இது எல்லா வயதினரும் வாங்கக் கூடியது.

(ஆ) கூட்டுக் காலச் சேமிப்புத் திட்டம்:

மாதந்தோறும் சேரும் சிறு தொகைகளை ஐந்தாண்டு, பத்தாண்டு பதினைந்தாண்டு என்ற கணக்குகளில் ஏதேனும் ஒன்றில் சேர்த்து வைக்கலாம். மாதம் ஒன்றுக்கு ரூ. 5 வீதம் கட்டுகின்ற ஒருவன் ஐந்தாண்டுக்குப் பின்னர் ரூ. 325 பெறுவான். இடையில் அவசரமாகப் பணம் தேவைப்பட்டால் சேர்ந்தபணத்தில் பாதியைக் கடனாகப் பெற்றுத் திரும்பச் செலுத்தலாம்.

(இ) தவணைப் பரிசுப் பத்திரம்:

ஐந்து, நூறு ரூபாய்ப் பத்திரங்களாக எல்லா அஞ்சல் நிலையங்களிலும் கிடைக்கும். இந்தப் பத்திரங்களை வாங்கியவர் பரிசுக்குரியவராவார். 5 ரூபாய்ப் பத்திரத்திற்கு ரூ. பதினைந்தாயிரம் முதற் பரிசாகவும் 100 ரூபாய்ப் பத்திரத்திற்கு ரூ. ஐம்பதாயிரம் முதற் பரிசாகவும் கிடைக்கும். இது தவிர ஐந்து ரூபாய்ப் பத்திரத்திற்கு 567 பரிசுகளும் 100 ரூபாய்ப் பத்திரத்திற்கு 242 பரிசுகளும் உள்ளன. பரிசு கிடைக்காவிட்டால் கட்டிய தொகை வட்டியுடன் கிடைக்கும்.

மனப்பாடச் செய்யுட்கள்

(அ) திருவருட்பா

எத்துணையும் பேதமுறா தெவ்வுயிரும்
 தம்முயிர்போல் எண்ணி, உள்ளே
ஒத்துரிமை உடையவராய் உவக்கின்றார்
 யாவர்?அவர் உளந்தான் சுத்த
சித்துருவாய் எம்பெருமான் நடம்புரியும்
 இடமெனநான் தெரிந்தேன்; அந்த
வித்தகர்தம் அடிக்கேவல் புரிந்திடஎன்
 சிந்தைமிக விழைந்த தாலோ.

(ஆ) தமிழ்த்தாய் வாழ்த்து

வைய மீன்றதொன் மக்கள் உளத்தினைக்
கையி னாலுரை காலம் இரிந்திடப்
பைய நாவை யசைத்த பழந்தமிழ்
ஐயை தாள்தலை கொண்டு பணிகுவாம்.

(இ) தமிழ் நாடு

'யாதும்ஊர் எவரும்கேளிர்,' என்றுணர்ந்த நாடு
 'எவ்வுயிர்க்கும் அன்புசெய்க' என்றிசைத்த நாடு
'ஓதுகுலந் தெய்வம்ஒன்றே' என்றுகொண்ட நாடு
 'ஒக்கும்உயிர் பிறப்பு'என்னும் ஒருமைகொண்ட நாடு
'நாதன்அன்பு நீதிஇன்பு நட்பு'என்ற நாடு
 'நாமார்க்கும் குடியல்லோம்' என்றிருந்த நாடு
தீதில்லா மொழிவளர்க்கத் தெளிவுபெற்ற நாடு
 செந்தண்மை விருந்தளிக்குந் தெய்வத்தமிழ் நாடே.

(ஆ) சிறுபஞ்ச மூலம்

நல்ல வெளிப்படுத்துத் தீய மறந்தொழிந்து
ஒல்லை உயிர்க்கூற்றங் கோலாகி—ஒல்லுமெனின்
மாயம் பிறர்பொருட்கண் மாற்றுக மானத்தான்
ஆயி னழிக வறிவு.

நாணிலான் சால்பும் நடையிலான் நன்னேன்பும்
ஊணிலான் செய்யும் உதாரதையும்—ஏணிலான்
சேவகமும் செந்தமிழ் தேற்முன் கவிசெயலும்
நாவகமே நாடின் நகை.

(இ) ஏலாதி

பெருமை புகழறம் பேணுமை சீற்றம்
அருமைநூல் சார்பில்லார் சாரின்—இருமைக்கும்
பாவம் பழிபகை சாக்காடே கேடச்சம்
சாபம்போற் சாரும் சலித்து.

(ஈ) நான்மணிக்கடிகை

வைததனுல் ஆகும் வசையே; வணக்கமது
செய்ததனுல் ஆகும் செழுங்கிளை ;—செய்த
பொருளினுல் ஆகுமாம் போகம்; நெகிழ்ந்த
அருளினுல் ஆகும் அறம்.

(இ) வில்லி பாரதம்

புலர்ந்தன கங்குற் போதும்
பொழிதரு பனியும்; சேர
மலர்ந்தன மனமும் கண்ணும்;
வயங்கின திசையும் பாரும்;
அலர்ந்தன தடமும் காவும்;
ஆர்த்தன புள்ளும் மாவும்;
கலந்தன குருகும் பேடும்;
கலித்தன முரசும் சங்கும்.

'சிலைஇது; சிலீமு கங்கள்
இவை;கடுந் திரிகை வேகத்து
இலைமுகத் துழலு கின்ற
எந்திரத் திகிரி நாப்பண்
நிலையிலா இலக்கும் அஃதே;
நெஞ்சுற யாவன் எய்தான்?
கலைவலீர்! அவற்கே இந்தக்
கன்னியும் உரியள்,' என்றான்.

(ஈ) பெரிய புராணம்

'நின்றவூர்ப் பூச லன்பன்
நெடிதுநாள் நினைந்து செய்த
நன்றுநீ டால யத்து
நாளைநாம் புகுவோம்; நீயிங்
கொன்றிய செயலை நாளை
யொழிந்துபின் கொள்வாய்,' என்று
கொன்றைவார் சடையார் தொண்டர்
கோயில்கொண் டருளப் போந்தார்.

(உ) பஞ்சாலி சபதம்

இங்கிது கேட்டசு யோதனன்—'மிக
இங்கிதஞ் சொல்லினை மாமனே!'—என்று
சங்கிலிப் பொன்னின் மணியிட்ட—ஒளித்
தாமஞ் சகுனிக்குச் சூட்டினான்;—பின்னர்
'எங்கும் புவிமிசை யுன்னைப்போல்—எனக்கு
இல்லை யினியது சொல்லுவோர்'—என்று
பொங்கு முவகையின் மார்புறக்—கட்டிப்
பூரித்து விம்மித் தழுவினான்.

(அ) வருணனை

குளிரும் தென்றல் அசைந்தசைந்து
குலவி மகிழ்ந்து தவழ்ந்திடவே,
மிளிரும் உதயச் செவ்வண்ணம்
விரைந்து கிழக்கில் பெருகிடவே
ஒளிரும் சிறைமென் புள்ளினங்கள்
ஒன்ருய் இசைகூள் பாடிடவே,
தளிரும் இலையும் வளர்காவில்
தண்ணூர் மலர்கள் கண்விழிக்கும்.

தண்டலை மயில்கள் ஆடத்
தாமரை விளக்கந் தாங்கக்
கொண்டல்கள் முழவின் ஏங்கக்,
குவளைகண் விழித்து நோக்கத்
தெண்டிரை எழினி காட்டத்
தேம்பிழி மகர யாழின்
வண்டுகள் இனிது பாட
மருதம் வீற்றிருக்கு மாதோ!

பொங்கரில் துழைந்து வாவி
புகுந்துபங் கயந்து மூாவிப்
பைங்கடி மயிலை முல்லை
மல்லிகைப் பந்தர் தாவிக்
கொங்கலர் மணங்கூட் டுண்டு
குளிர்ந்துமெல் லென்று தென்றல்
அங்கங்கே கலைகள் தேரும்
அறிவன் போல் இயங்கு மன்றே.

பொன்னொளி மழையைத் தோப்புப்
புதரெல்லாம் இறைத்தாய்; ஆங்கே
உன்னொளிக் காக ஏங்கும்
உயிர்க்கெலாம் ஊக்கம் சேர்த்தாய்.
செந்நெலைப் பொன்னெல் லாக்கிச்
சிறுபுல்லின் நுனிசி ரித்தாய்;
என்னென்பேன் ஒளியின் ஊற்றே!
நீயின்றேல் உலகம் உண்டோ?

(ஈ) சிற்றிலக்கியம்

திருவேங் கடத்து நிலைபெற்று நின்றன, சிற்றனையால்
தருவேங் கடத்துத் தரைமேல் நடந்தன; தாழ்பிறப்பின்
உருவேங் கடத்துக் குளத்தே யிருந்தன ; உற்றழைக்க
'வருவேங் கடத்தும்பி யஞ்சல்!' என் றோடிய மால்கழலே.

சோறு மணக்கும் மடங்களெல்லாம்;
    தூய்மை மணக்கும் சிந்தையெலாம்;
சுவண மணக்கும் ஆடையெலாம்;
    தொங்கல் மணக்கும் தோள்களெலாம்;
சேறு மணக்கும் கழனியெலாம்;
    செல்வ மணக்கும் மாடமெலாம்;
தென்றல் மணக்கும் மேடையெலாம்;
    தெய்வ மணக்கும் செய்யுளெலாம்;
நீறு மணக்கும் நெற்றியெலாம்;
    நெய்யே மணக்கும் கறிகளெலாம்;
நெருப்பு மணக்கும் குண்டமெலாம்;
    நேயம் மணக்கும் வீதியெலாம்;
சாறு மணக்கும் குன்றத்தூர்த்
    தலைவா! தாலோ தாலேலோ!
சகலா கமபண் டித! தெய்வச்
    சைவா! தாலோ தாலேலோ!

(உ) வழிபாட்டுப் பாடல்கள்

மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை இணையடி நீழலே.

வானாகி மண்ணாகி வளியாகி ஒளியாகி
ஊனாகி உயிராகி உண்மையுமாய் இன்மையுமாய்க்
கோனாகி யானெனதென் றவரவரைக் கூத்தாட்டு
வானாகி நின்றாயை என்சொல்லி வாழ்த்துவனே.

ஊரிலேன் காணி யில்லை உறவுமற் றொருவர் இல்லை
பாரில்நின் பாத மூலம் பற்றிலேன் பரம மூர்த்தி !
காரொளி வண்ண னே !என் கண்ணனே ! கதறு
[கின்றேன் ;
ஆருளர் களைகண் அம்மா ! அரங்கமா நகரு ளானே

வானமும் பூமியும் மகிழ்கொண் டோங்கிட
ஞானமும் நன்மையும் நனிசி றந்திட
ஊனமும் பாவமும் ஒழியத் தோன்றிய
தீனரட் சகன்பதம் சிந்தித் தேத்துவாம்.

வானவர்க்கும் நின்னுடைய தூதருக்கும்
மறைதெளிந்த மற்றை யோர்க்கும்
ஊனுடைய பல்லுயிர்க்கும் உணர்வரிய
பேரொளியாய் ஓங்கி நின்ற
ஞானமெனும் பரம்பொருளே ! அழியாத
பெரும்பேறே ! நடுநின் றென்றும்
ஊனமற விளையாடி எவ்வி டத்தும்
எந்நாளும் உறையும் கோவே !

அச்சிட்டோர் : மத்திய கூட்டுறவு அச்சகம்
1/17, மவுண்ட் ரோடு, சென்னை-2

புலவர் அ. இராமலிங்கம் அவர்களால்

எழுதப்பெற்ற கீழ்க்கண்ட நூல்கள் எங்களிடம் கிடைக்கும்

தங்கத் தமிழ்த் துணைவன்

(உயர் வகுப்புகளுக்குரியது)

சிறப்பாக பதினோராம் வகுப்பு தமிழ் இரண்டாம் தாளுக்கு மிகவும் பயனுடையது.

தங்கத் தமிழ் வினாவிடை

(பத்தாம் வகுப்பிற்குரியது)

(ஆ)

தங்கத் தமிழ் வினாவிடை

(ஒன்பதாம் வகுப்பிற்குரியது)

(ஆ)

நக்கீரன் பதிப்பகம்,
15-A, பெருமாள் கோயில் தெரு, சென்னை-26.

பி. டி. பெல் அண்டு கோ.,
7, சுங்குராம செட்டித் தெரு, சென்னை-1.